

NITHRA®




சிரிக்க ரசிக்க

ஜோக்ஸ்

மகிழ்ச்சியை பகிர்வோம்

PDF வடிவில்..!!





www.nithrabooks.com | books@nithra.mobi | Cell: 98659 24040

Copyright is reserved to the publisher, therefore the person who will try to imitate or try to print this book illegally or without the prior written permission of this publisher in any form, will be responsible for the loss and may be punished for compensation under copyright act.

இந்தப் புத்தகத்தைப் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி
மறுபதிப்பு செய்வதோ, அச்சேற்றுவதோ, நகல் எடுப்பதோ
கூடாது. மீறினால் காப்பிரைட் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

நூலின் பெயர் : **சிரிக்க ரசிக்க ஜோக்ஸ்**

பக்கங்கள் : 142

விலை : ரூ. 100

பதிப்பு : 2020

உரிமை : பதிப்பகத்தாருக்கே

In the compilation of this book all possible precautions have been taken to ensure that the informations provided is correct. Yet the publisher / authors will nto be held responsible for any printing errors or damage resulting from any inadvertent omission or inaccuracies in this book. However suggestions for the improvement of this book (Including printing errors, ommissions, etc. if any) are welcome and these will be incorporated in the subsequent editions of this book.

Published by : **P. Gokulanathan, Nithra Publications,** AV Plaza 3rd & 4th Floor, South Car Street, Tiruchengode - 637211.

சிரித்து மகிழ்ந்திடு

- ஆசிரியர் மாணவர் ஜோக்ஸ்
- கணவன் மனைவி ஜோக்ஸ்
- அதிரடி ஜோக்ஸ்
- டாக்டர் பேஷண்ட் ஜோக்ஸ்
- சர்தார்ஜி ஜோக்ஸ்
- கடி ஜோக்ஸ்
- சினிமா ஜோக்ஸ்
- மொக்க ஜோக்ஸ்
- பஞ்ச் ஜோக்ஸ்
- காமெடி ஜோக்ஸ்

ஆசிரியர் மாணவர் ஜோக்ஸ்

1. **ஆசிரியர்:** புத்தர் சொன்னது போல் நாம் நமது ஐம்புலன்களை அடக்கினால் என்ன ஆகும்?

மாணவன்: ஆம்புலன்ஸ் வரும் சார்..

2. **ஆசிரியர்:** மாணவர்களே, எறும்பு பெரிசா? யானை பெரிசா?

மாணவன்: அப்படியெல்லாம் சும்மா சொல்ல முடியாது மேடம், பிறந்த தேதி வேணும்.

3. **ஆசிரியர்:** பாபு, எங்கிருந்து எதுவரை முகலாயர்கள் ஆண்டார்கள்?
பாபு: 16ம் பக்கத்திலிருந்து 25ம் பக்கம் வரைக்கும் ஐயா!
ஆசிரியர்: ????

4. **ஆசிரியர்:** இந்தக் கணக்கை முட்டாள் கூட ஈஸியா செய்திடுவான்.
மாணவன்: அது தான் சார் நீங்க ஈஸியா பண்ணிடீங்க!
ஆசிரியர்: ????

5. **ஆசிரியர்:** ஒரு மனிதன் உயர வேண்டுமெனில் என்ன செய்ய வேண்டும்?
மாணவன்: அந்த மனிதன் ஹை ஹீல்ஸ் செருப்பு போடணும் சார்!
ஆசிரியர்: ????

6. **மாணவன்:** கடவுளே, எப்படியாவது நியூயார்க்க இந்திய தலைநகரமா மாத்திரு.
ஆசிரியர்: ஏன்டா அப்படி வேண்டுறே?
மாணவன்: ஏன்னா நான் அப்படித்தான் பரிட்சையில எழுதியிருக்கேன் அதான்?
ஆசிரியர்: ????

7. **ஆசிரியர்:** உனக்கு தமிழ் டீச்சரை பிடிக்குமா... இங்கிலீஷ் டீச்சரை பிடிக்குமா?
மாணவன்: எனக்கு வீட்டுக்கு போற பெல் அடிக்கிற தாத்தாவைத்தான் பிடிக்கும் !
ஆசிரியர்: ?????

8. **ஆசிரியர்:** 10ஆம் நூற்றாண்டில் உலகம் எப்படி இருந்தது?
மாணவி: அப்பவும் உலகம் உருண்டையாதான் இருந்தது ஆசிரியர் !
ஆசிரியர்: ??????????

9. **ஆசிரியர்:** ஏண்டா Home Work பண்ணல..?
மாணவன்: சார் வீட்டு வேலை எல்லாம் எங்க அப்பாதான் செய்வாரு..!

10. **ஆசிரியர்:** பசங்களா! நாம உயிர் வாழறதுக்கு ரொம்பத் தேவையான ஆக்ஸிஜனை 1773-ல தான் கண்டுபிடிச்சாங்க.
மாணவன்: நல்லவேளை ஆசிரியர்! நான் அதுக்கப்புறம் பிறந்தேன். முன்னாடி பிறந்திருந்தா ஆக்ஸிஜன் இல்லாம செத்துப் போயிருப்பேன்.
ஆசிரியர்:????????

11. **ஆசிரியர்:** 10 பேர் சேர்ந்து ஒரு கட்டிடத்தை 20 நாள்-ல கட்டறாங்க. அதே கட்டிடத்தை 20 பேர் சேர்ந்து கட்டினா, எத்தனை நாள்-ல கட்டுவாங்க?
மாணவன்: ஏற்கனவே கட்டின கட்டிடத்தை ஏன் சார் மறுபடியும் கட்டணும்?
ஆசிரியர்: ???????

12. **ஆசிரியர்:** ஏன்டா நாய் படம் வரைஞ்சுட்டு வாய் மட்டும் வரையாம வச்சு இருக்க?
மாணவன்: சார்.. அது வாயில்லா பிராணி சார்!
ஆசிரியர்: ??????

13. **ஆசிரியர்**: தாமஸ் ஆல்வா எடிசன் பல புதிய கண்டுபிடிப்புக்களைக் கண்டுபிடிக்காமலிருந்தால் என்னவாயிருக்கும்?
மாணவன்: வேற ஒருத்தர் கண்டுபிடிச்சிருப்பாரு!

14. **ஆசிரியர்:** தானத்தில் பெரிய தானம் எதுடா?
மாணவன்: மைதானம் சார்!
ஆசிரியர்: ????????

15. **ஆசிரியர்:** பொய் சொல்லக்கூடாது, பிறர் பொருள் மேல் ஆசை வைக்கக் கூடாது, பிறர் மனம் நோகப் பேசக் கூடாது.
மாணவன்: இந்த உலகத்திலேயே வாழக் கூடாதுன்னு சொல்லிடுங்க சார்...
ஆசிரியர்: ???????

16. **மாணவன்:** Sir எந்த மாதத்தில் 28 நாட்கள் வருகின்றது?
ஆசிரியர்: என்னிடமே கேள்வி கேட்கிறாயா? பிப்ரவரி மாதத்தில் தான்.
மாணவன்: இது கூட உங்களுக்கு தெரியல Sir எல்லா மாதத்திலும் 28 நாட்கள் வரும்.

17. **மாணவன்:** செய்யாத தப்புக்கு நீங்க தண்டனை தருவீங்களா சார்?
ஆசிரியர்: தரமாட்டேன். ஏன்?
மாணவன்: நான் HOME WORK செய்யலை சார்!

18. **வாத்தியார்:** ஏண்டா முழிக்கிற இந்த கேள்விக்கு முட்டா பய கூட பதில் சொல்லிருவாண்டா?

மாணவன்: அதான் சார் நா பதில் சொல்லல.

19. **ஆசிரியர்:** டேய் ராமு, இன்னும் பத்து நாளில் உலகம் அழியப்போகுதுன்னு வச்சுக்கோ. அப்போ கடவுள்கிட்டே என்ன வேண்டிக்குவே?

ராமு: அன்னிக்கு ஸ்கூல் லீவு விடணும்-னு வேண்டிக்குவேன் சார்..

ஆசிரியர்: ???????

20. **ஆசிரியர்:** கும்பகர்ணன் மாதக்கணக்கில் தூங்கினான். இது என்ன காலம்?

மாணவன்: அது கொசுவே இல்லாத காலம் சார்..!

21. **மாணவி 1:** நீ ஒரு லூசுடி

மாணவி 2: நீ தாண்டி லூசு

ஆசிரியர்: அங்க என்னங்கடி சத்தம் இங்க நா ஒருத்தி இருக்கறது உங்க கண்ணுக்கு தெரியலையா

22. **மாணவன் 1:** வர வர நம்ம டீச்சருக்கு ஞாபகமறதி அதிகமாயிட்டே வருது?

மாணவன் 2: எப்படிடா சொல்ற?

மாணவன் 1: திருக்குறளை நம்ம டீச்சரே போர்டுல எழுதிட்டு இதை எழுதியவர் யாரு? -ன்னு கேட்கறாங்க

23. **ஆசிரியர்:** இந்த Period முழுக்க நீ வெளியில நில்லு அப்போ தான் உனக்கு அறிவு வரும்.

மாணவன்: அப்போ நீங்க பாடம் சொல்லி கொடுத்து அறிவு வராதா?

ஆசிரியர்: ?????

24. **ஆசிரியர்:** ஏன்டா.... நான் வகுப்புக்குள் நுழையும் போது எல்லாரும் சிரிக்கிறீங்க?

மாணவன்: நீங்கதான சார், நேற்று சொன்னீங்க துன்பம் வரும் வேளையிலே சிரிங்கன்னு, அதான்.....

25. **ஆசிரியர்:** நீ எதுவரைக்கும் படிக்க ஆசைபடுர

மாணவன்: ஸ்கூல் பெல் அடிக்கர வரைக்கும் சார்

26. **ஆசிரியர்:** படிப்பைப் பயன்படுத்தாத தொழில் ஒன்று சொல்லுங்கோ?
மாணவன்: அதைக் கூடப் படிச்சால் தானே தெரிய வரும்!

27. **ஆசிரியர்:** இரண்டாம் உலகப்போர் தோன்ற என்ன காரணம் சொல்லு?
மாணவன்: முதல் உலகப் போர்ல நிறைய தப்பு செஞ்சுருப்பாங்க, அதையெல்லாம் திருத்தி அடுத்த தடவை இன்னும் நல்லா போரை நடத்தணும்னு முடிவு
ஆசிரியர்: ???

28. **ஆசிரியர்:** பறக்கும் தட்டை எங்கே பார்க்கலாம்?
மாணவன்: எங்க அப்பா, அம்மா சண்ட போடும் போது பார்க்கலாம் சார்

29. **ஆசிரியர்:** ஒரு தேர்வு எழுதுவதற்கான காகிதம் தயாரிக்க பதினைந்து மரங்கள் அழிக்கப்படுகின்றன. அதனால் நீங்கள் செய்ய வேண்டியது...
மாணவன்: இனி நாங்கள் பரீட்சையே எழுத மாட்டோம் சார்.. நீங்க கவலைப் படாதீங்க.

30. **ஆசிரியர்:** 1869-ல் என்ன நடந்தது?
மாணவன்: எனக்கு தெரியாது சார்.
ஆசிரியர்: மடையா! அந்த வருடம் தான் காந்திஜி பிறந்தார். சரி, அடுத்த கேள்வி! 1873-ல் என்ன நடந்தது?
மாணவன்: காந்திஜிக்கு நாலு வயசு சார்.

31. **ஆசிரியர்:** என்னப்பா... எக்ஸாம்க்கு ப்ளம்பரை கூட்டிக்கிட்டு வந்திருக்க?
மாணவன்: கொஸ்டீன் பேப்பர் லீக் ஆகுதுன்னு சொன்னங்க, அதான்!!

32. **ஆசிரியர்:** நான் தினமும் ஏழு கிலோ மீட்டர் நடந்து சென்று படித்து வந்தேன்...
மாணவன்: அப்பவே உங்களுக்கும் படிப்புக்கும் ரொம்ப தூரமா சார்...

33. **ஆசிரியர்:** ஏன்டா நான் வரும்போது மட்டும் கண்ணாடி போடுற?
மாணவன்: டாக்டர் தான் தலைவலி வரும்போது மட்டும் கண்ணாடி போட சொன்னார்!

34. **ஆசிரியர்:** கிணத்துல கல்லைப் போட்டா கல்லு மூழ்கிடும் ஏன்?
மாணவன்: ஏன்னா, அதுக்கு நீச்சல் தெரியாது சார்!

35. தேர்வின் கடைசி 30 நிமிடங்களுக்கு முன்னால்..

ஆசிரியர்: மாணவர்கள் listen 30 minutes more...

நண்பன் 1: வா மச்சான் கிளம்பலாம்...

நண்பன் 2: இரு மச்சான்.. 30 நிமிசத்துல மோர் கொடுபாங்களாம் குடிச்சிட்டு போகலாம்..

36. **ஆசிரியர்:** கோபால், உன்னுடைய அப்பா என்ன வேலை செய்கிறார்?
மாணவன்: எனக்கு அப்பவாக இருக்குறார் ஆசிரியர்.
ஆசிரியர்: ??????

37. **ஆசிரியர்:** அமெரிக்கா எங்கே உள்ளது.
மாணவன்: தெரியாது சார்.
ஆசிரியர்: பென்ஜின் மேல் ஏறி நில்லுடா.
மாணவன்: ஏறி நின்னா தெரியுமா சார்.

38. **ஆசிரியர்:** உன் பக்கத்தில தூங்கறவனை எழுப்பு
மாணவன்: தூங்க வைக்கிறது நீங்க, எழுப்புறது நானா? என்ன கொடுமை சார் இது?

39. **ஆசிரியர் 1:** எதுக்கு சார் அந்த பையன பெஞ்ச் மேல நிக்கவச்சு இருக்கீங்க?
ஆசிரியர் 2: கட்டபொம்மன தூக்குல போட்ட இடம் எதுன்னு கேட்டா கழுத்துன்னு சொல்றான்...

40. **ஆசிரியர்:** கணக்குப் பரீட்சைல எல்லாக் கேள்விக்கும் ஏணிப்படியை வரைஞ்சு வச்சிருக்கியே, ஏண்டா?
மாணவன்: கணக்குல ஸ்டெப்புக்குத்தான் மார்க்குன்னு நீங்கதானே சார் சொன்னீங்க!
ஆசிரியர்: ????????

41. **ஆசிரியர்:** உங்க பையன் ஆங்கிலத்தில படுவீக்கா இருக்கான் சார்.
தந்தை: தமிழிலே எப்படி இருக்கான்னு சொல்லுங்க சார்.
ஆசிரியர்: தங்கள் மகன் ஆங்கிலத்தில் மிகவும் வலுவிழந்து இருக்கின்றான், ஐயா...?

42. **ஆசிரியர்:** அக்கால ஆட்சி முறைக்கும், இக்கால ஆட்சி முறைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

மாணவி: அக்கால ஆட்சிமுறை கல்வெட்டு ஆட்சி. இக்கால ஆட்சிமுறை கட் - அவுட் ஆட்சி.

43. **இண்டர்வியூ அதிகாரி:** உங்களுக்கு MS அலுவலகம் தெரியுமா?

மாணவன்: நீங்கள் விலாசம் கொடுத்தால் நான் அங்கே போய் விடுவேன் அவரைப் பார்க்க?

44. **ஆசிரியர்:** ஏசு, கிருஷ்ணர், காந்தி அவர்களுக்குள் உள்ள ஒற்றுமை என்ன?

மாணவன்: மூவரும் அரசு விடுமுறை அன்று பிறந்தவர்கள்..

ஆசிரியர்: ??????????

45. **வாத்தியார்:** தென்னைமரத்தில இருந்து 6 இலையும், பனைமரத்தில இருந்து 6 இலையும் கீழே விழுது ரெண்டையும் கூட்டினால் என்ன வரும்?

மாணவன்: குப்பை தான் சார் வரும்.

46. **ஆசிரியர்:** இரண்டாம் புலிகேசி எப்போது முடிசூட்டிக் கொண்டார்..?

மாணவன்: முதலாம் புலிகேசி இறந்த பிறகு சார்..!

47. **வாத்தியார்:** என்னடா ஆறு மார்க் வாங்கிட்டு சிரிக்கிற, உனக்கு வெட்கமா இல்ல?

மாணவன்: நான் ஒன்னுமே எழுதல, அதுக்கு போய் ஆறு மார்க் போட்டு இருக்கீங்களே, உங்களுக்கு வெட்கமா இல்ல!

48. **ஆசிரியர் 1:** எதுக்கு பசங்க எல்லோரையும் வாசல்ல உக்காரவச்சு பரீட்சை எழுத வச்சிருகாங்க?

ஆசிரியர் 2: எண்ட்ரன்ஸ் எக்ஸாமாம் சார்?

49. **ஆசிரியர்:** கண்டெக்டரிடம் ஒரு ரூபாய் கொடுத்து 90 பைசாவிற்கு டிக்கெட் வாங்கினா மீதி உனக்கு எவ்வளவு தருவாரு?

மாணவன்: சில்லரை இல்லைனு சொல்லிடுவாறு?

50. **ஆசிரியர்:** உங்க வீட்டுல மொத்தமா எத்தனை பேரு?

மாணவன்: எங்க வீட்டுல மொத்தமா யாருமே இல்லைங்க எல்லோரும் ஒல்லி தான்.

51. **ஆசிரியர்:** பள்ளிக்கூடத்திற்கு கட் அடித்துவிட்டு சினிமாவுக்கு போனியாமே, நாளை உன் அப்பாவைக் கூப்பிட்டு வா...

மாணவன்: அவர் படம் பார்க்கலே சார்... கதையை நான் சொல்றேன்...

52. **ஆசிரியர்:** டேய் நல்லா படிச்சா என்னய மாதிரி ஆகலாம்....

மாணவன்: அதனால தான் படிக்கவே வெறுப்பா இருக்கு சார்...!

53. **ஆசிரியர்:** கணக்கு பரீட்சை எழுதசொன்ன ஏண்டா டான்ஸ் ஆடுறாய்?

மாணவன்: ஒவ்வொரு ஸ்டெப்புக்கும் மார்க் உண்டுன்னு நீங்கதானே சொன்னிங்க சார்.. அதான் ஆடுறேன்..

ஆசிரியர்: ????

54. **ஆசிரியர்:** ஏன்? என் கிளாசுக்கு கலர் கலரா நூல் வாங்கிட்டு வந்து வச்சிருக்க?

மாணவன்: நீங்கதானே சார் சொன்னீங்க? உங்க வீட்ல இருக்கிற நல்ல நூல்களை நாளைக்கு பள்ளிக்கு வரும்போது கொண்டு வாங்கன்னு.

ஆசிரியர்: ???

55. **ஆசிரியர்:** ஏம்மா! பள்ளிக்கூடத்துக்கு வரும்போது இப்படியா தலையை விரிச்சுப் போட்டுட்டு வர்றது?

மாணவி: நீங்கதான ஆசிரியர் நேத்திக்கு பூரா பின்னிடுவேன் பின்னிடுவேன்னு சொல்லிகிட்டே இருந்தீங்க ...

ஆசிரியர்: ???

56. **தலைமை ஆசிரியர்:** ஏன்டா தமிழ் ஆசிரியர் காலை புடிச்சி வாரி விட்டிங்க?

மாணவன்: அவர் தான் 'காலை வாருங்கள்'னு சொன்னார்...

57. **ஆசிரியர்:** வளவளவெனப் பேசி கழுத்தறுப்பவர்களை என்னவென்று சொல்வார்கள்?

மாணவர்கள்: (கோரஸாக) வாத்தியார்னு சொல்வோம் !!

ஆசிரியர்: ???????????????

58. **ஆசிரியர்:** கோபு நீ மட்டும் ஏன் ஹோம் வோர்க் பண்ணலே?
கோபு: சார் நான் ஹாஸ்டல்ல தான தங்கி இருக்கேன்.
ஆசிரியர்: ????????????????

59. **ஆசிரியர்:** நேத்திக்கு எதுவரைக்கும் பாடம் நடத்தினேன் சொல்லுங்க?
மாணவன்: பெல் அடிக்கிற வரைக்கும் ஆசிரியர் **...**
ஆசிரியர்: ????????????

60. **ஆசிரியர்:** ரவி தலையில் எறும்பு ஏறுதுன்னு, ஏண்டா என்கிட்டே சொல்ற?
மாணவன்: என் தலையில எதுவும் ஏறாதுன்னு நீங்கதானே ஆசிரியர் சொன்னீங்க?

61. **ஆசிரியர்:** ஏண்டா லேட்?
மாணவன்: சார், பஸ்ல அசந்து தூங்கி விட்டேன்!
ஆசிரியர்: ராஸ்கல்! கிளாசுக்கு வரதுக்குள்ள அப்படி என்ன அவசரம்?

62. **ஆசிரியர்:** நம்ம பள்ளியில் மொத்தம் 5 மாடிகள் இருக்கு. ஒவ்வொரு மாடிக்கும் 15 படிக்கட்டுகள் இருக்கு. ஐந்தாவது மாடிக்கு போகணும்னா எத்தனை படிக்கட்டுக்கள் ஏறணும்?
மாணவன்: எல்லா படிக்கட்டையும் தான் ஏறணும் சார்!
ஆசிரியர்: ????????????????

63. **ஆசிரியர்:** உன்கிட்ட நாய் பத்தி கட்டுரை எழுதிட்டு வரச்சொன்ன உன்னோட அண்ணன் எழுதினது மாதிரியே இருக்கே?
ஜானி: ரெண்டு பேரும் ஒரே நாய பத்தி தான் எழுதியிருக்கோம் ஆசிரியர் அதான்.
ஆசிரியர்: ????

64. **ஆசிரியர்:** வீட்டுப்பாடம் ஏன் எழுதலைன்னு கேட்டதுக்கு எதிர்த்துப் பேசறியே... ஏன்?
மாணவன்: நீங்கதானே சார் சொன்னீங்க, எந்த ஒரு பிரச்சனைன்னாலும் சோர்ந்து போயிடாம எதிர்த்துப் போராடணும்னு!
ஆசிரியர்: ????

65. **ஆசிரியர்:** உங்கப்பா என்ன வேலை பார்க்கறாரு.

பையன்: எங்கம்மா சொல்ற எல்லா வேலையையும் பாப்பாரு ஆசிரியர் .

ஆசிரியர்: ??????????????

66. **ஆசிரியர்:** நான் ஒன்னு சொல்லுவேன் எழுந்திருச்சு ஓடக்கூடாது.

மாணவர்கள்: ஓகே சொல்லுங்க?

ஆசிரியர்: பக்கத்து பெருமாள் கோவில்ல சுண்டல் போடுறாங்க.

மாணவர்கள்: ஹே... ஹே... ஓடுங்க?

67. **ஆசிரியர்:** பாபு கண்ணை மூடி சாமி கும்பிட்டியே... என்ன வேண்டிக்கிட்ட?

பாபு: இந்த பள்ளிக்கூடத்துல எல்லா வகுப்புகளுக்கும் நீங்களே டீச்சரா இருக்கணும்னு வேண்டிக்கிட்டேன்.

ஆசிரியர்: உன்னை மாதிரி மாணவன் கிடைக்க நான் கொடுத்து வச்சிருக்கணும். சரி எதுக்காக இப்படி வேண்டிக்கிட்ட?

பாபு: நான் பெற்ற துன்பம் எல்லாரும் பெறட்டுமேன்னு தான்!

68. **ஆசிரியர்:** ஏன்டா உன் புத்தகங்களை எல்லாம் பக்கத்து டேபிள்ள வச்சிட்டு நீ வந்து இங்க உட்கார்ந்திருக்க?

மாணவன்: நீங்க தானே சார் பிரச்சனைகளை தள்ளி வைக்கணும்னு சொன்னீங்க?

ஆசிரியர்: ????????????????

69. **வாத்தியார்:** போய் சிலபஸ் வாங்கிட்டு வாங்கடா.

மாணவர்கள்: சார், தமிழ்நாடு பூரா கேட்டுட்டேன். சிட்டி பஸ் இருக்குன்றான், ஏர்பஸ் இருக்குன்றான், எக்ஸ்பிரஸ் பஸ் கூட இருக்குன்றான், ஆனா நீங்க கேட்ட சிலபஸ் மட்டும் இல்லைன்றான்.

வாத்தியார்: ??????

70. **ஆசிரியர்:** டேய் நான் இங்க நாய் மாதிரி கத்திட்டிருக்கேன். அங்க லாஸ்ட் பென்ச்ல எங்கடா ஒருத்தனை காணோம்.

மாணவன்: உங்களுக்குப் பிஸ்கட் வாங்கிட்டு வரப் போயிருக்கான் மிஸ்...

ஆசிரியர்: ?????

71. **ஆசிரியர்:** என்ன ஆச்சரியமா இருக்கு? நான் எப்ப வெளியே போயிட்டு வந்தாலும் தொண தொணனு சத்தம் போடுவீங்க.. இப்ப இவ்வளவு அமைதியா இருக்கீங்களே.

மாணவன்: நீங்க வெளியே போயிட்டு வரும்போது நாங்க அமைதியா இருந்தா வேலையை விட்டுடறேன்னு நேத்து சொன்னீங்களே. மறந்துட்டீங்களா சார்?

ஆசிரியர்: ???????????

72. **வாத்தியார்:** இனிமே சிகரெட் குடிச்சுட்டு யாரும் கிளாசுக்கு வரக்கூடாது.

மாணவன்: அப்ப கிளாசுக்கு வந்துட்டு சிகரெட் குடிக்கலாமா சார்?

வாத்தியார்: ????????????????

73. **ஆசிரியர்:** சூரியன் மேற்கே மறையும். இது இறந்த காலமா? எதிர்காலமா?

மாணவன்: அய்யோ சார். சூரியன் மறைஞ்சா அது சாயங்காலம் சார்...

ஆசிரியர்: ????????????????

74. **மாணவி:** என்னது பரீட்சைக்கு முதல் நாள்தான் தயார் பண்ணுவியா...! போதுமா அது?

மாணவன்: பிட் தயார் பண்றதை ஒரு வாரத்துக்கு முந்தியா செய்ய முடியும்?

மாணவி: ????

75. **ஆசிரியர்:** உன் பேர் என்ன?

மாணவி: பொன்னி மிஸ்.

ஆசிரியர்: ஸ்வீட் நேம்.

மாணவி: ஸ்வீட் நேம் இல்ல மிஸ், ரைஸ் நேம்.

76. **ஆசிரியர்:** பசங்களா கேளுங்க எந்த உணவையுமே காச்சி சூடா வெச்சாத்தான் பாக்டீரியா தங்காது.

மாணவர்கள்: போங்க ஆசிரியர் அப்படி பார்த்த பூமியே பயங்கர சூடா தானா இருக்கு, எல்லா பாக்டீரியாவும் செத்து இருக்கனும்ல.

ஆசிரியர்: ????????????????

77. **ஆசிரியர்:** ரேடியோவை கண்டுபிடிச்சவர் MARCONI

மாணவன்: எங்கள் வீட்டிலையும் ஒரு ரேடியோ காணாமல் போச்சு சார். அவர் வந்து கண்டுபிடிச்சு கொடுப்பாரா?

ஆசிரியர்: ?????

78. **ஆசிரியர்:** பாடம் எல்லாம் முடிஞ்சிப் போச்சு.. ஏதாவது சந்தேகம் இருந்தா கேளுங்க.. எதுவா இருந்தாலும் தயங்காமக் கேளுங்க..

மாணவன்: சார் உங்க பொண்ணு பேரு என்ன சார்.

ஆசிரியர்: ???????????

79. **ஆசிரியர்:** நிலநடுக்கம் எப்ப வரும்?

மாணவன்: பூமிக்குக் குளிரும் போது வரும் ஆசிரியர்

ஆசிரியர்: ????

80. **மாணவி:** சீதா பேனாவை யாரோ தூக்கிட்டுப் போயிட்டாங்க ஆசிரியர்!

ஆசிரியர்: இராவணன் தான் தூக்கிட்டுப் போயிருப்பான்! அவன் ஏற்கனவே சீதாவைத் தூக்கிட்டுப் போன களவாணி!

மாணவி: ???????????

81. **ஆசிரியர்:** என்னடா ஓட்டப் பந்தயத்துக்கு வரும்போது கையில தீப்பந்தத்தோட வந்திருக்க?

மாணவன்: நீங்க தானே சார் சொன்னீங்க.. ஜெயிக்கணும்னா ஒரு பயர் வேணும்னு அதான் சார் கொண்டு வந்தேன்.

ஆசிரியர்: ??????????

82. **ஆசிரியர்:** இந்தப் பறவையோட காலைப் பார்த்து இது என்ன பறவைன்னு சொல்லு...

மாணவன்: தெரியலை சார்.!

ஆசிரியர்: இது தெரியலியா? நீயெல்லாம் உருப்படவா போற! உன் பேரு என்னடா?

மாணவன்: என் காலைப் பார்த்து நீங்களே சொல்லுங்க சார்..!!

ஆசிரியர்: ??????????

83. **ஆசிரியர்:** உலகம் ஒரு நாடக மேடை அதில் நாமெல்லாம் நடிகர்கள்!
மாணவன்: சார்.. அப்படின்னா எனக்கு ஜோடியா தமன்னாவைப் போடுங்க சார்...!
ஆசிரியர்: ???

84. **மாணவன்:** ஐயோ Question இவ்வளவு கஷ்டமா இருக்கே?
ஆசிரியர்: எரும அது ஹால் டிக்கெட் ! இந்தா Question Paper பிடி!
மாணவன்: ???????

85. **ஆசிரியர்:** எல்லா பணத்திலேயும் காந்தி ஏன் சிரிச்சுட்டே இருக்காரு?
மாணவன்: அழுதா பணமெல்லாம் நனைஞ்சு போயிடும் அதனாலதான்!
ஆசிரியர்: ????

86. **ஆசிரியர்:** ராமு, உன்னை வைரஸ் கிருமியோட படத்தை வரைஞ்சிட்டு வரச் சொன்னேனே, ஏன் நோட்ல வரைஞ்சிகிட்டு வல்ல...?
மாணவன்: ஆசிரியர் , நான் வரைஞ்சிருக்கேன். ஆனா, நீங்க மைக்ராஸ்கோப்புல பாத்தாதான் அது தெரியும்.
ஆசிரியர்: ???????

87. **ஆசிரியர்:** ஏண்டா ராமு! பாம்புன்னு எழுதச்சொன்னா பம்புன்னு எழுதியிருக்கயே?
ராமு: நீங்கதானே ஆசிரியர் பாம்புக்குக் கால் கிடையாதுன்னு சொன்னீங்க!
ஆசிரியர்: ????????

88. **ஆசிரியர்:** ஏசுபிரான் ஏன் தட்டுங்கள் திறக்கப்படும் என்றார்.
மாணவன்: ஏன்னா அந்த காலத்தில் எல்லாம் காலிங் பெல் கிடையாது. அதனாலதான் சார்
ஆசிரியர்: ????????

89. **ஆசிரியர்:** முட்டை போடுற நாலு ஜீவிகள் பேரு சொல்லு?
மாணவன்: அறிவியல் ஆசிரியர் கணக்கு ஆசிரியர் ஆங்கில ஆசிரியர் வரலாறு ஆசிரியர்.

90. **ஆசிரியர்:** 100 + 100 = 200 அப்படினா, 500 + 500 எவ்வளவு?
மாணவன்: ஆமா சார், எப்ப பார்த்தாலும் சின்ன கணக்க நீங்க போட்டுட்டு, பெரிய கணக்க, எங்கிட்ட கேளுங்க.

91. **ஆசிரியர்:** ஏண்டா திரு-திருன்னு முழிக்கறே?
மாணவன்: பின்னே, திருமதி திருமதின்னா சார் முழிக்க முடியும்?

92. **ஆசிரியர்:** மாணவர்களே, எறும்பு பெரிசா? யானை பெரிசா?
மாணவன்: அப்படியெல்லாம் சும்மா சொல்ல முடியாது மேடம், பிறந்த தேதி வேணும்.

93. **ஆசிரியர்**: இந்த உலகத்தை முதலில் சுத்தி வந்தது யார்?
மாணவன்: அத விடுங்க சார் ஊர் சுத்துன வெட்டி பயல பத்தி என்ன பேச்சு வேண்டி கிடக்கு?

94. **வாத்தியார்:** ஒரு நாட்டின் நல்ல குடிமகனுக்கு என்ன தேவை?
மாணவன்: ஊறுகாய் சார்.

95. **இண்டர்வியூவில் அதிகாரி:** என்னப்பா! நாற்காலியை எடுத்துக்கிட்டுப் போறே?
மாணவன்: நீங்கதானே சார், டேக் யுவர் சீட்னு சொன்னீங்க!

96. **ஆசிரியர்:** பரவாயில்லையே நாங்க எவ்வளவு அடிச்சும் உங்க பையனுக்கு ழ வரவே இல்லை. இன்னிக்கு கரெக்டா சொல்றானே. என்ன செஞ்சீங்க?
அம்மா: நீங்க எவ்வளவு அடிச்சும் வராத ழ அவன் தண்ணியடிச்சதும் தானா வந்துடுச்சு.

97. **ஆசிரியர்**: உனக்கு பிடித்த விலங்கு எது?
ஹரி: பூனை ஆசிரியர்
ஆசிரியர்: ஏன்?
ஹரி: பூனை குறுக்க வந்தா பாட்டி என்னை ஸ்கூலுக்கு அனுப்ப மாட்டாங்க. அதான்!

98. **ஆசிரியர்**: முரளியிடம் 4 ஆரஞ்சு இருக்கிறது. அவனது தம்பிக்கு 2 பழத்தை கொடுக்க சொல்லிட்டேன். மீதம் அவனிடம் எத்தனை பழம் இருக்கும்?
மாணவன்: 4.

ஆசிரியர்: எப்படி உனக்கு கணக்கே தெரியாதா?

மாணவன்: உங்களுக்கு முரளியை பற்றி தெரியாதா?

99. **ஆசிரியர்:** நீங்கள் எல்லாரும் நன்றாக படித்து நாட்டுக்கு நல்ல பேர் வாங்கித் தரணும்.

மாணவன்: ஏன் ஆசிரியர் இந்தியா என்கிற பேர் நல்லா இல்லையா...

ஆசிரியர்: ???????

கணவன் மனைவி ஜோக்ஸ்

1. **மனைவி:** ஏங்க, நான் சாம்பார்ல புளி போடறதுக்கு மறந்திட்டேன்... கொஞ்சம் adjust பண்ணிக்கோங்க..!

கணவன்: பரவாயில்லை, நீ சமைக்கப் போறேன்னு சொன்னதுமே ஏற்கனவே வயித்திலே புளிய கரைச்சிடுச்சி...!

மனைவி: ???

2. **மனைவி:** ஏங்க என் பிரசவ நேரத்தில உதவியா இருக்க எங்கம்மாவை வரவழைச்சிடட்டுமா?

கணவன்: வயசான காலத்தில அவங்களை ஏன் சிரமப்படுத்தறே, பேசாம உன் தங்கச்சியை வரவழைச்சிடு!

மனைவி: ???

3. **மனைவி:** எதுக்குங்க ஸ்பூனை பாதியா உடைச்சீங்க?

கணவன்: டாக்டர்தான் அரை ஸ்பூன் மருந்து சாப்பிடச் சொன்னாரு.

4. **மனைவி:** நான் பொங்கல் வெச்சதும் எங்கே கிளம்பிட்டீங்க..?

கணவன்: போய் கலெக்டர்கிட்ட நம்ம வீட்டை வெல்லம் (வெள்ளம்) பாதித்த பகுதியா அறிவிக்கணும்-னு ஒரு மனு தந்துட்டு வந்துடறேன்..!

மனைவி: ??????????

5. **மனைவி:** மாட்டுப் பொங்கல் அன்னைக்கு நம்ம மாட்டுக்கு என் கையால நானே பொங்கல் பண்ணி ஊட்டி விடணும்ங்க?

கணவன்: நமக்கு நல்லது செய்யற வாயில்லா ஜீவனுக்கு நீ செய்யற பதில் நன்றி இதுதானா?

மனைவி: ??????????

6. **கணவன்:** ஐயையோ! திடீரென நெஞ்சு வலிக்குதே..?

மனைவி: என்னங்க நீங்க! நம்ம வக்கீல் ஊர்ல இல்லாத நேரத்தில இப்படி சொல்றீங்க..!

7. **கணவன்:** உனக்குத்தான் 2 கண்ணும் நல்லா இருக்கே, ஒழுங்கா அரிசில இருந்து கல்லைப் பொறுக்க மாட்டியா?

மனைவி: உங்களுடைய 32 பல்லும் நல்லாதானே இருக்கு. 2,3 கல்லை கடிச்சு சாப்பிட முடியாதா?

கணவன்: ?????

8. **கணவன்:** உங்க அப்பா பெரிய ஒலிம்பிக் ரசிகரா இருக்கலாம். அதுக்காக தங்க நகைக்கு பதிலா வெங்கல நகை செஞ்சு போட்டா என்ன அர்த்தம்?

மனைவி: நீங்க எனக்கு மூணாவதா வந்த புருஷன்னு அர்த்தம்.

9. **கணவன்:** ஊரெங்கும் ஒரே காய்ச்சலா இருக்கு! குடிக்க வெந்நீர் கொடு!

மனைவி: ஏங்க இப்படி பயப்படுறீங்க? மூளைக் காய்ச்சல் தான் பரவுது! அது எப்படி உங்களுக்கு வரும்..

கணவன்: ????????

10. **கணவர்:** டாக்டர்... என் பொண்டாட்டி அவசரத்துல பெப்சின்னு நினைச்சிட்டு பெப்சி பாட்டில்ல இருந்த பெட்ரோல குடிச்சிட்டா.. என்ன பண்ணுறது டாக்டர்?

டாக்டர்: ஒரு மணி நேரத்துல 60 கிலோ மீட்டர் ஓட சொல்லுங்க, பெட்ரோல் காலியா போயிடும்..

கணவர்: ???

11. **மனைவி:** என்னங்க பாருங்க உங்க பையன் பாடப்புத்தகத்தை எப்படிக் குதறி வச்சிருக்கான்னு?

கணவன்: நான் தான் சொன்னேனே, அவன் படிப்புல புலின்னு.

மனைவி: ?????????

12. **மனைவி:** ஏங்க, அதான் நர்ஸ் சொன்னாங்கல்ல, இது ஒரு சின்ன ஆபரேஷன் தான், பயப்பட வேண்டாம்-னு, அப்புறம் ஏன் இப்படி நடுங்கறீங்க.

கணவர்: அடி அசடு, நர்ஸ் சொன்னது நம்மகிட்ட இல்லடி, டாக்டர்கிட்ட.

மனைவி: ????????

13. **மனைவி**: எங்கிட்ட சொல்லாம வேலைக்காரனுக்கு ஏன் உங்க சட்டைய கொடுத்தீங்க?

கணவன்: ஏன் உனக்கு சொல்லணும்?

மனைவி: நீங்கன்னு நெனச்சு, அவன் முதுகுல ஓங்கி அடிச்சுட்டேன்.

14. **மனைவி:** ஏங்க!.. புண்ணியம் செய்தவர்களை இங்கிலீஷ்ல எப்படி சொல்லுவாங்க??

கணவன்: Unmarried-னு சொல்லுவாங்க...

மனைவி: யோவ் நில்லுய்யா ஓடாத!!

15. **மனைவி:** நம்ம பையன் எங்க பணம் வைத்தாலும் எடுத்திட்டு போயிடறாங்க..

கணவன்: அவனுடைய காலேஜ் புத்தகத்தில் வை.. பத்திரமா இருக்கும்..

16. **மனைவி:** என்னங்க ஏன் அடிக்கடி சமையல் ரூம் பக்கம் போகிறீங்க??

கணவன்: டாக்டர் சுகர் இருக்கான்னு அடிக்கடி செக் பண்ணிக்க சொன்னார் அதான்..

மனைவி: ?????????

17. **மனைவி:** அன்பே.. இன்று நமது கல்யாண நாள். எப்படி கொண்டாடுவது?

கணவன்: 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்துவோம்..

மனைவி: ??????????

18. **மனைவி:** வர வர நீங்க இளைச்சிக்கிட்டே போறதா எங்கப்பா ரொம்ப வருத்தப்பட்டாருங்க....

கணவன்: நீ என்ன சொன்னே?

மனைவி: ஆபிஸ் வேலையும் பார்த்துட்டு, வீட்டு வேலையும் பார்த்தா அப்படித்தான் இருக்கும்-னு சொன்னேங்க.

19. **கணவர்:** காஃபி ரொம்ப ஸ்ட்ராங்கா இருக்கே.. என்ன போட்ட?

மனைவி: ஒரு ஸ்பூன் சிமெண்ட் போட்டேன்...

20. **மனைவி:** ஏங்க! நான் கார்ல போறப்ப நாலு அஞ்சு தடவை இந்த டிரைவர் ஆக்சிடென்ட் பண்ணப் பார்த்தான்! உடனே மாத்துங்க!

கணவன்: விடும்மா! இன்னும் ஒரே ஒரு சான்ஸ் கொடுத்துப் பார்ப்போம்!

21. **கணவன்:** வயசான என் அம்மா மேல உனக்கு மரியாதையே இல்ல

மனைவி: தயவு செஞ்சு அப்டி சொல்லாதீங்க. தினமும் மனசுக்குள்ளேயே உங்க அம்மா படத்துக்கு ஊதுபத்தி கொளுத்தி மாலையெல்லாம் போடறேனே.

22. **மனைவி:** உங்க அம்மாவுக்கு சப்பாத்தி போட்டா பிடிக்கல இட்லி தோசை போட்டா பிடிக்கல உப்புமா போட்டா பிடிக்கல. . .

கணவன்: வேற என்னதான் போட்ட?

மனைவி: பேசாம பட்டினி போட்டேன்

23. **மனைவி:** உங்க பிரண்ட் உங்ககிட்ட கடன் வாங்க வந்து இருக்கார் போலிருக்கு

கணவன்: எப்படி சொல்ற?

மனைவி: சர்க்கரை போடாத காபியை இப்படி புகழ்றாரே.

24. **கணவன்:** குழந்தை ஏன் அழறான் டாக்டர் ஊசி போட்டாரா?
மனைவி: இல்லே.... அவர்தான் சரியான குழந்தை டாக்டர் ஆச்சே இவன் சாப்பிட்டுகிட்டு இருந்த பிஸ்கட்டை அவர் பிடுங்கித் சாப்பிட்டாரு அதான்....
கணவன்: ???????

25. **மனைவி:** கல்யாணத்தை ஆயிரங்காலத்துப் பயிர்னுதானே சொல்லுவாங்க.. நீங்க என்ன இரண்டாயிரங் காலத்துப் பயிர்னு சொல்றீங்க?
கணவன்: ஹி.. ஹி.. நான் சொன்னது இரண்டாங் கல்யாணத்தை!!!

26. **கணவன்:** அரைமணி நேரமா நான் கரடியா கத்துறேன். நீ பதில் பேசலைன்னா என்ன அர்த்தம்?
மனைவி: எனக்கு கரடி பாசை புரியலேன்னு அர்த்தம்.

27. **கணவன்:** ஊருக்கு போய் சேர்ந்ததும் லெட்டர் போடு?
மனைவி: ஏங்க?

28. **கணவன்:** ஏண்டி எப்போ பார்த்தாலும் கோபமா எரிஞ்சு விழுற?
மனைவி: நீங்க தானே சொன்னீங்க! கோபப்படுறப்ப நான் ரொம்ப அழகா இருக்கேன்னு..!

29. **மனைவி:** ஒரு மணி நேரமா ரூம்ல எதையோ தேடிக்கிட்டு இருக்கீங்களே. பேசாமல் கண்ணாடியை போட்டுட்டு தேட வேண்டியது தானே?
கணவன்: அதைத்தான் தேடிக்கிட்டு இருக்கேன்.
மனைவி: ???????????

30. **கணவன்:** சீனி டப்பாவில் எதுக்கு உப்பு என்று எழுதி வைக்கிறே?
மனைவி: எல்லாம் எறும்பை ஏமாற்றத்தான்.
கணவன்: லதா... எதுக்கு நீ வெள்ளிக்கிழமை மட்டும் ரொம்ப ருசியா சமைக்கிற?
மனைவி: அன்னைக்கு தானே உங்கம்மா சாப்பிடாம விரதம் இருக்காங்க!

31. **மனைவி:** குழந்தைக்குச் செல்லம் கொடுக்கலாமான்னு டாக்டரைக் கேளுங்க.

கணவன்: அவரை எதுக்கு கேட்கணும்?

மனைவி: டாக்டரை கேட்காம இந்தக் குழந்தைக்கு எதுவும் தரக் கூடாதுன்னு உங்க அம்மா சொல்லி இருக்காங்க.

32. **மனைவி:** ஏங்க, உங்க அம்மா இந்த திட்டு திட்டறாங்களே.. கொஞ்ச கூட கேட்க மாட்டீங்களா?

கணவன்: கேட்டுக்கிட்டுத்தானே இருக்கேன்?

மனைவி: ???????????

33. **கணவன்:** என்னடி சாம்பார்ல ஒரே சில்லறைக் காசா கிடக்குது?

மனைவி: நீங்கதானே சாம்பார்ல கொஞ்சம் சேஞ்ச் வேணும்னு சொன்னீங்க !

34. **மனைவி:** நேத்து மூக்குப்பிடிக்க சாப்பிட்டிங்களே, அதே சாம்பார்தான் இன்னிக்கும்.

கணவன்: சரி, இன்னிக்கு மூக்கைப் பிடிச்சுட்டு சாப்பிடறேன்.

35. **மனைவி:** என்னங்க... திருடன் பாட்டுக்கு நம்ம வீட்ல புகுந்து திருடிட்டிருக்கான், நீங்க ஏதோ எழுதிட்டிருக்கீங்க?

கணவன்: சும்மா இருடி... நாளைக்கு போலீஸ் வந்து என்னென்ன பொருள் காணாமப் போச்சுன்னு கேட்டா, கரெக்டா சொல்ல வேணாமா.

36. **கணவன்:** நேத்து நம்ம வீட்டுக்கு வந்த திருடனை உங்கப்பாதான் அனுப்பியிருப்பாரோன்னு எனக்குச் சந்தேகமா இருக்கு.

மனைவி: ஏங்க வீணா அவர்மேல பழியைப் போடுறீங்க?

கணவன்: பின்ன என்ன, வரதட்சணையா வாங்கின ஐம்பதாயிரத்தை எடுன்னு திருடன் கரெக்ட கேட்டானே.

37. **மனைவி:** நேத்து ராத்திரி கனவுல நீங்க எனக்கு நிறைய நகை வாங்கித் தந்தீங்க தெரியுமா?

கணவன்: ஓ! ஞாபகம் இருக்கே. உங்க அப்பா கூட அதுக்குப் பணம் கட்டினாரே!

மனைவி: ??????????????

38. **கணவன்:** தொப்புன்னு சத்தம் கேட்டுதே... கொல்லை கிணற்றில் குதித்தது யார்னு போய்ப் பார்த்துவிட்டு வா!

மனைவி: முடியாது! குதிச்சது உங்கம்மா இல்லைன்னு தெரிஞ்சா, அந்த ஏமாற்றத்தை என்னால் தாங்கிக்கவே முடியாது!

கணவன்: ??????????????

39. **மனைவி:** தீபாவளிக்கு நாலு நாள் முன்னாடியே உங்க அம்மாவை வரச் சொல்லுங்க.

கணவன்: எதுக்குடி?

மனைவி: நம்ப வீட்டு வேலைக்காரி லீவு எடுத்துட்டு ஊருக்குப் போறாளாம்.

40. **கணவன்:** சென்ஸார் அதிகாரிங்க வந்திருக்காங்க.

மனைவி: எதுக்காம்?

கணவன்: நீயும் என் அம்மாவும் போடற சண்டையில் அளவுக்கு மீறி வன்முறை இருக்குனு அவங்களுக்குத் தகவல் போயிருக்குதாம்.

41. **கணவன்:** கடைக்காரன் நல்லா ஏமாத்திட்டான் சங்கு சக்கரம் சுத்தமாட்டேங்குது!

மனைவி: முதல்ல கண்ணாடியை மாட்டித் தொலைங்க அது கொசுவத்திச் சுருளு!

42. **மனைவி:** கணவன் மனைவி சண்டைனா நாலு சுவத்துக்குள்ளாத்தான் இருக்கனும்.. சரியா

கணவன்: அப்ப, தப்பிச்சு ஓடக்கூட எனக்கு உரிமையில்லாயா..

43. **மனைவி:** ஏங்க, நம்ம பையனுக்கு உடனே ஒரு நல்ல பொண்ணா பாருங்க. அவனுக்கு கல்யாண ஆசை வந்திடுச்சு

கணவன்: எப்படிச் சொல்ற?

மனைவி: அவனோட ரூம்ல போய் பாருங்க.. சமையல் செய்வது எப்படினு புத்தகமா வாங்கி அடுக்கியிருக்கான்.

44. **கணவன்:** நீ தான் எனக்கு மனைவியா வருவன்னு எங்க ஸ்கூல் மிஸ் அப்பவே சொன்னங்க.

மனைவி: எப்படி சொன்னாங்க..

கணவன்: பண்ணி மேய்க்க தான் நீ லாயக்குன்னு சொன்னங்க

45. **மனைவி:** பின்னாடி Figure இருந்தா கண்ணுக்கூட தெரியாதான்னு லாரிகாரன் திட்டிட்டு போறான்.. நீங்க சிரிக்கிறீங்க?

கணவன்: உன்னை போய் figure-ன்னு சொல்றான், அவனுக்கு தான் கண்ணு தெரியல.. அத நெனச்சித்தான் சிரிக்கிறேன்..

46. **கணவன்:** கடவுள்கிட்ட என்ன வேண்டிக்கிட்ட?

மனைவி: ஏழு பிறவியிலும், நீங்கதான் கணவனா அமையணும்-னு வேண்டிகிட்டேன். நீங்க?

கணவன்: இது ஏழாவது பிறவியா இருக்கணும்-னு வேண்டிகிட்டேன்.

47. **கணவன்:** என்னங்க.. உடனே உங்க தம்பிக்கு கல்யாணம் பண்ணி வைங்க..

மனைவி: எதுக்கு இவ்ளோ அவசரம்?

கணவன்: உங்க அம்மாவையும், அக்காவையும் என்னாலே தனியா சமாளிக்க முடியல..!

48. **பிச்சைக்காரன்:** மேடம், பாக்க நீங்க சமந்தா மாதிரியே இருக்கீங்க.

மனைவி: இந்த குருடனுக்கு 10 ரூபா கொடுங்க, ப்ளீஸ்..!

கணவன்: 100 ரூபாயா கொடுடீ... சத்தியமா இவன் குருடன்தான் !

49. **கணவன்:** நம்ம வீட்டுக்கு வந்த திருடன புடுச்சு அடிச்சு, உதச்சு அவன் கை காலெல்லாம் முறிச்சியே, எங்கிருந்து வந்தது உனக்கு இவ்ளோ தைரியம்.

மனைவி: நான் திருடன்னு நினைச்சு அடிக்கலீங்க, நீங்க தான் குடிச்சுட்டு வந்திருக்கீங்கன்னு நினைச்சு அடிச்சேன்.

கணவன்: ??????????????

50. **கணவன்:** 1000 தான் இருந்தாலும் நீ எனக்கு பொண்டாட்டி!!

மனைவி: அப்படினா என்ன நீங்க செல்லாகாசுனு சொல்றீங்களா.

51. **மனைவி:** என்னங்க நீங்க புதிய 2000 ரூபாய் நோட்டு மாரிங்க.

கணவன்: நா அவ்வளவு மதிப்புள்ளவனாடி செல்லம்..

மனைவி: நீங்க வேற மாத்தவும் முடியல, தூக்கி எறியவும் முடியல.

52. **மனைவி:** ராத்திரி திருடன் வந்து என்னை மிரட்டினப்ப நீங்க ஏன் வாயே திறக்கலை?

கணவன்: உன்னையே அந்த மிரட்டல் மிரட்டினானே... அவன் எவ்ளோ பெரிய வீரனா இருப்பான்னு நினைச்சு பயந்துட்டேன்.

மனைவி: ???????????

53. **மனைவி:** என்னங்க... நம்மக்கிட்ட தான் மாத்தரதுக்கு 500,1000 நோட்டு இல்லையே அப்புறம் ஏன் பேங்க்கு கிளம்புரிங்க.

கணவன்: நான் கடன் கேட்டப்ப இல்லைனு சொன்ன எத்தன பேரு நோட்ட மாத்த பேங்குல நிக்கிறானு பாத்துட்டு வரத்தான்.

மனைவி: ??????

54. **மனைவி:** நான் ரொம்ப அழகு... இது என்ன காலம்?

கணவன்: அது ஒரு இறந்த காலம்....

மனைவி: ??????????

55. **மனைவி:** வேலைக்காரியை இனிமே வர வேண்டாம்னு சொன்னீங்களாமே.... அதைச் சொல்ல நீங்க யாரு?

கணவன்: அப்படினா வேலைக்கு சேர்த்துக்கலாம்னு சொல்றீயா?

மனைவி: இல்ல, நான் தான் சொல்லுவேன் இனிமே வராதேன்னு.

56. **கணவன்:** எங்கடி சட்டைல வெச்சிருந்த 100 ரூபாயக் காணம்.

மனைவி: நீங்க தானே புள்ள பரிச்சைக்குப் போறேன்னதுக்கு 10, 20-ன்னு எடுக்கக்கூடாது, 100 எடுக்கனும்னீங்க

அப்பா: ?????

57. **கணவன்:** நம்ம பையன் எல்லா பாடத்திலும் முதல் மார்க்-னு சொன்னான், நீ ஏண்டி முழிக்கிறே?

மனைவி: அவன் சொன்னது எல்லா பாடத்திலும் ஒவ்வொரு மார்க் வாங்கியிருக்குக்கிறதை.

கணவன்: ?????

58. **மனைவி:** பையன் புல்லாங்குழல் கேட்டான் வாங்கப் போயிட்டு திரும்ப வந்துட்டீங்களே, ஏன்?

கணவன்: முழுவதும் ஓட்டையா இருக்கிறதக் கொடுத்தான் வேணாமுன்னு வந்துட்டேன்.

மனைவி: ??????

59. **கணவன்:** மனிதனைப் போலவே கரடி குறட்டை விடும்னு, ஆராய்ச்சி செஞ்சு கண்டுபிடிச்சு இருக்காங்களாமே?

மனைவி: இதுக்கு ஏன் ஆராய்ச்சி பண்ணனும்? நீங்க தூங்கறதைப் பார்த்த அப்படித்தானே இருக்கு?

கணவன்: ????????

60. **மனைவி:** டிவி-ல ஜல்லிக்கட்டு பாக்குறிங்கலே ! அவ்ளோ ஆர்வம்னா நேரில போய் மாட்டை அடக்க வேண்டியது தானே!

கணவன்: கட்டுன மாட்டையே அடக்க முடியல... இதுல கட்டாத மாட்டை எப்படி அடக்குறது??

மனைவி: ???

61. **கணவன்:** காலெண்டர்-ல அப்படி என்னடி பாக்குற?

மனைவி: பல்லி விழும் பலன் பாக்குறேங்க !

கணவன்: அது சரி பல்லி எங்க விழுந்துச்சு?

மனைவி: நீங்க சாப்புடுற சாம்பார்ல தான்...

62. **மனைவி:** அட.. நமக்கேத்த சரியான ஜோடி இவதான்னு நம்ம கல்யாணத்தன்னிக்கு சந்தோஷப்பட்டீங்களா, டியர்..?

கணவன்: ஏய்.. என்ன உளர்ற? நம்ம கல்யாணத்தன்னிக்கு நீ மட்டும்தானே மணப்பெண் கோலத்துல இருந்தே..?

மனைவி: ???????

63. **கணவன்:** இன்னிக்கு நீ ஒரு கருப்பு நாய்க்கு சோறு வச்சியா?

மனைவி: ஆமாங்க ஏன் கேட்கிறீங்க?

கணவன்: அதுவா, தெரு ஓரத்தில் ஒரு கருப்பு நாய் செத்துபோய் கிடந்தது. அதான் கேட்டேன்.

64. **மனைவி:** டாக்டர், என் ஹஸ்பெண்ட் ராத்திரியெல்லாம் தூக்கத்துல பேசிகிட்டே இருக்கார். என்ன பண்ணறதுன்னே தெரியல...

டாக்டர்: அவரைப் பகல் வேளையில கொஞ்சம் பேசவிடுங்க.

மனைவி: ????

65. **கணவன்:** ஏன் இட்லிக்கு தேங்காய் சட்னி இல்லை?

மனைவி: இப்போதெல்லாம் யாரும் உங்களை கச்சேரி பண்ண கூப்படறதே இல்லயே..அதான்!

மனைவி: ?????

66. **மனைவி:** காலையில காப்பி குடிக்கறதை ஏன் நிறுத்திட்டீங்க?
கணவன்: காப்பி குடிச்சுட்டு ஆபிஸ் போனா தூக்கம் வரமாட்டேங்கறது.
மனைவி: ????????

67. **கணவன்:** இன்னைக்கு நான் பேசறது நியூசென்ஸா இருக்குன்னு சொல்றியே, நேத்து வரைக்கும் நான் பேசினது.....?
மனைவி: ஓல்டு சென்ஸா இருந்தது.

68. **மனைவி:** காலேஜ் வரைக்கும் படிக்க வெச்சு என்ன புண்ணியம்! நம்ம பையனுக்கு ஸ்ரீராமஜெயம் கூட சரியா எழுதத் தெரியல. ரமாஜெயம்-னு எழுதறான்.
கணவன்: அவன் சரியாத்தாண்டி எழுதறான். அது பக்கத்து வீட்டுப் பொண்ணு பேரு.
கணவன்: பால் எல்லாவற்றையும் பூனை குடிக்கும் வரை என்ன பண்ணிட்டிருந்தீங்க?
மனைவி: இந்த பூனையும் பால் குடிக்குமா என்று பார்த்துக் கொண்டிருந்தேன்..?

69. **மனைவி:** இந்த வாரம் முழுவதும் படம் பார்த்தோம்.. அடுத்த வாரம் முழுவதும் ஸாப்பிங் போவோங்க.
கணவன்: சரி அதுக்கு அடுத்த வாரம் முழுவதும் கோவிலுக்கு போவோம்..
மனைவி: எதுக்குங்க..
கணவன்: பிச்சை எடுக்க தான்..

70. **மனைவி:** என்னங்க இது கல்யாண மண்டபத்துல பொண்ணைக் காணோம்னு தேடிக்கிட்டு இருக்காங்க.
கணவன்: நான்தான் அப்பவே சொன்னேனே. பொண்ணு இருக்கற இடமே தெரியாதுன்னு!

71. **கணவன்:** ஏன்டி நான் வீட்டுக்குள்ள வந்தவுடனே கண்ணாடியை எடுத்துப் போட்டுக்கற?

மனைவி: டாக்டர் தான் சொன்னாரு, தலைவலி வந்தவுடனே கண்ணாடியைப் போட்டுக்கன்னு

கணவன்: ??????

72. **கணவன்:** அப்படி என்ன தலைபோற அவசரம்னு ஆட்டோ பிடிச்சு என் ஆபிசுக்கே வந்திருக்கிறே?

மனைவி: ம்ம்ம்... நம்ம வீட்டு வேலைக்காரியைக் காணோம். அதான் நீங்களாவது ஆபிஸ்ல இருக்கீங்களான்னு பாத்துட்டு போலாம்னு வந்தேன்.

கணவன்: ???????

73. **மனைவி:** நேத்திக்கு ஒரு படம் பார்த்தேன். சிரிச்சு சிரிச்சு பாதி உயிர் போயிடுச்சு.

கணவன்: அப்படியா? எனக்காக இன்னும் ஒரே ஒரு தடவை அந்தப் படத்தை போய் பாரேன் ப்ளீஸ்.

மனைவி: ???????

74. **மனைவி:** எதிர்த்த வீட்டுக்காரர் அவரோட மனைவிக்கு தினமும் ஒரு புடவை வாங்கித் தரார். நீங்களும் இருக்கீங்களே !!

கணவன்: எனக்கும் வாங்கிக் குடுக்கலாம்னு ஆசைதான். ஆனா அவங்க வாங்கிக்குவாங்களோ, மாட்டாங்களோன்னுதான் பயமாயிருக்கு...

மனைவி: ?????

75. **கணவன்:** இன்னுமா சமையல் ஆகலே? நான் ஓட்டலுக்கு போறேன்.

மனைவி: ஒரு அஞ்சு நிமிஷம் பொறுங்கோ ...

கணவன்: அதுக்குள்ளே ஆகிடுமா?..

மனைவி: இல்லே, நானும் புடவையை மாத்திட்டு உங்களோட வந்திடறேன்.

கணவன்: ?????

76. **மனைவி:** போதை ஏறிட்டுதுன்னா அதுக்காக இப்படியா?

கணவன்: ஏன், அப்படி என்ன பண்ணினேன் பங்கஜம்?

மனைவி: உங்க கையில இருக்கிறது பிராந்தி பாட்டில் இல்ல கெரஸின் பாட்டில்.

கணவன்: ???????

77. **மனைவி:** ஒரு நாள் வேலைக்காரி இல்லைன்னா கூட வீடே சரியில்ல பாருங்க.

கணவன்: இது பரவாயில்லை. எனக்கு மனசே சரியில்லாம போயிடுது பாரு.

மனைவி: ?????

78. **கணவர்:** WIFE - க்கு என்ன அர்த்தம் தெரியுமா? - Without Information, Fighting Everytime!

மனைவி: இல்லை டார்லிங் அதற்கு அர்த்தம் With Idiot for Ever

79. **மனைவி:** நான் நியூஸ் பேப்பராக இருந்தால் உங்க கையில நாள் பூரா தவழும் பாக்கியம் கிடைத்திருக்குமே

கணவர்: நான் கூட அப்படித்தான் நினைக்கிறேன். தினமும் புதுசா கிடைக்குமே!

80. **கணவர்:** இன்னிக்கு சண்டே! நல்லா என்ஜாய் பண்ணப் போறேன். அதுக்குத்தான் 3 சினிமா டிக்கெட் வாங்கியிருக்கேன்.

மனைவி: எதுக்கு மூணு?

கணவர்: உனக்கும், உன்னோட அப்பா, அம்மாவுக்கும்.

81. **மனைவி:** ஏன் தண்ணியில பச்சை இங்க்கை ஊத்திக் கலக்கறீங்க?

கணவன்: டாக்டர்தான் மாத்திரையை பச்சைத் தண்ணியில போடச் சொன்னாரு.

82. **கணவன்:** கப் போர்டு வாங்கியாச்சு. அடுத்து என்ன வாங்கப் போறே?

மனைவி: வேற என்ன, ஸாசர் போர்டுதான்!

83. **மனைவி:** என்னங்க, செருப்பு காலை கடிக்குது?
கணவன்: அப்போ சாயங்காலமாப் போட்டுக்கோ.

84. **மனைவி:** என்னை பெண் பார்க்க வந்தன்னிக்கு நீங்க டிபனை சாப்பிடவேயில்லையே ஏன்?
கணவன்: ஒரு நாளைக்கு ஒரு ஷாக் போதுமேன்னு நினைச்சேன்.

85. **கணவன்:** ஏண்டி நேத்து ராத்திரி திருடனைப் போட்டு அப்படி அடிச்சே?
மனைவி: இருட்டுல, நீங்கதான் குடிச்சிட்டு வந்திருக்கீங்கன்னு நினைச்சு அடிச்சுட்டேன்.

86. **மனைவி:** டின்னர் வேணுமா?
கணவன்: சாய்ஸ் இருக்கா?
மனைவி: ரெண்டு இருக்கு!
கணவன்: என்னன்ன?
மனைவி: வேணுமா? வேண்டாமா?

87. **மனைவி:** என்னை நேற்று தூக்கத்தில கன்னா, பின்னாவென்று திட்டுனீங்க ..
கணவன்: யார் சொன்னது நான் தூக்கத்தில் தான் இருந்தேன் என்று..

88. **மனைவி:** என்ன பார்த்துகிட்டு இருக்கிங்க
கணவன்: ஒண்ணுமில்ல!
மனைவி: ஒண்ணுமில்லாமயா ஒரு மணிநேரமா மேரேஜ் சர்டிபிகேட்ட பார்த்துகிட்டு இருக்கிங்க!
கணவன்: எங்கேயாவது எக்ஸ்பிரி டேட் போட்டுருக்கானு பார்க்கிறேன்.!!

89. **மனைவி:** உங்ககிட்ட தாலி கட்டிண்டு இந்த 8 வருஷத்துல என்னாத்தக் கண்டேன்?
கணவன்: நீ என்னாத்தக்கண்டயோ இல்லியோ, நான் முழு எமகண்டம்,7-1/2 சனில்லாம் பாத்தாச்சு!!

90. **கணவன்:** உன்னைக் கட்டினதுக்குப் பதலா ஒரு எருமை மாடைக் கட்டியிருக்கலாம்.

மனைவி: ஆனா...அதுக்கு எருமை மாடு சம்மதிக்கணுமே?

91. **மனைவி:** என்னங்க..... பொழுது விடிஞ்சி மணி ஏழாகப் போகுது. டாக்டர் சொன்னபடி கொஞ்ச தூரம் நடந்து போயிட்டு வாங்க

கணவன்: ஏதாவது நடக்கற காரியமா சொல்லடி

மனைவி: ????

92. **கணவன்:** ஏங்க.. நாளைக்கு நமக்கு பதினைந்தாவது வருட கல்யாண நாள். உங்களுக்கு நான் என்ன செஞ்சா பிடிக்கும்?

மனைவி: நாளைக்கு ஒரு நாளைக்காவது பேசாமல் மௌன விரதம் இருடி... ஒரு நாளாவது உம் புண்ணியத்துல நிம்மதியாயிருக்கேன்

93. **கணவன்:** வாழ்க்கையில நாம தப்பு பண்ணிட்டா.... கண்ண மூடி பத்து நிமிஷம் யோசிக்கணும்.....

மனைவி: ஏன்?

கணவன்: அப்பத்தான், யார் மேல பழியப் போடலாம்னு மனசு சொல்லும்!

94. **மனைவி:** பாய் வியாபாரத்தில் கூட்டு வேணான்னு சொன்னேனே கேட்டியா?

கணவர்: என்னாச்சு?

மனைவி: பார்ட்னர் எல்லாத்தையும் சுருட்டிட்டு ஓடிட்டான்.

95. **மனைவி:** இத்தனை நாளா கண்ட பசங்களோட சுத்திட்டு இருந்த நம்ம பொண்ணு இப்ப பரவாயில்லீங்க

கணவர்: எப்படி சொல்ற?

மனைவி: பாருங்க!குழந்தைங்க டிரஸ் தைச்சிட்டுருக்கா பார்த்தீங்களா?

கணவர்: நாசமா போச்சு, அவள முதல்ல லேடி டாக்டர்கிட்ட கூட்டிப்போ

96. **மனைவி:** ஏன் இப்படி பேயடிச்சமாதிரி இருக்கிறீங்க?

கணவன்: கொஞ்ச நேரத்துக்கு முன் நீதானே அடித்தாய்.

97. **கணவன்:** டியர்... இன்னிக்கு ராத்திரி என்ன டிபன்?

மனைவி: (கடுங்கோபத்துடன்) ஒரு டம்ளர் விஷம்

கணவன்: ஓ கே டியர். நான் வர கொஞ்சம் லேட்டாகும். நீ சாப்பிட்டு படுத்துக்கோ.

98. **கணவன்:** ஆபரேஷன்-ல நான் இறந்து போயிட்டா... நீ அந்த டாக்டரையே கல்யாணம் பண்ணிக்கோ

மனைவி: ஏங்க இப்படியெல்லாம் பேசுறீங்க?

கணவன்: பின்னே... டாக்டரை நான் எப்படிப் பழிவாங்குறது?

அதிரடி ஜோக்ஸ்

1. **ராமு:** என் மனைவி செய்யற பொங்கல் பட்டாசா இருக்கும்?

சோமு: அவ்வளவு நல்லாவா இருக்கும்..?

ஒருவர்: நீ வேற! ரொம்ப ஆபத்துன்னு சொல்ல வந்தேன்.

2. **ஒருவர்:** அந்த கஸ்டமர் ஏதோ கேட்டதும் சர்வர் இவ்வளவு டென்ஷன் ஆகிட்டாரே. அவர் அப்படி என்னதான் கேட்டார்?

மற்றவர்: சாப்பிட தனக்கு மாட்டுப் பொங்கல்தான் வேணும்னு கேட்டிருக்கார்..!

ஒருவர்: ??????????

3. **அமலா:** என் புருசன் கூட சண்டை போட பயமா இருக்கு.

விமலா: அடிச்சுப் போடுவாரா?

அமலா: இல்ல சமையல்ல உப்ப அதிகமாப் போட்டு பழிவாங்குவாரு.

4. **அமலா:** நான் புதுசா ஒரு பாட்டு எழுதினேன்!

விமலா: எதை வைத்து?

அமலா: பேனாவை வைத்து தான் எழுதினேன்!

5. **அம்மா:** என்னடி உன் கணவன் தினமும் இப்படி குடிச்சிட்டு வராரே நல்லாவா இருக்கு?

மகள்: தெரியல அம்மா நான் இன்னும் டேஸ்ட் பண்ணி பாக்கல?

6. **சர்வர் 1:** என் டேபிளுக்கு வந்தவன் மகா கஞ்சனாக இருப்பான் போலிருக்கு?

சர்வர் 2: எப்படி சொல்ற?

சர்வர் 1: தட்டில் டிப்ஸ் பணத்திற்கு பதிலாக பாதி இட்லிய வச்சுட்டு டிப்ஸா வச்சுக்கன்னு சொல்லிட்டு போறான்.

7. **ஒருவர்:** இட்லி சாப்ட்டா இருக்குமா?

சர்வர்: சாப்பிட்டா இட்லி இருக்காது, வயித்துக்குள்ளாற போயிடும்.

ஒருவர்: ???????????

8. **பெண்:** சார் பீரோல வெச்சிருந்த என்னோட மொத்தப் புடவைகளும் காணாம போச்சு...

போலீஸ்: உங்களுக்கு யார் மேலயாவது சந்தேகம் இருக்கா?

பெண்: துவைக்கறதுக்கு சோம்பேறித்தனப்பட்டு என் கணவர்தான் யாருக்காவது எடுத்துக் கொடுத்துட்டாரோன்னு சந்தேகமா இருக்கு.

9. **பெண் 1:** தட்டு போட்டு உட்கார்ந்த உடனே என் கணவருக்குச் சாப்பாடு போட்டுடணும் இல்லைன்னா ரொம்பக் கோபம் வரும்.

பெண் 2: ஏன்?

பெண் 1: கஷ்டப்பட்டு சமைச்சு வெச்சிற அவருக்கு இதுகூடப் பண்ணலைன்னா பின்ன கோபம் வராதா?

10. **சர்வர்:** நீங்க ஆர்டர் பண்ண பிசாவை, எவ்ளோ துண்டாக்கி வரவேண்டும்! 8டா? 12டா?

நம்மாளு: 8 துண்டாக்கிடுங்க, என்னால 12 சாப்பிட முடியாது.

சர்வர்: ???

11. **ஒருவர்:** உங்களை யாருன்னே எனக்கு தெரியாது, என்கிட்டே வந்து கடன் கேட்கிறீங்களே, ஏன்?

மற்றவர்: தெரிஞ்சவங்க கடன் நட்பை முறிக்கும்னு தர மாட்டேன் என்கிறார்களே!

12. **ராமு:** என்னுடைய பையனுக்கு வயசு 15 ஆவுது, இன்னமும் கதை சொன்னாத்தான் தூங்கறான்.

சோமு: எனக்கு அந்த பிரச்சினையே இல்லே படின்னு சொன்னா போதும் உடனே தூங்கிடுவான்.

13. **வாடிக்கையாளர்:** சீக்கிரமா ஒரு பை கொடுங்க, டிரெயினைப் புடிக்கணும்.....!!!

கடைக்காரர்: சாரி சார்....!!! டிரெயின் புடிக்கிற அளவுக்குப் பெரிய பை எங்க கடையில இல்லியே...!!!

14. **ராமு:** முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்கிறது சரியாப் போச்சா. எப்படி?

சோமு: காலையில் மனைவியைத் திட்டினேன், சாயங்காலம் பின்னிட்டா.

15. **பெரியசாமி:** எங்க தலைவர் ஒரு திறந்த புத்தகம் மாதிரி.

சின்னசாமி: ஓ! அதுதான் நேத்து ரோட்டிலே போட்டு ஆளாளுக்குப் புரட்டி எடுத்தாங்களா?

16. **ராமு:** ஏன்யா துணி துவைக்கற இடத்துல வந்து பால் இருக்கான்னு கேக்கறியே நியாயமா?

சோமு: தப்பா நினைச்சுக்காதீங்க வெளுத்ததெல்லாம் பால்-னு நினைக்கறவன் நான்.

17. **அம்மா:** ஆராரோ ! ஆரிராரோ ! ஆசை மகளே கண்ணுறங்கு !

குழந்தை: அம்மா நான் தூங்கணும் கத்தாதே !

அம்மா: ??????

18. **முதியவர்:** ஏம்பா, என் தலையிலே தான் முடி ரொம்ப கம்மியா இருக்கு இல்லே. முடி வெட்டறதுக்குப் பாதி பணம் வாங்கிக்கக் கூடாதா?

சலூன் கடைக்காரர்: உங்களுக்கு முடி வெட்டறதுக்காக நான் பணம் வாங்கலே சார். முடியைத் தேடிக் கண்டு பிடிக்கத்தான் பணம் வாங்குறேன்.

19. **டிரைவர்:** சாரி சார். பெட்ரோல் காலி இனி வண்டி ஒரு அடி கூட முன்னாடி நகராது.

மேனேஜர்: சரி ரிவர்ஸ் எடுப்பா நாம வீட்டுக்கு போகலாம்!

20. **பையன்:** உங்க குடும்ப நன்மையை உத்தேசித்து இந்த கேள்வி?

பெண்: கேளுப்பா

பையன்: எப்ப நீங்க கல்யாணம் பண்ணிக்கப் போரீங்க?

பெண்: செருப்பாலே அடிப்பேன், அதைக் கேட்க நீ யாரு

பையன்: உங்க தங்கச்சியோட லவ்வர்.

21. **மகன்:** நான் ஒரு விசயம் சொல்லணும்

அப்பா: சாப்பிடும்போது பேசக்கூடாது(சாப்பிட்டபிறகு)

அப்பா: என்னடா சொல்லு?

மகன்: உங்க சாப்பாட்டுல அம்மா விஷம் வச்சிருக்காங்க!

22. **நவின்:** ஏன் அந்த லேடி கான்ஸ்டபிள் அவ்வளவு மேக்கப் பண்ணிக்கிட்டுவந்திருக்காங்க...?

கவின்: இன்னைக்கு ஷூட்டிங் இருக்குன்னு சொன்னதை தப்பாப்புரிஞ்சுக்கிட்டாங்க போலிருக்கு...!

23. **வந்தவர்:** என்னப்பா சர்வர் இன்னிக்கி என்ன ஸ்பெஷல்

சர்வர்: கொஞ்சம் இருங்க சார் கேட்டு சொல்றேன்

வந்தவர்: என்ன கேக்கப் போறேப்பா?

சர்வர்: ஒண்ணும் இல்லை எந்த ஐட்டம் மீந்திருக்குன்னு கேக்கப் போறேன். அதை வச்சுத்தான் ஸ்பெஷல் தயார் பண்ணுவாங்க!

24. **பையன்:** நம்ம அப்பா முட்டாளாம்மா?

அம்மா: எதுக்குடா இப்படி கேகிறே?

பையன்: எங்க வாத்தியார் என்னை முட்டாப் பய மவனேன்னு திட்டுறாரே..

25. **தாய்:** எப்போதும் காரிலேயே வெளியே போக வேண்டும் என்கிறாயே, கடவுள் எதற்காக இரண்டு கால்கள் கொடுத்திருக்கிறார் தெரியுமா?

பெண்: தெரியுமே, ஒன்று பிரேக்குக்கு, மற்றொன்று ஆக்ஸிலேட்டருக்கு!

26. **ஒருவர்:** என்னோட நாலு தம்பிங்க குளத்திலே விழுந்துட்டாங்க. ஒருத்தன் தலைமுடி மட்டும் தான் நனைஞ்சது.

மற்றவர்: அப்படியா! மத்த மூணு பேருக்கும் நீச்சல் தெரியுமா?

ஒருவர்: இல்லை. அவங்கள்ளாம் மொட்டை.

27. **மகன்:** அப்பா எனக்கு பைக் வாங்கி தாங்க

அப்பா: கடவுள் நமக்கு எதுக்கு ரென்டு கால் தந்திருக்கிறார்?

மகன்: ஒன்னு ஹியர் போட ஒன்னு பிரேக் பிடிக்க

28. **நண்பன் 1:** நம்ம கிரிக்கெட் டீம் அபாரமா ஜெயிடுச்சுன்னு ஏண்டா பொய் சொன்ன?

நண்பன் 2: உன் விக்கலை நிறுத்த எனக்கு வேற வழி தெரியலைடா!

29. **கமல்**: நீ வீட்ல வெப்சைட் வெச்சிருக்கியா..?

அமல்: இல்லடா..

அமல்: பக்கத்து வீட்டுல ஒரு சைட் வெச்சிருக்கேன்.

30. **விமலா**: என் மாமியாரும், நானும் சும்மா இருந்தாலும் என் புருசன் சண்டை போடச் சொல்லி வற்புறுத்துவாரு

அமலா: ஏன்?

விமலா: வீட்டோட இயல்பு நிலை பாதிச்சிடக் கூடாதுன்னு தான்.

31. **அமலா:** என் முகத்துல புள்ளிகளா இருக்கு, அதை அழகுப்படுத்த ஒரு ஐடியா சொல்லு.

விமலா: அந்தப் புள்ளிகள இணைச்சு கோலமா போட்டுரு அருமையா இருக்கும்.

32. **விமலா:** என் மாமியார் பொறாமைப்படுறாங்க

அமலா: எதுக்கு?

விமலா: என் புருசன் கூட மட்டுமே நான் சண்டை போடுறேனாம் அதுக்குத்தான்.

33. **அமலா:** என் காதலருக்கு குறும்பு ஜாஸ்தி.

விமலா: எப்படி சொல்ற?

அமலா: உங்களையே நினைச்சு உருகிக்கிட்டிருக்கேன்னு சொன்னதுக்கு, எத்தன டிகிரி செல்சியஸ்லனு கேக்குறாரு.

34. **கமலா:** என்ன என் காதலர் ஏமாத்தி கல்யாணம் பண்ணிட்டார்.

விமலா: என்ன சொல்லி ஏமாத்தினார்?

கமலா: சமைக்கத் தெரியும்-னு தான்.

35. **அமலா:** சினிமாவுக்குப் பாட்டேழுதுகிறவரக் காதலிச்சது தப்பாப் போச்சு

விமலா: ஏன்?

அமலா: காதல் பேயே, பிசாசேன்னு வர்ணிக்கிறாரு.

36. **அமலா:** டெலிவிஷன்லே ஷோபனாரவி எப்பவும் சேலைத் தலைப்பைப் போர்த்திக்கிட்டு தான் செய்தி வாசிப்பாங்க. ஏன் அப்படீ?

விமலா: தெரியாதே!

அமலா: அவங்க வாசிக்கிறது தலைப்பு செய்தியாச்சே!

37. **அமலா:** என் மகளுக்குக் கல்யாணம் நிச்சயமான நாள்-ல இருந்து தினமும் என்கூட சண்டை போடுறா.....

விமலா: ஏன் மாப்பிள்ளை பிடிக்கலைன்னா....?

அமலா: அப்படியெல்லாம் இல்ல. மாமியார் கூட சண்டை போடுறதுக்காகப் பயிற்சி எடுக்குறா.

38. **விமலா:** என் மாமியார் கூட இன்னிக்கு பெரிய சண்டை

அமலா: எதுக்கு?

விமலா: நாளையில இருந்து சண்டையே போடக் கூடாதுன்னு சொன்னாங்க. நான் இன்னையில இருந்தே சண்டை போட வேண்டாம்-னு சொன்னேன். அவங்க ஏத்துக்கல. அதுக்குத்தான் பெரிய சண்டை வந்துருக்கு.

39. **அமலா:** நேத்து என் வீட்டுக்கு திருட வந்தவன் ரொம்ப நல்லவன்.

விமலா: எத வச்சு சொல்ற?

அமலா: பீரோ சாவிய குடுக்க மாட்டேன்னு சொன்ன என் மாமியார அடி பின்னிட்டானே

40. **அமலா:** உங்க வீட்டு டி.வி-ல ராத்திரி பத்துமணி நியூஸ் வரும்போது டி.வி-ல படம் ஏன் சின்னதா தெரியுது?

விமலா: அது செய்திச்சுருக்கம் தானே அதான் அப்படித் தெரியுது

41. **ஒருவர்:** ஏங்க மதுரைக்கு துரு பஸ் இருக்கா?
மற்றவர்: இல்லீங்க. எல்லாமே பெயிண்ட் அடிச்ச பஸ்தான்...!
ஒருவர்: ?????

42. **சோனு:** முடி சின்னதா வெட்டிவிடுங்க
தாமு: எவ்வளவு சின்னதா
சோனு: பொண்டாட்டி கைல புடிக்க முடியாத அளவுக்கு
தாமு: ?????

43. **வேலு:** சட்டத்தை மாத்தணும்ங்கறதுல அவர் உறுதியா இருக்கார் ..

பாக்கி: ஏன்?

வேலு: அவங்க வீட்ல எல்லா சட்டத்தையும் கரையான் அரிச்சிடுச்சாம் ...

44. **குமார்:** டேய், என்ன பவுடர் யூஸ் பண்ணற?
கார்த்தி: சுனில் பவுடர்.
குமார்: என்ன செண்ட் யூஸ் பண்ணற?
கார்த்தி: சுனில் செண்ட்.
குமார்: என்ன ஹேர் ஆயில் யூஸ் பண்ணற?
கார்த்தி: சுனில் ஹேர் ஆயில்.
குமார்: ஓ, சுனில் அவ்வளவு பெரிய பிராண்டா?
கார்த்தி: இல்லடா, சுனில் என் ரூம் மேட்.

45. **அப்பா:** ஏண்டா உங்க ஸ்கூல்ல ரன்னிங் ரேஸ் இருக்குன்னு சொன்னியே, என்னாச்சி?
மகன்: அத ஏன் கேக்குறப்பா, எனக்கு பயந்து எல்லா பசங்களும் எனக்கு முன்னாடியே ஓடி போய்ட்டாங்க!!

46. **சாமினி:** என்னடி சொல்றே உங்க வீட்டுல தங்கத்திலேயே குழம்பு வைக்கிறீங்களா?
சாலினி: ஆமாண்டி 24 கேரட் போட்டு குழம்பு வைகிறோமே!
சாமினி: ????

47. **ஒருவர்:** கல்யாணமான புதுத் தம்பதியர் என்னென்ன கத்துக்கிறாங்க?
மற்றவர்: புருசன் சமையல் பண்ணக் கத்துக்கிறான், பொண்டாட்டி சண்டை போடக் கத்துக்கிறா

48. **ஒருவர்:** நான் தினமும் ரத்தம் குடுக்கிறேன்.
மற்றவர்: அப்படியா! எங்க வேலை பாக்குறீங்க?
ஒருவர்: கசாப்புக் கடையில!!

49. **ராமு:** தீபாவளி முடிஞ்சு ஒரு மாசமாச்சு. இப்ப உங்க வீட்டுக் கொல்லையில் வெடிச்சத்தம் கேக்குதே?
சோமு: தீபாவளிக்கு பத்த வச்சதுதான். இப்பதான் திரிபுடிச்சு வெடிக்குது.

50. **ஒருவர்:** என்ன இது... ஷீட்டிங் பார்க்க இவ்வளவு வி.ஐ.பி-க்களா?
மற்றவர்: அவங்கல்லாம் சென்ஸார் போர்டு மெம்பருங்க... ஒவ்வொரு ஸீன் எடுக்கறதக்கு முன்னாடி அவங்க அபிப்பிராயத்தைக் கேட்டுக்கிட்டு எடுக்கறங்க...

51. **பார்த்திபன்:** என்ன காலையில குறங்கு கூட வாக்கிங்கா?
வடிவேலு: ஹலோ இது குரங்கு இல்லை நாய்
பார்த்திபன்: நாஅதிரடி ஜோக்ஸ்ன் நாய்கிட்ட கேட்டேன்
வடிவேலு: அப்ப சரி

52. **வாடிக்கையாளர்:** ஒரு காப்பி எவ்வளவு சார்?
கடைக்காரர்: 5 ரூபாய்.
வாடிக்கையாளர்: எதிர்த்த கடையில 50 காசுன்னு எழுதியிருக்கே?
கடைக்காரர்: டேய்.சாவுகிராக்கி அது XEROX காப்பிடா !

53. **நண்பன் 1:** Love marriage-க்கும், Arranged marriage-க்கும் என்ன வித்தியாசம்?
நண்பன் 2: நம்ம கிணத்தில விழுந்தா Love marriage, பத்து பேர் சேர்ந்து தள்ளிவிட்டா அது Arranged marriage

54. **ராகுல்:** ரொம்ப நாள் வாழ என்ன பன்னனும்
திகுல்: கல்யாணம் பன்னிக்கோ
ராகுல்: கல்யாணம் பன்னிக்கிட்டா ரொம்ப நாள் வாழலாமா
திகுல்: இல்லை. ஆனா, உனக்கு ரொம்ப நாள் வாழனுங்கிர எண்ணமே வராது

55. **பையன்:** அம்மா! எதிர்வீட்டு ஆன்டிபேர் என்னம்மா?
அம்மா: விமலா டா
பையன்: அப்பா எதுக்காக டார்லிங்-னு கூப்புடுறார்...

56. **ஒருவர்:** கப்பலே மூழ்கினாலும் கன்னத்துல கை வைக்க கூடாது?

மற்றவர்: ஏன்?

ஒருவர்: கன்னத்துல கை வைச்சா நீச்சல் அடிக்க முடியாதே..?

57. **கடைக்காரர்:** நீங்க உடைத்த பொருள் 100 வருஷம் பழையது தெரியுமா?

வாடிக்கையாளர்: அப்பாடா! நான் அதப் புதுசுனு நெனச்சு பயந்துட்டேன்.

58. **பையன்:** உனக்காக நான் தங்கமோதிரம் வாங்கிட்டு வந்திருக்கேன்.

பொன்னு: நீயே போட்டுவிடு

பையன்: இப்படி சொல்லுவேன்னு தெரிஞ்சிருந்தா நான் உனக்கு ட்ரெஸ் வாங்கிட்டு வந்திருப்பேன்..

59. **ராமு:** இந்த SMS-ஐ ஸ்மெல் பண்ணு உனக்கு கற்பூர வாசனை அடிக்கிறதா?

சோமு: இல்லையே!

ராமு: அதுசரி, சும்மாவா சொன்னாங்க கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனை!

60. **மக்கு:** இன்னிக்கு ஸ்கூல்ல வாத்தியார் என்னை பிரம்பால அடி அடீன்னு அடிச்சுட்டாரு!

ஜக்கு: ஏன் என்ன தப்பு செஞ்ச

மக்கு: 33 எழுதச் சொன்னார்! தெரியலைன்னு முழுச்சேன், சரி 3 போட்டு பக்கத்துல போடச் சொன்னாரு

ஜக்கு: ஒரு 3 போட்டுட்டேன், இன்னொரு 3-ஐ எந்தப் பக்கம் போடணும்-னு கேட்டேன்!

61. **சுரேஷ்:** இதான் என்னோட குழந்தை

ரமேஷ்: ரொம்ப அழகா இருக்கே! என்ன பேரு?

சுரேஷ்: அதைத்தான் நானும் கேக்கறேன். ஆனா, அது பேசறதே புரியமாட்டேங்குது.

62. **தாத்தா:** நீ என் தங்கக் குட்டியாம்... தாத்தா சொல்றதைக் கேப்பியாம். நான் உன் புத்தகப் பையைத் தூக்கிட்டு வரவேனாம்... பாப்பா நடந்து வருவியாம்.

பேத்தி: வேண்டாம் தாத்தா.. என் பையைத் தூக்கி நீ கஷ்டப்பட வேண்டாம். நானே என் பையைத் தூக்கிக்கிறேன். நீ என்னைத் தூக்கிக்கிட்டு வந்தாப் போதும்..

தாத்தா: ???

63. **ஒருவர்:** அந்த ஆள் மாடு மாதிரி ஓட்டல்ல உழைச்சாரு..வேலையை விட்டு தூக்கிட்டாங்க!

மற்றொருவர்: ஏன்?

ஒருவர்: அவரு எப்ப பார்த்தாலும் அசை போட்டுக்கிட்டே இருந்தாரே!

64. **நண்பன் 1:** ஏன் மச்சி உனக்கு SMS ப்ரீதானா? எனக்கு அடிக்கடி SMS அனுப்பேன்!

நண்பன் 2: சரி மாப்ள.. எனக்கு இன்கம்மிங் கூடத்தான் ப்ரீ. நீ அடிக்கடி போன் பண்றீயா!

65. **ரமனன்:** சர்வர், நீங்க சாப்பிட்டாச்சா?

சர்வர்: ஏன் அக்கறையா கேட்கறீங்க?

ரமனன்: எது ஆர்டர் செஞ்சாலும் பாதி தான் வருது.

66. **ராமு:** அந்த ஆஸ்பத்திரியில நல்லா கவனிச்சுப்பாங்களாமே

குமாரு: அப்படியா?

ராமு: ஆமா ஊசி போட ஒரு நர்ஸ், தடவிவிட ஒரு நர்ஸ்-னு ரெண்டு பேர் இருக்காங்க!

67. **நண்பன் 1:** புத்திசாலியா இருந்தாலே பிரச்சனை, என் செருப்பு அறுந்து போயிடுது

நண்பன் 2: புத்திசாலியா இருந்தா எப்படி செருப்பு அறுந்து போகும்?

நண்பன் 1: என் புத்தியை அடிக்கடி செருப்பால அடிச்சுப்பேனே...!

68. **கவிதா:** எங்கப்பா யார் எது சொன்னாலும் நம்பிடுவார்.

சவிதா: சரி.. சுவர்ல ஜிமிக்கிய எதுக்கு மாட்டி வெச்சிருக்காரு.. அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?

கவிதா: சுவருக்கும் காது உண்டு-னு யாரோ அவர்கிட்ட சொல்லிட்டாங்க அதான்!

69. **வீட்டுக்காரர்:** உனக்கு எவ்வளவு வயசிருக்கும்?

திருடன்: ஏன் கேட்கிறே?

வீட்டுக்காரர்: நான் வயசுக்கு மரியாதை தருபவன். நீங்க போன பிறகு திருடன்-னு கத்தறதா, திருடர்-ன்னு கத்தறதான்னு சந்தேகம்.

70. **ஒருவர்:** கூட்ட நெரிசல் தாங்காமல் ஓடற பஸ்ஸிலிருந்து கீழே விழுந்துட்டாராம்!

மற்றவர்: அடப்பாவமே.. யாரு சார் அது? படிக்கட்டில் நின்னுகிட்டு இருந்தவரா..

ஒருவர்: இல்லை. பஸ்ஸை ஓட்டிக்கிட்டுப் போனவராம்!

71. **ராமு:** என் அண்ணன் ரொம்பவும் பகட்டு, ஒரு நாளைக்கு இரண்டு முறை உடைகள் மாற்றுவான்!

தாமு: அதிரடி ஜோக்ஸ் அது பரவாயில்லையே, என் இளைய தம்பி ஒரு நாளைக்கு 6 தடவைகூட உடை மாற்றுவான்.

ராமு: நெஜமாவா சொல்ற.. அவனுக்கு என்ன வயசு இருக்கும்?

தாமு: என்ன பொறந்து 3 மாதம் தான் ஆகுது!

72. **சுரேஷ்:** டெய்லி சமையல் நீங்கதான் பண்றீங்க, ஆனா அடுப்பை மட்டும் உங்க மனைவி தான் பத்த வைக்கிறாங்க, ஏன்?

தானேஸ்: அவதான் பத்தவைக்கிறதுல கில்லாடியாச்சே?

73. **ஹோட்டலுக்கு வந்தவர்:** மதுரை மல்லிப்பூ இட்லி கேட்டு 1 மணி நேரம் ஆகுது.. இன்னும் வரலையே?

சர்வர்: மதுரை என்ன பக்கத்துலய இருக்கு. உடனே கொண்டு வர..

74. **தானேஷ்:** என்னடா இவனோட கழுத்தறுப்பா போச்சே

சுரேஷ்: ஏன்டா என்னடா சொல்றான்

தானேஷ்: சாமிக்கு மொட்டை அடிக்கிறதா 8 முறை வேண்டிக்கிட்டனாம். 8 மொட்டையையும் ஒரே சமயத்தில் அடிச்சிட சொல்லி அடம்புடிக்கிறான்!

75. **சர்வர் 1:** நம்ம ஓட்டல் சரக்கு மாஸ்டருக்கு தொழில் பக்தி அதிகம்!

சர்வர் 2: எப்படி?

சர்வர் 1: நெற்றியில் சந்தனத்துக்கு பதிலா சாம்பாரை தடவியிருக்காரே!

76. **ராமு:** நா கம்ப்யூட்டர் வாங்கப் போறாண்ட விஜய்...

விஜய்: மச்சா, ஒரு தடவ நம்ம கைக்கு கம்ப்யூட்டர் வந்துட்டா, மொதல்ல fb போவோம் அப்புறம் நாசமா போவோம்!!!

ராமு: ???

77. **பையன்:** அப்பா, எனக்கு ஒரு doubt...

அப்பா: கேளுடா

பையன்: fb-ல எல்லா பொண்ணுங்களும் அண்ணா அண்ணா-னு கூப்பிடறாங்களே அப்போ அவங்க எல்லாம் ஐயர் பொண்ணுங்களா?

அப்பா: ??

78. **நண்பன் 1:** என் மச்சா இந்த முறையும் Lovers Day கொண்டாடல போல?

நண்பன் 2: எதுக்கு மச்சா எவனோ கட்டிக்கப்போற ஃபீகருக்கு எதுக்கிடா நாம விழா கொண்டாடனும்..

79. **Traffic police**: எதுக்காக சைக்கிள இங்கு படுக்க வச்சுட்டு போற?

public: இங்க சைக்கிளை நிறுத்தாதீர்கள்-னு போர்ட் வச்சிருக்கிங்களே அதாங்க....

80. **நண்பர்1:** எதுக்குடா அவனை இந்த அடி அடிக்குற...?

நண்பர் 2: ஐசிஐசிஐ என்பதன் அர்த்தம் என்ன-னு கேட்டா... நான் பார்க்க நான் பார்க்க நான்-னு சொல்லறான் பக்கிபய....

81. **சிவா:** ஜனவரி-14 க்கும், பிப்ரவரி-14 க்கும் என்ன வித்தியாசம்?

ஜீவா: ஒரு பொண்ணு பொங்கல் கொடுத்த அது ஜனவரி-14! அதே பொண்ணு அல்வாக் கொடுத்தா அது பிப்ரவரி-14!!

82. **காதலன்:** உனக்காக நான் பெத்தவங்களை விட்டுடு வந்துள்ளேன்.

காதலி: போடா .. உனக்காக நான் பெத்ததுகளையே விட்டுடு வந்துருக்கேன்.

83. **காதலன்:** நேற்று உன் வீட்டுக்கு போயிருந்தேன்.. நம்ம திருமணம் நடக்காதுன்னு நினைக்கிறேன் .

காதலி: ஏன்? எங்க அப்பாவை பாத்தியா?

காதலன்: இல்லை, உன் தங்கச்சிய பார்த்தேன் .

84. **போலீஸ்:** பஸ் எப்படிய்யா விபத்தில் சிக்கியது?

பஸ் டிரைவர்: நான் நல்லா தூக்கத்தில் இருந்தேன். எங்கிட்ட கேட்ட எப்படி தெரியும்.

85. **ராமன்:** என் மனைவி என்னை தெய்வமா மதிக்கிறாங்க.

தாமன்: அப்ப உங்களை மனுஷனாவே மதிக்கறதில்லைன்னு சொல்லுங்க

86. **மனைவி:** என்னங்க.. வேலை செய்யும் போது இடுப்புல கிள்ளாதிங்கன்னு எத்தன தடவ சொல்றது!

வேலைக்காரி: நல்லா கேளுங்கம்மா, நானும் எத்தனையோ தரம் சொல்லிட்டேன் அவரு கேக்குற மாதிரியில்ல !

87. **ஒருவர்:** நம்ம ஜோசியர் யோகம் அடிக்கப் போகுதுன்னு சொன்னது சரியாப் போச்சு

மற்றொருவர்: லாட்டரி ஏதாவது விழுந்ததா?

ஒருவர்: நீங்க வேற நேத்து என் பெண்டாட்டி யோகத்துக்கும், எனக்கும் சரியா சண்டை. கடைசில அவ அடிச்சுட்டா என் கன்னம் வீங்கிப் போச்சு

88. **ரமனன்:** சார், உங்ககிட்டே ஒரு மணி நேரம் பர்சனலா பேசணும் வீட்டுக்கு வரலாமா?

முராரி: ஐயய்யோ, வீட்டுக்கு வந்து என் டயத்தை வேஸ்ட் பண்ணாதீங்க ஆபீசுக்கே வந்துடுங்க ஒரு மணி என்ன, ரெண்டு மணி நேரம்கூட பேசலாம்

89. **கமலா:** என்னது, உன் வீட்டுக்காரர் கடிகாரத்தைப் பார்த்துக்கிட்டே சாப்பிடறாரு?

விமலா: டாக்டர்தான் அவரை டைம் பார்த்து சாப்பிடச் சொல்லியிருக்காரு.

90. **ஒருவர்:** நிறுத்துங்க சார்.. ஏன் படிச்சிட்டு இருக்கிற பையனை போட்டு இப்படி அடிக்கறீங்க?

அப்பா: சும்மா இருங்க சார்.. Exam-க்கு கூட போகாம ஒக்காந்து படிச்சிகிட்டே இருக்கான்!

91. **சிறுவன்:** அப்பா, கல்யாணம் பண்ண எவ்ளோ செலவாகும்?

தந்தை: தெரிலே பா.. இன்னும் செலவு பண்ணிட்டு தான் இருக்கேன் !

92. **girl:** நீங்க எனக்கு லவ் லெட்டர் கொடுத்த விஷயம் வீட்ல எல்லோருக்கும் தெரிஞ்சு போச்சு..

boy: ஐயையோ உன் தங்கச்சிக்குமா??

girl: ?????????

93. **girl :** ஏன்டா, நான்தான் உன்னை பிடிக்கலைன்னு சொல்லிட்டேனே.. அப்புறம் ஏன் என் பின்னாலையே சுத்துறே..

boy : இல்ல.. இந்த மூஞ்சியை வேற எவன் பார்க்கப்போரான்னு பார்க்கத்தான்.

girl : ???????????????

94. **வடிவேலு:** ஏண்டி.. நாம எவ்வளவு நாளைக்கு இப்படியே லவ் பண்ணிட்டு இருக்கறது??

தேவி: எனக்கு ஒரு நல்ல புருஷனும், உனக்கு ஒரு நல்ல பொண்டாட்டியும் வர்ற வரைக்கும்!

வடிவேலு: என்னாது?

95. **தோழி 1:** அவ்வளவு பெரிய கட்டுப்போட வேண்டிய அளவுக்கு உன் புருஷன் காதுல எப்படி அடிபட்டது?

தோழி 2: நீதானடி சொன்னே... தோசைக்கல் வாங்கினதை மறைக்காதே, உன் புருஷன் காதுல போட்ருன்னு சொன்ன.

தோழி 1: ????????

96. **girl:** எக்ஸாம் டைம்ல நாங்க டி.வி, ரேடியோ, கம்ப்யூட்டர், செல்போன் தொடவே மாட்டோம்.

boy: இவ்வளவு தானா? நாங்க புக்கையே தொட மாட்டோம்.

girl: ?????????

97. **ஒருவர்:** ஏன் சார் படிக்கிற பையனை போட்டு இப்படி அடிக்கிறீங்க?

மற்றவர்: சும்மா இருங்க சார், பரீட்சைக்கு கூட போகாம படிச்சுட்டே இருக்கான்!!

ஒருவர்: ????????

98. **கீதா:** ஏண்டி மாலா நீ ஏன் துவைக்கிற? வாஷிங் மெஷின் எங்க?

மாலா: அது ஆபீஸ் போயிருக்குடி !

கீதா: ???????????????

99. **வரவேற்பாளர்:** வாங்க..வாங்க.. நீங்க மாப்பிள்ளை வீட்டுக்காரரா? பொண்ணு வீட்டுக்காரரா?

கண்ணன்: இல்லைங்க நான் பொண்னோட பழைய வீட்டுக்காரருங்க.

வரவேற்பாளர்: ???????????

100. **லேடி:** நா உங்களை எங்கேயோ பார்த்து இருக்கேனே!

பிச்சைக்காரர்: ஓ மேடம், நாம ரெண்டு பேரும் ஃபேஸ்புக்ல ஃபிரெண்ட்ஸா இருக்கோம்.

லேடி: ????????

டாக்டர் பேஷண்ட் ஜோக்ஸ்

1. **நர்ஸ்:** பேஷண்ட் ஆபரேஷன் தியேட்டருக்கு வந்தாச்சு ஆனா, மயக்க மருந்து ஸ்டாக் இல்லை டாக்டர், என்ன செய்யறது?

டாக்டர்: ஆபத்துக்குப் பாவமில்லை.. என் கால் சாக்ஸை அவர் மூக்குக்கிட்டே லேசா காட்டிடு!

நர்ஸ்: ???????????

2. **டாக்டர்:** உங்க மனைவிக்கு தொண்டைல மைனர் ஆபரேஷன் தான் ரெண்டு நாள் மட்டும் அவங்களால பேச முடியாது!

ஒருவர்: அப்ப மேஜர் ஆபரேஷன் பண்ணா எவ்வளவு நாள் பேசமுடியாது டாக்டர்?

டாக்டர்: ????

3. **ஒருத்தர்:** டாக்டர்.. உங்க Certificate கொடுங்க..

டாக்டர்: ஏன்?

ஒருத்தர்: நான் 1 வீக் ஆபீஸ் லீவு.. அவங்க டாக்டர் Certificate கேட்குறாங்க அதான்.

4. **ஒருவர்:** என்ன டாக்டர், இந்த நடுராத்திரியிலே கிளினிக்கைத் திறந்து வெச்சிகிட்டு இருக்கீங்க?

டாக்டர்: தூக்கத்துல நடக்கற வியாதிக்காரன் எவனாவது வருவான்னுதான்.

ஒருவர்: ???

5. **நோயாளி:** டாக்டர், நீங்க எழுதிக் குடுத்த TONIC-ல காலைல ஒரு மூடி, ராத்திரிக்கு ஒரு மூடி சாப்பிட சொன்னீங்க??

டாக்டர்: ஆமாம்..

நோயாளி: ஆனா, அந்த Tonic bottle-ல ஒரே ஒரு மூடி தானே இருக்குது?

டாக்டர்: ?????

6. **நர்ஸ்:** ஐந்து நிமிஷம் கழிச்சு வந்திருந்தா இவரைக் காப்பாத்தியிருக்கலாம்!

நோயாளியின் உறவினர்: ஏன்?

நர்ஸ்: டாக்டர் ஊருக்குக் கிளம்பிப் போயிருப்பார் !

7. **நோயாளி:** வீட்டுக்கு போனா மறந்தாப்புல தூங்கிடுறேன் டாக்டர்.

டாக்டர்: இதிலொன்னும் தப்பில்லையே...

நோயாளி: திருடப் போன வீட்டுல தூங்கிட்டா நான் மாட்டிக்குவேனே டாக்டர்...!

8. **நோயாளி:** பகல் கனவு பலிக்குமா டாக்டர்...!

டாக்டர்: பலிக்காது ஏன் கேட்கறீங்க...?

நோயாளி: நீங்க ஆபரேசன் செஞ்சு, நான் பிழைக்கிற மாதிரி கனவு கண்டேன்.

9. **நோயாளி:** எதுக்கு டாக்டர் மூச்சை இழுத்துவிட சொல்றீங்க?

டாக்டர்: ஆபரேஷனுக்குப் பிறகு மூச்சுவிட முடியாது! அதான் இப்பவே ஆசைதீர இழுத்து விட்டுக்கங்க!

நோயாளி: ???????

10. **கோவிந்தன்:** டாக்டர், நான் போதைல தெரியாம ஒரு எலியை உசுரோட முழுங்கிட்டேன். என்னை காப்பாத்துங்க!

டாக்டர்: இந்தாங்க, இந்த எலிமருந்தை சாப்பிடுங்க. எலி செத்திடும். அப்புறம் ஈசியா வெளியில் எடுத்திடலாம்!

11. **நோயாளி:** டாக்டர் இவ்வளவு மருந்தையும் ரெண்டே நாள்-ல சாப்பிட்டு முடிக்கணும்-னு சொல்றீங்களே, ஏன்?
டாக்டர்: ரெண்டு நாளைக்கு அப்புறம் எக்ஸ்ப்ரி டேட் முடிஞ்சுடும்.
நோயாளி: ?????????

12. **நோயாளி:** டாக்டர் எனக்கு 3 மாதமா கடுமையான இருமல்?
டாக்டர்: அப்படியா? சும்மாவா இருந்தீங்க..
நோயாளி: இல்ல டாக்டர் இருமிக்கிட்டே தான் இருந்தேன்.

13. **டாக்டர்:** நீங்க உடனடியா மீன், ஆடு, கோழி சாப்பிடுவதை நிறுத்த வேண்டும்.
நோயாளி: அதுங்க சாப்பிடுவதை நான் எப்படி நிறுத்த முடியும் டாக்டர்.

14. **நோயாளி:** இரண்டு இட்லியைக் கூட முழுசா சாப்பிட முடியல டாக்டர்..?
டாக்டர்: என்னாலையும் முழுசா இரண்டு இட்லி சாப்பிட முடியாது, புட்டு புட்டுதான் சாப்பிடனும்!
நோயாளி: ??????????

15. **நர்ஸ்:** நீங்க அதிர்ஷ்டசாலி டாக்டர்...
டாக்டர்: எப்படி சொல்றீங்க?
நர்ஸ்: உங்களுக்கு ஏதாவது ஆப்ரேஷன்னா, நீங்க பண்ணிக்க வேண்டியதில்லை பாருங்க.

16. **நர்ஸ் 1:** இன்னிக்கு நம்ம டாக்டர் நாலு உயிர்களை காப்பாத்திட்டார்...!
நர்ஸ் 2: அப்படியா! எப்படி..!
நர்ஸ் 1: இன்னிக்கு நடக்க இருந்த 4 ஆபரேஷனையும் தள்ளி வச்சிட்டார்...!

17. **டாக்டர்:** அந்த ஹார்ட் பேஷண்ட் சாகக் கிடக்கிறார்ன்னா, அதுக்கு நீங்கதான் காரணம்!
நர்ஸ்: என்ன சார், குண்டைத் தூக்கி போடறீங்க?
டாக்டர்: பின்ன என்ன? 8 மணிக்கொருதரம் 2 மாத்திரை கொடுன்னு சொன்னா, 2 மணிக்கொருதரம் 8 மாத்திரை கொடுத்திருக்கே!

18. **நோயாளி:** ஊசிபோட்ட பிறகு எதுக்கு டாக்டர் ஸ்கேன் பண்ணனும்-னு சொல்றீங்க?

டாக்டர்: இல்ல, உள்ளபோன ஊசி இப்ப எங்க இருக்குன்னு பாக்க ஆசையா இருக்கு...

நோயாளி: ???

18. **தேவி:** டாக்டர் என் கணவருக்கு ஞாபகமறதி வியாதி அதிகமா போச்சு.

டாக்டர்: ஏன்?

தேவி: அவருதான் டாக்டர் சமையல் பண்றாரு ஆனா, சாப்பிடும் போது சமையல் நல்லா இல்லை-னு என்னையத் திட்டுறாரு.

19. **நர்ஸ் 1:** நம்ம டாக்டரோட ஞாபகமறதி நோய் குணமான சேதி கேட்டு எல்லோரும் ஷாக் ஆகிட்டாங்க!

நர்ஸ் 2: எதுக்கு?

நர்ஸ் 1: அவர் நிஜமாவே டாக்டர் இல்லையாம், வக்கீலாம்!

20. **நோயாளி:** சொத்துபத்து எக்கச்சக்கமா இருந்தும் என்ன பண்றது டாக்டர்..? கிட்னியிலே கல்லு இருக்கே?

டாக்டர்: கவலைப்படாதீங்க .. எல்லாத்தையும் கரைச்சுடுவோம்!

நோயாளி: ????????

21. **ராமு:** டாக்டர்.. என் மனைவி ஓவரா டி.வி. பாக்குறா

டாக்டர்: எந்த அளவுக்கு பாக்குறாங்க??

ராமு: கரண்ட் கட்டானாலும், டார்ச் அடிச்சி பாக்குற அளவுக்கு!!!

22. **ஒருவர்:** பச்சை கலர் மாத்திரை ஒரே கசப்பு. சிவப்பு கலர் டியூப் மாத்திரை சப்புனு இருக்கு. டானிக் நல்லா இனிக்குது.

டாக்டர்: இதை ஏங்க என்கிட்ட வந்து சொல்றீங்க?

ஒருவர்: நீங்க தானே மருந்து சாப்பிட்டு எப்படி இருக்குன்னு வந்து சொல்ல சொன்னீங்க... அதான்!

23. **தேவி:** டாக்டர், இவர் என் காதலர், நல்லவரா? கெட்டவரா? செக் பண்ணனும்.

டாக்டர்: ஓகே மேடம், செக் பண்ணி சொல்றேன். ஆனா, ஏன் மாதம் ஒரு புது ஆளோட வர்றீங்க?

காதலன்: ???????

24. **டாக்டர்:** எக்ஸ்ரே படத்தைப் பார்த்துத்தான் ரிசல்ட் சொல்லிட்டேனே... ஏன் அதை திரும்ப கொண்டு வந்துருக்கிறீங்க?

நோயாளி: இவ்வளவு பணம் செலவழிச்சு எடுத்த படத்தை ஏன் அந்த டாக்டர் கலர்ல எடுத்துத் தரலேன்னு என் பொஞ்சாதி திட்டறா டாக்டர்!

டாக்டர்: ????????

25. **நோயாளி:** எப்ப டாக்டர் எனக்கு பல் கட்டுவீங்க?

டாக்டர்: இருங்க கயிறு வந்துடட்டும்..!

நோயாளி: ?????????

26. **நோயாளி:** டாக்டர், எனக்கு இனிமே இதயத்தில எந்தப் பிரச்சினையும் இல்லையே?

டாக்டர்: கவலையேபடாதீங்க, இனிமே நீங்க உயிரோட இருக்கிற வரைக்கும் உங்க இதயம் நல்லா வேலை செய்யும்.

27. **டாக்டர்:** வாயில் என்ன கட்டு?

நோயாளி: எனக்குக் கொழுப்பு அதிகமாயிடுச்சு, வாயைக் கட்டணும்னு நீங்கதானே டாக்டர் சொன்னீங்க...

டாக்டர்: ??????

28. **ரமணன்:** நான் எதிர்காலத்துல ஒரு டாக்டராகவோ, இல்லே ஒரு பைலட்டாகவோ ஆகலாம்-னு இருக்கேன்...

வேலு: எப்படியோ ஜனங்களை மேல கொண்டுபோகறதுல குறியா இருக்க!!

ரமணன்: ??????

29. **நோயாளி:** டாக்டர், தூரத்துல உள்ளது தெரியமாட்டேங்குது டாக்டர்...

டாக்டர்: அப்படினா பக்கத்துல போயி பாக்க வேண்டியது தானே.....

நோயாளி: ?????????

30. **நர்ஸ் 1:** டாக்டர் ஏன் போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டை தேடி பதட்டமா அலையறாரு?

நர்ஸ் 2: ரீசன் ஃபார் டெத்ங்கற இடத்துல தெரியாம அவரோட கையெழுத்த போட்டுட்டாராம்.

நர்ஸ் 1: ?????

31. **டாக்டர்:** நாங்க கொடுத்த பில்லை ஏன் தூக்கிபோட்டீங்க

நோயாளி: நீங்க தானே டாக்டர் உங்க இதயம் வீக்கா இருக்கு கவலை தர்ற விஷயங்களை தூக்கி எறின்னு சொன்னீங்க

32. **பாபு:** டாக்டர், எனக்கு சொந்தம்னு சொல்லிக்க யாருமே இல்லை?

டாக்டர்: அப்போ...., ஆபரேஷன் முடிஞ்சதும் பாடியை யார் வந்து வாங்கிக்குவாங்க?

33. **நோயாளி:** என்ன டாக்டர் இது! மருந்து சீட்டில் சா-வுக்கு முன், சா-வுக்கு பின் அப்படினு போட்டிருக்கீங்க.

டாக்டர்: அதுக்கு ஏன் இப்படிப் பதர்றீங்க! சாப்பாட்டுக்கு முன், சாப்பாட்டுக்குப் பின் அப்படின்னு எழுதியிருக்கேன்.

34. **டாக்டர்:** சாரிங்க, நான் எவ்வளவோ போராடிப் பார்த்தேன், பேஷண்ட்டை காப்பாத்த முடியலை.

நர்ஸ்: டாக்டர் உளராதீங்க, நீங்க செஞ்சிட்டு வர்றது போஸ்ட்மார்ட்டம்!

35. **நோயாளி:** டாக்டர், என் பையன் அஞ்சு ரூபாய் காயினை முழுங்கிட்டான்...

டாக்டர்: சீக்கிரமா போய் பெரிய டாக்டரைப் பாருங்க!

நோயாளி: ஏன், நீங்க பாக்க மாட்டீங்களா..?

டாக்டர்: நான் ரெண்டு ரூபாய் காயின் வரைக்கும் தான் பார்ப்பேன்...

36. **நோயாளி:** டாக்டர், நான் அஞ்சு தடவை தற்கொலை முயற்சி செய்திருக்கேன் டாக்டர்.
டாக்டர்: முதல் தடவையே என்கிட்ட வந்திருக்கலாம்ல

37. **நோயாளி 1:** டானிக் சாப்பிடும் போது ஏன் ரூம் கதவை க்ளோஸ் பன்ரீங்க?
நோயாளி 2: டாக்டர் தான் 'அரை(றை) மூடி ' டானிக் குடிக்க சொன்னார்.

38. **டாக்டர்:** உங்க மாமியாரைக் காப்பாத்துறது கஷ்டம்
மருமகள்: நீங்க நல்ல டாக்டர்னு எல்லாரும் சொன்னது இப்பத்தான் டாக்டர் புரியுது.

39. **டாக்டர்:** நர்ஸ் அந்த பேஷண்டுக்கு எல்லா செக்-அப்பும் செய்துட்டீங்களா, பீ.பி. சுகர் ஏதாவது இருக்கா?
நர்ஸ்: ஒண்ணும் இல்லை சார்!
டாக்டர்: அட ஆச்சரியமா இருக்கே!
நர்ஸ்: சார்! பேஷண்ட் செத்து அரை மணிநேரமாச்சு!

40. **நோயாளி:** ஹலோ டாக்டர்... உங்களை வந்து பார்க்கணும்... நீங்க எப்ப ப்ரீ?
டாக்டர்: எப்ப வந்தாலும் ப்ரீ கிடையாது... பீஸ் வாங்குவேன்.....

41. **டாக்டர்:** நீங்க உடம்பைக் குறைக்கணும், இனிப்பைக் குறைக்கணும், காரத்தைக் குறைக்கணும்..
நோயாளி: டாக்டர், நீங்க பீஸ்ஸை குறைக்கணும்..

42. **நோயாளி:** நர்ஸ் எனக்கு காய்ச்சல் விட்டுவிட்டு அடிக்குது!
நர்ஸ்: விடாம அடிக்குறதுக்கு அதென்ன உங்க மனைவியா? காய்ச்சல்னா அப்படித்தான் அடிக்கும்!!

43. **டாக்டர்:** என்கிட்ட ட்ரீட்மென்ட் எடுத்த பிறகு சேஞ்ச் இருக்கா?
பேசண்ட்: பஸ்ல போகக் கூட சேஞ்ச் இல்ல டாக்டர் !
டாக்டர்: ??????

44. **டாக்டர்:** உடம்புக்கு அப்பப்ப வியாதிகள் வரத்தான் செய்யும். அதுக்கு பயந்துட்டு ஹாஸ்பிட்டல் வராம இருக்கறதா?
பேசன்ட்: நான் பயப்படறது வியாதிக்கு இல்ல டாக்டர் உங்களுக்கு..

45. **டாக்டர்:** உங்க உடம்ப குறைக்க தினமும் நான்கு மைல் நடக்கணும்!
பேசன்ட்: சரி டாக்டர்! நாளைக்கே நான்கு மயில் வாங்கி நடக்க வைக்கிறேன்!!

46. **நோயாளி:** இருமல் நிற்க மாட்டேங்குது டாக்டர்...
டாக்டர்: அப்படின்னா அங்க உட்கார வையுங்க...! இல்ல படுக்க வையுங்க...!
நோயாளி: ????????

47. **டாக்டர்:** ஏம்மா, அந்த பேசன்ட் பெயர் என்ன..?
நர்ஸ்: வாழவந்தான் சார்..?
டாக்டர்: அப்பறம், ஏம்மா அவன் இங்க வந்தான்..?

48. **பேசண்ட்:** டாக்டர்.. எனக்கு மூணு நாளா சரியான இருமல்...
டாக்டர்: மூணு நாளா சும்மவா இருந்தீங்க.
பேசண்ட்: இல்ல டாக்டர் இருமிட்டுதான் இருந்தேன்?

49. **டாக்டர்:** ஒரு மணி நேரம் முன்னாடி கொண்டுவந்திருந்தா, பேஷண்டை காப்பாத்தி இருக்கலாம் !
மற்றவர்: ஆக்ஸிடண்ட் ஆகியே அரை மணி நேரந்தான் ஆச்சு டாக்டர்.
டாக்டர்: ????????

50. **நோயாளி:** பகல்ல உங்களுக்குக் கண் தெரியாதா டாக்டர்?
டாக்டர்: தெரியுமே... ஏன் கேட்கறீங்க?
நோயாளி: இல்லை... பார்வை நேரம் மாலை 6 மணி முதல் 8 மணி வரை -ன்னு போர்ட் வச்சிருக்கீங்களே... அதான் கேட்டேன்?

51. **கணவன்:** டாக்டர்.. ! காலையில 8 மணிக்கு என் மனைவி மூச்சு பேச்சு இல்லாம விழுந்துட்டா டாக்டர்..

டாக்டர்: அடப்பாவி.. ! இப்போ மதியம் 3 மணி ஆகுது.. இவ்வளவு நேரம் என்னய்யா பண்ணினே..?

கணவன்: சந்தோசத்துல கையும் ஓடல.. காலும் ஓடல.. டாக்டர்..!

52. **நோயாளி:** டாக்டர், என் பொண்டாட்டி நைட்டு தூங்கவே மாட்டேங்குறா. முழிச்சு முழிச்சு பார்த்துக்கிட்டிருக்கா டாக்டர்

டாக்டர்: எப்போலேந்து இப்படி இருக்கு?

நோயாளி: எங்க வீட்டுக்கு அவ தங்கச்சி வந்ததிலேந்து டாக்டர்.

53. **ஒருத்தர்:** டாக்டர்... உங்க சர்ட்பிக்கெட் கொடுங்க..

டாக்டர்: ஏன்?

ஒருத்தர்: நான் 1 வீக் ஆபீஸ் லீவு.. அவங்க டாக்டர் சர்ட்பிக்கெட் கேட்குறாங்க..

டாக்டர்: ???

54. **டாக்டர்:** மாடில இருந்து எப்படி விழுந்திங்க?

நோயாளி: ஐயோ அம்மா-னு கத்திகிட்டே விழுந்தேன் டாக்டர்..!!

டாக்டர்: ?????

55. **டாக்டர்:** கவலைப்படாதீங்க, நீங்க நிச்சயமாய் அறுபது வயது வரை உயிரோடு இருப்பீங்க.

நோயாளி: ஐயோ டாக்டர், எனக்கு ஏற்கனவே அறுபது வயது ஆகிடுச்சு.

56. **பெண்:** ஹார்ட் அட்டாக் வந்தா என்ன முதலுதவி செய்யணும் டாக்டர்?

டாக்டர்: எதுக்கும்மா கேக்கறீங்க?

பெண்: பட்டுச்சேலை வாங்கின பில்லை என் கணவருக்கிட்ட காட்ட வேண்டிருக்கு அதான்..

57. **நோயாளி:** நாய் துரத்துற மாதிரியே கனவு வருது டாக்டர்.

டாக்டர்: அப்படியா மூணு, நாலு கல்லை வைத்துக்கொண்டு தூங்கு நாய் துரத்தாது.

58. **நர்ஸ்:** மூணாம் நம்பர் ரூம் பேஷண்ட், ரொம்ப நாள் இங்க இருப்பார்போல தெரியுது டாக்டர்!

டாக்டர்: எப்படி சொல்ற?

நர்ஸ்: சுவத்துல ஆணியடிச்சு அவரோட போட்டோவை மாட்டிட்டாரே?

59. **அப்பா:** டாக்டர், எம் பையன் அஞ்சு ரூவா காசை முழுங்கிட்டான்.

டாக்டர்: அப்படியா ! அப்ப ஸ்கேன் எடுக்கணும்.

அப்பா: காசை மட்டும் எடுங்க டாக்டர்.

60. **டாக்டர்:** உங்க பிரச்சினைக்கு என்ன காரணம்னு தெரியலை. ஒரு வேளை அளவுக்கு அதிகமா குடிச்சதால இருக்கலாம்னு நினைக்கிறேன்.

நோயாளி: பரவாயில்லை டாக்டர். நீங்க எப்போ குடிக்காம இருப்பீங்கன்னு சொல்லுங்க, நான் வரேன்.

61. **நோயாளி:** ஏன் டாக்டர் திடீர்னு கண்ணை மூடிக்கிட்டீங்க?

டாக்டர்: பார்வை நேரம் முடிஞ்சிடிச்சு, போயிட்டு நாளைக்கு வாங்க.

62. **டாக்டர்:** நர்ஸ்... அந்த நோயாளிக்கு பிபி இருக்கா?

நர்ஸ்: இல்ல?

டாக்டர்: பல்ஸ் இருக்கா?

நர்ஸ்: இல்ல?

டாக்டர்: சுகர் இருக்கா?

நர்ஸ்: உயிரே இல்ல, அப்புறம் எப்படி இது எல்லாம் இருக்கும்?

63. **டாக்டர்:** தெரியுமா சேதி..? இந்தியா ஒலிம்பிக்குல தங்கம் வாங்கியிருக்கு..!

நோயாளி: இதை ஏன் டாக்டர் இப்போ சொல்றீங்க..?

டாக்டர்: நீங்கதானே, ஆபரேசன் முடிச்சுட்டு வந்து நல்ல சேதி சொல்லுங்க டாக்டர்ன்னு கேட்டுகிட்டீங்க..!

நோயாளி: ???????????

64. **பெண்:** டாக்டர்! என் கணவருக்கு வர வர ஞாபக மறதி கூடிக்கிட்டே போகுது?

டாக்டர்: ஏன் என்ன செய்யறார்?

பெண்: திடீர் திடீர்னு என்ன சமைக்கச் சொல்லி சாப்பாடும் போடச் சொல்றாரு?

65. **மருமகள்:** வர வர மாமியார் தொல்லை அதிகமாகப்போச்சு ஆப்ரேசன் தேதி சொன்னிங்கன்னா கொஞ்சம் நிம்மதியா இருக்கும்?

டாக்டர்: ?????

66. **கணவன்:** டாக்டர் கல்யாணமாகி எட்டு வருசமாகியும் என் மனைவி வயத்துல ஒரு புழு பூச்சிகூட இல்லை?

டாக்டர்: வெரிகுட். நல்ல ஆரோக்கியமான உடம்புனு சொல்லுங்க!

கணவன்: ???

67. **டாக்டர்:** உங்க பையனுக்கு நாளை மேஜர் ஆப்ரேசன்?

தந்தை: டாக்டர்... என் பையன் ரொம்ப சின்னவன். மைனர் ஆப்ரேசன் வேண்ணா பண்ணுங்களேன்.

68. **ஒருவர்:** சின்ன ஆப்ரேசன் தான் பயப்பாடதீங்கனு நர்ஸ் ஆறுதல் சொன்னாங்க?

மற்றொருவர்: பரவாயில்லையே...

ஒருவர்: ஆறுதல் சொன்னது எனக்கு இல்லை ஆப்ரேசன் பண்ணப் போற டாக்டருக்கு...

69. **மனைவி:** டாக்டர்... என் கணவருக்கு தினமும் ஸ்கூட்டர் ஓட்டற மாதிரி கனவு வருது.

டாக்டர்: இதுக்குப் போய் வருத்தப்படுவாங்களா?

மனைவி: ஸ்கூட்டரை ஸ்டார்ட் பண்றேன்னு தினமும் ராத்திரி என்னை இல்லே உதைக்கிறாரு.

70. **நோயாளி:** கண்ணாடியை கழட்டிட்டா எதுவுமே தெரியமாட்டேங்குது டாக்டர்...

டாக்டர்: நிஜமாவா?

நோயாளி: ஆமாம், கண்ணாடியை கழட்டிட்டனா இல்லையான்னு கூட தெரியமாட்டேங்குது டாக்டர்.

71. **டாக்டர்:** உங்க மாமியாருக்குப் பண்ண ஆபரேசன்ல ஒரு சின்னத் தப்பு நடந்திருச்சு

பெண்: என்ன டாக்டர், நீங்க பெரிய தப்பு பண்ணுவீங்கங்கிற நம்பிக்கைலதானே உங்ககிட்டே கூட்டிட்டு வந்தேன்.

டாக்டர்: ????

72. **டாக்டர்:** குழந்தைக்கு தண்ணீர் கொடுக்கறதுக்கு முன்னாடி நல்லா கொதிக்க வெச்சுக் குடுங்க.

ஒருவர்: ஏன் டாக்டர், குழந்தைகளை அடுப்பில கொதிக்க வைக்கிறது தப்பில்லையா?

73. **நோயாளி:** ஆபரேசன் வேண்டாம்னு திரும்ப வார்டுக்கே அழைச்சிட்டு போறீங்களே ஏன் டாக்டர்?

டாக்டர்: நீங்க அதிர்ஷ்டகாரர் நான் எதிர்பார்த்த பணம் வேறு இடத்திலே இருந்து கிடைச்சிடுச்சு!

நோயாளி: ????????????????

74. **டாக்டர்:** எதுக்கு நாதஸ்வரத்தைக் கொண்டுவந்து என்கிட்டே காட்டுறீங்க...?

வித்வான்: நீங்கதானே என்னோட பீப்பி (PP) பார்க்கணும்னு சொன்னீங்க...

75. **ஒருவர்:** டாக்டர், மாடி மேல கிளினிக் வெச்சிருக்கீங்களே?

டாக்டர்: அதனாலே என்ன?

ஒருவர்: மேலே போகும் வழின்னு போர்டு வேற வெச்சிருக்கீங்களே... பேசண்ட்ஸ் எப்படி வருவாங்க?

76. **ஒருவர்:** ஹலோ டாக்டர், அவசரமா ஒரு நூறு ரூபாய் இருந்தா கொடுக்க முடியுமா?

டாக்ர்: யாருய்யா நீ டெலிபோன்ல கடன் கேட்கறது?

ஒருவர்: நான்தான் உங்க பேசண்ட். நீங்கதானே ஏதாவது அவசரம்னா உடனே போன் பண்ணச் சொன்னீங்க.

77. **டாக்டர்:** மனைவிக்கு ஆபரேசன் நடந்தப்போ அழுதுட்டிருந்தாரேன்னு, ஆபரேசன் சக்ஸஸ்ன்னு போய்ச் சொன்னேன்.

நர்ஸ்: சந்தோசமாயிட்டாரா?

டாக்டர்: இல்ல, இன்னும் அதிகமா அழ ஆரம்பிச்சுட்டார்.

78. **ஒருவர்:** உடம்பெல்லாம் கன்னாபின்னானு வேர்க்குது டாக்டர்.

டாக்டர்: கவலைப்படாதீங்க... செக் பண்ணிடலாம்...

ஒருவர்: நான் ட்ரீட்மெண்ட்டுக்கு வரலை டாக்டர், உங்க ஏ.ஸி. ரூம்ல கொஞ்ச நேரம் இருந்துட்டுப் போகலாம்னு வந்தேன்.

79. **ஒருவன்:** தூர எது இருந்தாலும் தெரிய மாட்டேங்குது டாக்டர்.

டாக்டர்: அப்ப கிட்டப்போய் பாருங்க.

ஒருவன்: நிலாவையெல்லாம் எப்படி டாக்டர் கிட்டே போய் பார்க்க முடியும்?

80. **ஒருவர்:** டாக்டர் அந்த ஆளு ஆபரேசன் செய்யச் சொல்லி நாயா அலையறாரு, நீங்க என்னடான்னா எதுவும் பேசாமலயே இருக்கீங்களே?

டாக்டர்: ஆபரேசன் செஞ்சா பேயா அலைவாரு பரவாலயா?

ஒருவர்: ??????????????????

81. **ஒருவர்:** டாக்டர்! டாக்டர்! வேகமாக ஓடினால் மூச்சிரைக்குது.

டாக்டர்: மெதுவா ஓடுங்களேன்.

ஒருவர்: பிக்பாக்கெட் அடிச்சிட்டு எப்படி மெதுவா ஓடுறது?

82. **நோயாளி:** ஏன் டாக்டர் வயிற்றில் ஆபரேஷன் பண்ணிட்டு தண்ணிக் குடிக்கச் சொல்றீங்க?

டாக்டர்: எங்காவது லீக் ஆகுதானு பார்க்கத்தான்...!

நோயாளி: ????

83. **பெண்:** டாக்டர்.. என் மாமியார் பிழைச்சிடுவாங்களா?

டாக்டர்: உங்க மாமியார் பிழைச்சிட்டாங்க. இன்னும் ஒரு நிமிசம் லேட்டா வந்திருந்தா உயிரோட பார்க்க முடியாது.

பெண்: பாழாப் போன ஆட்டோக்காரன் சீக்கிரமா வந்து தொலைச்சிட்டான்.

84. **ஒருவர்:** டாக்டர்.... பிளாஸ்டிக் சர்ஜரி செய்ய எவ்வளவு செலவாகும்...?

டாக்டர்: ஐந்து லட்ச ரூபாய் ஆகும்ங்க...!

ஒருவர்: ஒருவேளை நாங்களே பிளாஸ்டிக்கை கொண்டு வந்துட்டா எவ்வளவு குறைப்பீங்க...?

டாக்டர்: ????????????????

85. **நோயாளி:** ஒரு மாசமா என்னால வாயை திறக்கவே முடியலை சார்...!

மருத்துவர்: என்னாச்சி?

நோயாளி: போன மாசம் தான் எனக்கு கல்யாணம் ஆச்சு.

86. **நோயாளி:** டாக்டர் நீங்க ஆபரேஷன் செய்தா பிழைக்க மாட்டாருனு சொல்கிறார்களே..?

டாக்டர்: எந்த மடையன் சொன்னான்..? முப்பது வருசமா ஆபரேஷன் செய்துதானே நான் பொழைச்சிட்டு வரேன்..?

87. **டாக்டர்:** எங்க ஆ காட்டுங்க!

நோயாளி: அந்த ஜன்னல் வழியா பாருங்க... செவுத்துல எழுதியிருக்கு.

டாக்டர்: ????

88. **நோயாளி:** டாக்டர் என்னால எந்த வீட்டு வேலையும் செய்ய முடியலை. என்ன காரணம்னு சொல்லுங்க.

டாக்டர்: எல்லாம் பரிசோதித்து விட்டேன். கடைசியா தான் தெரிஞ்சது.. நீங்க ஒரு சோம்பேறின்னு...

89. **டாக்டர்:** உடம்புக்கு ஆயிரம் வியாதி வரத்தான் செய்யும் அதுக்காக இப்படி பயந்தா எப்படி?

நோயாளி: நான் பயப்படறது நோய்க்கு இல்ல டாக்டர், உங்களுக்கு தான்.

90. **நோயாளி:** டாக்டர் இந்த ஆப்ரேஷன்ல நான் பிழைச்சிடுவேனா?

டாக்டர்: அது தெரியாது, ஆனா கடன் தொல்லையில் இருந்து நான் பிழைச்சிடுவேன்.

நோயாளி: ??????????????????

91. **ஒருவர்:** அந்த டாக்டர் ஏன் டெய்லர் கழுத்த புடுச்சி வெளில தள்றாரு?

மற்றொருவர்: இந்த மருத்துவமனையில டாக்டர் பண்ற எல்லா ஆபரேஷனுக்கும் தான் தையல் போடணும்னு கேட்டாராம்.

ஒருவர்: ???

92. **டாக்டர்:** காலிலே பாம்பு கடிச்சி 5 நிமிஷம் கூட ஆகலையே எப்படி செத்தாரு.

நோயாளியின் உறவினர்: விசம் தலைக்கு ஏறாம இருக்க, கழுத்தில் இறுக்கமா கட்டிட்டோம் டாக்டர்.

டாக்டர்: ??????????????

93. **நர்ஸ் 1:** அந்த பேஷண்ட் ரஜினி ரசிகர்-ன்னு நினைக்கிறேன்.

நர்ஸ் 2: எப்படிச் சொல்றே?

நர்ஸ் 1: நான் ஊசி போட்டதும் என் வலி தனி வலின்னு சொல்றாரு.

94. **மருத்துவர்:** நான் கொடுத்த மருந்துல ஏதாவது சேஞ்ச் இருந்துதா?

நோயாளி: பாட்டிலை காலி பண்ணிக்கூடப் பார்த்துட்டேன் டாக்டர், ஒரு ஐம்பது பைசா கூட இல்ல...

மருத்துவர்: ????

95. **நோயாளி:** என் பொண்டாட்டி தொல்லை தாங்கமுடியல. ஏதாவது ட்ரீட்மெண்ட் பண்ண முடியுமா?

டாக்டர்: அது தெரிஞ்சா நான் ஏன் 24 மணிநேரம் ஹாஸ்பிட்டல் வைச்சுருக்கேன்!

நோயாளி: ??????????????

96. **நோயாளி:** கஷ்டமா இருக்கு டாக்டர்.

டாக்டர்: எதுக்கு?

நோயாளி: நர்ஸ்ஸை சிஸ்டர்னு கூப்பிடறது....

97. **டாக்டர்:** நான் எழுதிக் கொடுத்த மருந்துல ஏதாவது இம்ப்ரூவ்மென்ட் இருக்கா?

நோயாளி: ஓ... இருக்கே போன தடவை 25 ரூபால இருந்தது. இப்ப 40 ரூபா ஆகி இருக்கு.

டாக்டர்: ???????????

98. **டாக்டர்:** தண்ணியை காய்ச்சி வடிகட்டி குடிக்க சொன்னேனே செஞ்சியா?

நோயாளி: அப்படி செஞ்சதுக்கு தான் போலீஸ்ல புடிச்சிட்டு போயிட்டாங்க டாக்டர்!

டாக்டர்: ???????

99. **நோயாளி:** டாக்டர்! இந்த ஆபரேஷனுக்காக நான் நிறைய பேர்கிட்டே கடன் வாங்கி இருக்கேன்...

டாக்டர்: கவலைப்படாதீங்க ஆபரேஷனுக்கு அப்புறம் எந்த கடன்காரனும் உங்களைத் தேடி வரமாட்டாங்க!

நோயாளி: ????????

100. **நோயாளி:** டாக்டர் எனக்கு இது முதல் ஆபரேஷன் அதான் ரொம்பப் பயமா இருக்கு.

டாக்டர்: எனக்கும் தான் இது முதல் ஆபரேசன் நான் எங்கேயாச்சும் பயப்படறேனா?

சர்தார்ஜி ஜோக்ஸ்

1. **சர்தார் 1:** டேய் எதுக்குடா மெழுகுவத்தி ஏத்தி இருக்க?

சர்தார் 2: கரண்ட் இல்லடா..

சர்தார் 1: சரி! சரி, பேனையாவது போடு..

சர்தார் 2: லூசாடா நீ? மெழுகுவத்தி அணைஞ்சிடாது?

2. **நெப்போலியன்:** என்னுடைய அகராதியில் முடியாது என்கின்ற வார்த்தையே கிடையாது!!

சர்தார்ஜி: இப்போ சொல்லி என்ன பிரயோசனம், அகராதி வாங்கும்போதே பார்த்து வாங்கியிருக்கணும்..

நெப்போலியன்: ????????

3. **சர்தார்ஜி:** ஏன் இவங்களெல்லாம் தலை தெறிக்க ஓடுறாங்க?

மற்றவர்: இது ஓட்டப் பந்தயம். முதலில் ஓடுபவருக்கு பரிசு உண்டு...

சர்தார்ஜி: முதலாவது ஓடுபவருக்குத்தான் பரிசு என்றால் எதுக்கு மற்றவர்கள் ஓடுகீறார்கள்?

மற்றவர்: ?????

4. **இண்டர்வியூ அதிகாரி:** வேலைக்கு சேரும்போது மாதம் 5000 ரூபாய் சம்பளம். ஆறாவது மாசத்திலிருந்து சம்பளம் 8000 ரூபாய்.

சர்தார்ஜி: அப்ப நான் ஆறாவது மாதமே வேலைக்கு சேர்ந்துக்கிறேன் சார்.

இண்டர்வியூ அதிகாரி: ??????

5. **டாக்டர்:** இந்த நோய் குணமாகணும்னா தினமும் 10 டம்ளர் தண்ணீர் குடிக்கணும்!

சர்தார்ஜி: அது மட்டும் முடியாது டாக்டர்!

டாக்டர்: ஏன்?

சர்தார்ஜி: எங்க வீட்டுல 4 டம்ளர் தான் இருக்கு டாக்டர்.

6. **சர்தார்ஜி:** இந்த புக் ஒரே போர்! வெறும் கேரக்டர்கள் பெயர்தான் இருக்கு! கதையே இல்லை!

லைப்ரேரியன்: வாடா வா! நீதான் நேத்து டெலிபோன் டைரக்டரியை தூக்கிட்டுப் போனதா?

7. **தபால்காரர்:** உங்க பார்சலை கொண்டுவர நான் ஏழு கிலோ மீட்டர் நடந்து வருகிறேன்.

சர்தார்: ஏன் இவ்வளவு தூரம் நடக்கறீங்க. பேசாம தபால்ல அனுப்பி இருக்கலாமே?

8. **சர்தார்:** தம்பி நீ என்ன படிச்சிருக்க?

பையன்: பி.எ.

சர்தார்: அடப்பாவி!படிச்சதே ரெண்டு எழுத்து! அதையும் தலை கீழாபடிச்சிருக்கே!

9. **சர்தார் 1:** எதுக்கு ஓட்டைக் குடையை எடுத்துட்டு வந்திருக்கீங்க?

சர்தார் 2: இல்லேன்னா மழை நின்னுடுச்சுன்னா எப்படித் தெரியும்?

10. **Sardar:** ஹலோ யார் பேசுறது

Lady: நான் செல்லம்மா பேசுறேன்

Sardar: நான் மட்டும் என்ன கோவமாவ பேசுறேன்?

11. **ஜோசியர்:** உங்க தோஷம் நிவர்த்தி ஆகனும்ன 36 வயசு பொண்ண கல்யாணம் பண்ணனும்

சர்தார்: ரெண்டு 18 வயசு பொண்ணுங்கள கட்டிக்கலாமா ஜோசியரே.

12. **சர்தார் 1:** எதுக்கு சர்தார் butter-ஐ ஜன்னல் வழியா தூக்கிப் போடுறீங்க?

சர்தார் 2: butterfly பாக்கத்தான்.

13. **டாக்டர்:** கொசு கடிக்காம இருக்க இந்த க்ரீமைத் தடவுங்க..!

சர்தார்ஜி: அதெப்படி டாக்டர், ஒவ்வொரு கொசுவையும் பிடிச்சி இந்தக் க்ரீமைத் தடவுறது?

14. ரயில் பயணம் செய்த சாம் சிங் தோளில் பைனாகுலர் தொங்கிக் கொண்டிருந்தது.

அருகிலிருந்தவர்: ஏன் பைனாக்குலரை பயன்படுத்தாமல் வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டார்?

சாம் சிங்: நான் என் தூரத்து உறவினரை பார்க்க போகிறேன். அதுக்குத்தான் எடுத்துச் செல்கிறேன்.

15. **பாலாஜி:** ஒருவழியா பேசித் தீர்த்துட்டேன்....

சர்தார்ஜி: ஏதாவது பிரச்சினையா...?

பாலாஜி: ம்ஹூம்... என் செல்போன்ல இருந்த பேலன்ஸை பேசித் தீர்த்துட்டேன்...!

16. **ஒருவர்:** எதுக்கு ஆட்டோ சக்கரத்தை கழட்டிக்கிட்டு இருக்கீங்க? எனக் கேட்டார்.

சர்தார்: போர்ட்ல என்ன போட்டிருக்கங்கனு பாருங்க. Parking for Two Wheelers only!. அதுக்கு தான் கழட்டிக்கிட்டு இருக்கேன்.

17. **காதலி:** ஹலோ எங்க இருக்க?

சர்தார்ஜி: உன்னை பார்க்கத்தான் பைக்ல வந்துகிட்டிருக்கேன்!

காதலி: எதுக்கு வர்ற? வீட்ல யாரும் இல்லை!!

சர்தார்ஜி: ஐ!! யாரும் இல்லையா? **(**இதுக்கு மேல பேசினா வர வேண்டாம்னு சொல்லிடுவா!**)** ஹலோ ஹலோ! போனை கட் செய்துவிடுகிறார்.

18. **சர்தார்:** மூட்டையில என்ன அண்ணே இருக்கிறது?

நண்பர்: வேறொன்றுமில்லை கோழிதான்..

சர்தார்: அண்ணே பையில் எத்தனை கோழிகள் இருக்கிறது என்று நான் சரியாக சொன்னால், எனக்கு ஒரு கோழி தருகிறீர்களா?

நண்பர்: ஒன்னு என்ன இந்த இரண்டையுமே நீ எடுத்துக் கொள்

சர்தார்: அஞ்சு கோழி, சரியா?..

19. **சர்தார்ஜி 1:** இவிங்கதான் என்னோட மனைவி கிளாரா!

சர்தார்ஜி 2: எனக்கு முன்னமே தெரியும்!

சர்தார்ஜி 1: எப்படித் தெரியும்?

சர்தார்ஜி 2: அது ஒரு கதை. நானும் கிளாராவும் ஒண்ணா தூங்கும்போது பார்த்திட்டாங்க!

சர்தார்ஜி 1: என்னாது? ஒண்ணாவா?

சர்தார்ஜி 2: காலேஜ்ல மேத்ஸ் பீரியட்ல ரெண்டுபேரும் ஒண்ணா தூங்கும்போது HOD பார்த்திட்டார்.

20. ஒரு நாள் லைப்ரரியியனிடம், சர்தார்ஜி: என்ன புத்தகம் இது.. தலைப்பு இருக்கு.. நிறைய கதா பாத்திரங்களின் பெயர் இருக்கு ஆனா கதையே இல்லையே?

லைப்ரரியன்: அடப்பாவி காணோம்னு நாங்க தேடிக்கிட்டு இருக்குற டெலிபோன் டைரக்டரிய தூக்கிட்டு போனது நீதானா?

21. **சர்தார்ஜி:** என்ன உங்க வீட்டு காப்பி ஒரே ஃப்னாயில் வாசனை அடிக்குது..

கோபி: நான் தான் சொன்னேனே...என் மனைவி வெளுத்ததெல்லாம் பாலுன்னு நினைச்சுடுவான்னு.

22. சர்தாரின் இரண்டு காதுகளும் சிவந்து போய் இருந்தது.... டாக்டர் கேட்டார் அச்சச்சோ என்னாச்சு

டாக்டர் நான் துணிக்கு அயர்ன் செஞ்சிட்டு இருந்தப்போ.... போன் வந்திடுச்சு போனுக்கு பதிலா அயர்ன் பாக்ஸை காதுல வெச்சு

அது.... சரி அந்த காது?

அதே ஸ்கவுண்டரல் திரும்ப போன் பன்னிட்டான்

23. **மேலாளர்:** நீங்கள் எங்கு பிறந்தீர்கள்.

சர்தார்: இந்தியா

மேலாளர்: இந்தியாவில் எந்த பகுதி.

சர்தார்: முழு உடலும்தான் சார்.

24. **முதலாளி:** புதிதாக வேலையில் சேர்ந்த சர்தார் இரவு 8 மணிவரை கம்ப்யூட்டரில் வேலை செய்ததை கண்ட முதலாளி சந்தோஷத்துடன் ஏன்னபா இவ்வளவு நேரம் வேலை பாக்குற என்ன வேலை செய்தாய்....

சர்தார்: அதுவா சார் கம்ப்யூட்டர் கீபோர்டுல a,b.c (alphapets) எல்லாம் மாறி இருந்தது அத சரி செய்தேன்...

25. கோர்ட்டில்,

ஜட்ஜ்: ஆர்டர்.. ஆர்டர்.. ஆர்டர்..

சர்தார்: பிட்சா, ரெண்டு இட்லி, மூணு தோசை, நாலு பூரி, அஞ்சு வடை, ஒரு கூல் ட்ரின்க்...

ஜட்ஜ்: ஷட் அப்..

சர்தார்: இல்ல.. இல்ல.. எனக்கு செவன் அப்..

ஜட்ஜ்: ???????

26. **சர்தார் (கவலையுடன்):** வேய்ட்டான படிப்பு படிச்சும் எனக்கு இன்னும் வேலை கிடைக்கலையே...

நண்பர்: அப்படி என்ன படிப்பு படிச்சீங்க?

சர்தார்: pre-KG, LKG, UKG எல்லாம் படிச்சு இருக்கோம்ல..

27. **சாமு:** அண்ணே, வாழ பிடிக்கலணே

சர்தார்ஜி: வாழ பிடிக்கலன்னா தென்ன மரம் வைக்க வேண்டியது தானடா

28. **சர்தார்ஜி:** என்னணே அவனை போட்டு அடிக்கிறீங்க?

சாலினி: சக்கரை வாங்கிட்டு வீட்டுக்கு வந்து பாத்தா 100கிராம் குறைவா இருக்கே ஏன்டான்னு கேட்டா... நடந்தா சுகர் குறையும்னு சொல்றான்..

29. சர்தார் இருபது ரூபாய் கொடுத்து ஒரு லாட்டரி சீட்டு வாங்கினார். பரிசு ஒரு கோடி விழுந்தது. கடைக்காரர் வரி பிடித்தம் போக 55 இலட்ச ரூபாய் கொடுத்தார்.

சர்தார் கோபமாக யாரை ஏமாத்தப் பார்க்கறே.? ஒரு கோடி முழு பரிசையும் தா. இல்லேன்னா என் இருபது ரூபாய மரியாதையா திருப்பிக் கொடு என்றார்.

30. சர்தாரும் மனைவியும் ஒரு காஃபி ஷாபிற்கு போனாங்க.

சர்வரை கூப்பிட்டு தம்பி ரெண்டு ஹாட் காஃபியே கொடு ஒரு எக்ஸ்ட்ரா டம்ளர் குடுத்துருபா

மனைவி கடிந்து கொண்டார் பாப்ரே பாப்...நான் கோல்ட் காஃபி தானே கேட்டேன்

நான் தான் எக்ஸ்ட்ரா டம்ளர் கேட்டிருக்கேன்ல ஆத்தி குடுக்குறேன். அவங்களே ஆத்தி கொடுத்தா ரேட் ஜாஸ்தி மா

31. ஓவிய கண்காட்சிக்கு சென்றிருந்த சர்தார் புலம்பினார்

ஹையோ... என்ன மார்டர்ன் ஆர்ட்டோ,.. மோசமா இருக்கே

பக்கத்தில் இருந்தவர் ஜி அது கண்ணாடி

32. பார்க்கில் ஒருவர் சர்தாரிடம் கேட்டார்....

ஏன் மன்மோகன் சிங் காலைல வாக்கிங் போகாம சாயங்காலமா வாக்கிங் போறார்?

சர்தார் அரே பாய்.... அவரு P.M ... A.M இல்லே...

33. தெருவில் போன சர்தாரை நாய் துரத்த எப்படியோ தப்பிச்சு மாடி ஏறினார்.

இதை மேலிருந்து கவனித்தவர் ஏன் சிரிச்சிக்கிட்டே வரீங்க

ஹி..ஹி... நான் ஹட்சில் இருந்து இப்ப ஏர்டெல்லுக்கு மாறிட்டேன் அதுக்கு தெரியல போல...

34. இங்கிலீஸ் ஆசிரியர் எல்லோரையும் கிரிட்கெட்டை பற்றி கட்டுரை எழுத சொன்னாங்க

சர்தாரிடம் அதுக்குள்ள எழுதியிட்ட யா எங்கே காட்டு

DUE TO RAIN NO MATCH

35. **வேலைக்காரன்:** இரண்டு சீப்பு வாழப்பழம் வாங்கிட்டு வர சொன்னாங்க வாங்கி கொடுத்தா கழுவி கழுவி ஊத்துராங்க நீங்களே சொல்லுங்க செஞ்சது சரியா தப்பா??

சர்தார்ஜி: சரி..

முதலாளிம்மா: இரண்டு சீப்பு வாழப்பழம் கேட்டா, 2சீப்பு,1 வாழைப்பழம் வாங்கிட்டு வந்திருக்காங்க!

36. சர்தாருக்கு நடந்த விவாகரத்து

சர்தாரும் அவர் மனைவியும் விவாகரத்துக்கு மணு கொடுத்தனர்.

நீதிபதி: உங்களிடம் மூனு குழந்தைகள் உள்ளனர். இப்போ பிரிஞ்சீங்கன்னா? சிக்கல் வரும்.

சர்தார்: சரி. அப்ப நாங்க அடுத்த வருசம் வர்ரோம் ஐயா.

37. சர்தார்ஜியும், பணியாளும்

சர்தார்: (பணியாளிடம்) போயி செடிக்கு தண்ணீர் ஊத்து.

பணியாள்: நல்ல மழை பெய்து கொண்டிருக்கிறது முதலாளி ஜி.

சர்தார்: அதனாலென்ன? குடையை எடுத்துக் கொண்டு போ.

38. சர்தாரும் ஆசிரியரும்

ஆசிரியர்: (மக்கள் தொகை பற்றிய பாடம் நடத்தியபோது) இந்தியாவில் ஒவ்வொரு பத்து விநாடிக்கும் ஒரு பெண் ஒரு குழந்தை பெற்றெடுக்கிறாள்.

சர்தார்: (அவசரமாக எழுந்து நின்று) சார் உடனடியாக அந்தப் பெண்ணை நாம் கண்டுபிடித்து அதை தடுத்து நிறுத்தவேண்டும்.

39. சர்தாரும் அவரது பெண் தோழியும்

சர்தார்: (தன் நண்பியிடம்) இரவுக்கு என் வீட்டுக்கு வா. யாரும் இருக்க மாட்டார்கள்.

தோழி: சர்தாரின் விட்டுக்கு இரவு சென்றார். உண்மையில் யாருமே அங்கு இல்லை. சர்தார் உட்பட

40. முட்டாள் சர்தார்ஜிகள்

இரண்டு சர்தார்கள் ஜாலியாக தனி விமானத்தில் பறந்து கொண்டிருந்த போது இரண்டு விமானங்களும் மோதிக் கொண்டு குஜராத் சுடுகாட்டில் விழுந்து இறந்து விட்டனர்.

உள்ளூர் சர்தார்கள் அவர்களின் சடலங்களை தேடி மண்ணை தோண்டி வருகின்றனர். இதுவரை 500 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இன்னும் தோண்டிக் கொண்டிருக்கிறார்களாம்.

41. பஸ் பயணிகள்

சர்தார் பெருமையாக தன் நண்பரிடம் சொன்னார். என் தாத்தா சாகும் போது அமைதியாக எந்த சத்தமும் போடாமல் பஸ்சில் தூக்கத்திலிருக்கும்போது செத்தார்.

ஆனால் அவர் ஓட்டிக்கொண்டிருந்த பஸ் பயணிகள்தான் அலறிக் கொண்டே செத்தார்கள்

42. ரயிலில் சரியாத்தூங்க முடியவில்லை.

சர்தார்: நேற்று ரயிலில் சரியாத்தூங்க முடியவில்லை.

நண்பர்: ஏன்?

சர்தார்: மேல் பர்த் (Upper Berth) தான் கிடைத்தது

நண்பர்: கீழுள்ளவருடன் பேசி மாற்றிக் கொண்டிருக்கலாமே?

சர்தார்: செஞ்சிருக்கலாம். ஆனா கீழே யாரும் இல்லே.

43. **மேலாளர்:** உன் தகுதி என்ன?

சர்தார்: நான் Ph.D

மேலாளர்: Ph.Dன்னா என்ன?

சர்தார்: Passed high school with Difficulty.

44. **சர்தார்ஜி 1:** ஏய் வா, போலீஸ் கிட்ட போய் குடுத்துட்டு வருவோம்.

சர்தார்ஜி 2: வழியில ஏதாவது ஒண்ணு வெடிச்சிடுச்சுன்னா?

சர்தார்ஜி 1: போலீஸ் கிட்ட பொய் சொல்லிடுவோம் ஒண்ணுதான் கிடைச்சதுன்னு.

45. **சர்தார்ஜி 1:** AB க்கு போர் அடிச்சா என்ன செய்யும்?

சர்தார்ஜி 2: CD போட்டுப் பார்க்கும்!

46. **சர்தார்ஜி 1:** EF க்கு உடம்பு சரி இல்லன்னா எங்க போகும்?

சர்தார்ஜி 2: GH க்குப் போகும்!

47. **சர்தார்ஜி 1:** IJKL க்கு எனிமி யாரு?

சர்தார்ஜி 2: MN (எமன்) தான்!

48. **சர்தார்ஜி 1:** OP ரேசனுக்குப் போனா?

சர்தார்ஜி 2: Q லதான் நிக்கும்!

49. **சர்தார்ஜி 1:** RS க்கு தலை வலிச்சா?

சர்தார்ஜி 2: T குடிக்கும்!

50. **சர்தார்ஜி 1:** UVWXY க்கு பறக்கனும்னா?

சர்தார்ஜி 2: Z (ஜெட்)ல போகும்!

51. **சர்தார் 1:** டேய் எதுக்குடா மெழுகுவர்த்தி ஏத்தி வச்சிருக்கே

சர்தார் 2: கரண்ட் இல்லடா

சர்தார் 1: சரி... சரி அந்த பேனையாவது போடு

சர்தார் 2: ஏண்டா உனக்கு அறிவு இருக்குதா ... மெழுகுவர்த்தி அணைஞ்சுடாது?

52. சர்தார் டிக்கட் கிழிப்பவரிடம் திரும்ப திரும்ப சொன்னார்

நாங்க 19 பேரு... நாங்க 19 பேரு

இன்னொருத்தர் இருந்தா ...20 பேரு ஆகி இருக்குமே?

19 பேரு சேர்க்கரதுக்கே ரெம்ப கஷ்டமா போச்சுது, இது 18 ப்ளஸ் படம் தானே 19 பேர் போதுமே

53. ப்யூனை கூப்பிட்டு அவசரமாக ஒரு பிளம்பரை கூட்டி வரச்செய்தார் புரெபசர் சர்தார்.

உங்கள எதுக்கு இங்க வரச் சொன்னன் தெரியுமா?

பிளம்பர் தலையை சொரிந்து கொண்டே தெரியலயயே சார்

ஃஃக்வெஸ்டின் பேப்பர் லீக்காகிடுச்சாம் சீக்கரம் கண்டுபிடிச்சு அடைக்கனும்

கடி ஜோக்ஸ்

1. **ஒருவர்:** உங்கள் மகனை ஏன் மண்ணெண்ணெய் ஊற்றிக் குளிக்க வைக்கிறீர்கள்?

மற்றவர்: அவன் மிகவும் துரு துரு வென்று இருக்கான் அதான்?

ஒருவர்: ??

2. **ஒருவர்:** டேம்ல வேலை பார்க்கிறவரோட பெண்ணைக் கட்டினது பெரிய வம்பாப் போச்சுன்னு சொல்றீயே ஏன்?

மற்றவர்: தினமும் ஐந்தாறு கன அடி கண்ணீர் விடுறா?

ஒருவர்: ???

3. **சுரேஷ்:** உங்க மனைவிக்கு நாய் கடிச்சதா கேள்விப்பட்டேன் நீங்க முதல்ல என்ன செஞ்சீங்க?

ரமேஷ்: உடனே அந்த நாய்க்கு பிரியாணி வாங்கி போட்டேன்.

சுரேஷ்: ???

4. **மேனேஜர்:** டைப்பிஸ்ட் வேலை கேட்டு வந்திருக்கியே, முன் அனுபவம் இருக்கா?

வேலை கேட்பவர்: நிமிஷத்துக்கு இருபது பேருக்கு எஸ்.எம்.எஸ் அனுப்புவேன் சார் இது போதுமா சார்.

மேனேஜர்: ????

5. **அப்பா:** மகளே, முன்னாடி நீ என்னை அப்பானு ஆசையோட கூப்பிட்டுகிட்டுருந்தியே.. ஏன் இப்பெல்லாம் டாடின்னு கூப்பிடுற?

மகள்: அப்பான்னு கூப்பிட்டா லிப்ஸ்டிக் கலஞ்சிடும் டாடி அதான்.

அப்பா: ???

6. **ஒருவர்:** மாப்பிள்ளைப் பையனுக்கு மாத வருமானம் ஐய்யாயிரம். வீட்டை விட்டு எங்கேயும் போக வேண்டியதில்லை.

மற்றொருவர்: என்ன வேலை?

ஒருவர்: ரிட்டயர்டு ஆகிப் பென்சன் வாங்குறார்!

7. **ஒருவர்:** போலீஸ் செலக்சன் முடிஞ்சதுக்கு அப்புறம் எதுக்கு வந்த.?

மற்றவர்: எல்லாம் முடிஞ்சதுக்கு அப்புறம் வந்தாதானே சார் போலீஸ்...!

ஒருவர்: ???

8. **மகன்:** அப்பா எங்க காதலுக்கு தடை போடாதீங்க. எங்க காதல் தெய்வீகக் காதல்!

அப்பா: அது என்னடா தெய்வீகக் காதல்?

மகன்: என் பெயர் பரமசிவம். என் காதலி பெயர் பார்வதி. அதை வெச்சுத்தான்!

9. **நீதிபதி:** நீ செய்த குற்றத்துக்காக உனக்குத் தூக்கு தண்டனை விதிக்கிறேன்.
குற்றவாளி: எவ்வளவு வெயிட்டைத் தூக்கணும் சார்?
நீதிபதி: ???

10. **தந்தை:** டேய்! எப்பவுமே நம்மளைவிட வயசுல பெரியவங்ககிட்ட மரியாதையா நடந்துக்கணும் புரியுதா?
மகன்: ஏம்பா அப்படின அம்மா உங்களைவிட வயசுல பெரியவங்களா?
தந்தை: ???

11. **ராமு:** அவன் தான் அவங்கவீட்டுல கதவுமாதிரி?
சோமு: அது என்னடா கதவுமாதிரி?
ராமு: அவன வீட்ல யார்வேணாலும் போட்டு சாத்து சாத்துன்னு சாத்துவாங்க!

12. **அப்பா:** ஏண்டா பார்முலா-லாம் விரல்ல எழுதி வச்சுருக்க
மகன்: எங்க ஆசிரியர் தான் சொன்னாங்க பார்முலா-லாம் ஃபிங்கர் டிப்ஸ்ல இருக்கனும்னு.
அப்பா: ??????

13. **நபர் 1:** கோபம் வந்தால் அழுது தீர்த்துடறா என் மனைவி!
நபர் 2: நீ பரவாயில்லே என் மனைவி என்னை அடிச்சுத் தீர்த்துடறா!

14. **பக்கத்துவீட்டுகாரர்:** உங்க வீட்ல எப்பவும் சிரிப்பு சத்தம் கேக்குதே?
ராமு: மனைவி என்மேல பாத்திரத்த தூக்கி போடுவா. மேல படலேன்னா நான் சிரிப்பேன்! பட்டதுன்னா அவள் சிரிப்பா.

15. **திருடன்:** திருடுவியா.. திருடுவியான்னு போலீஸ் அடி பின்னிட்டாங்க.
நண்பன்: அப்புறம்?
திருடன்: திருடுறேன்னு உறுதியா சொன்னப்புறம் தான் விட்டாங்க.

16. **ஒருவர்:** காணும் பொங்கலப்ப கடற்கரையில் கூட்ட நெரிசலைக் குறைக்க போலீஸ் என்ன நடவடிக்கை எடுத்திருக்காங்க..?

கட்சிக்காரர்: தலைவரை பேச வைக்கப் போறாங்களாம்!

ஒருவர்: ???????????

17. **நண்பர் 1:** மேனேஜர் இன்னிக்கு மதியத்துக்கு மேலதான் ஆபீஸ் வருவார்னு எப்படிச் சொல்றே?

நண்பர் 2: காலையில 6 மணிக்கு நான் வாக்கிங் போகும்போது, அவர் ஏ.டி.எம் வரிசையில் நின்னுட்டு இருந்தாரே.

நண்பர் 1: ???????????

18. **அமைச்சர்:** மன்னா, நாட்டில் பஞ்சம் தலைவிரித்து ஆடுகிறது?

மன்னன்: ரிப்பனை கட்டிக் கொண்டு ஒலுங்க ஆடச்சொல்லும் அமைச்சரே?

அமைச்சர்: ???????????

19. **தொண்டர் 1:** தலைவர் எதுக்கு அவர் மனைவி பண்ண பொங்கலை கட்சி ஆபீஸ்-க்கு எடுத்துக்கிட்டு போறாரு..?

தொண்டர் 2: போஸ்டர் ஒட்டறதுக்காம்..!

தொண்டர் 1: ???????????

20. **திருடன் 1:** டேய் நேத்து நாம திருடுன பணத்த எண்ணாமகூட ஒளிச்சி வச்சிட்டோமே..

திருடன் 2: அதுனால என்ன நாளைக்கு பேப்பர்-ல வரும்ல அப்ப பார்த்துக்களாம்.

21. **அப்பா:** ஆண்டவன் கிட்ட எனக்கு நல்ல புத்தியக் கொடுன்னு வேண்டிகடா..

பையன்: ஆண்டவா! எங்கப்பாவுக்கு நல்ல புத்தியக்கொடு...

22. **அறிவாளி 1:** மச்சி லேப்டாப் வாங்கிட்டு அடுத்து துணிக்கடைக்கு போகனும், ஞாபகப்படுத்து....

அறிவாளி 2: ஏன்டா நேத்துதானே ட்ரெஸ் எடுத்த மறுபடியுமா?

அறிவாளி 1: இல்லடா, லேப்டாப்ல விண்டோஸ்லாம் இருக்குமாமே, அதுக்கு கையோட நல்லதா ஒரு ஸ்க்ரீன் வாங்கி தெச்சி வெச்சிடலாம்னுதான்...

23. **தோழி 1:** சொன்னதெல்லாம் கேக்கற நாய் ஒண்ணு வளர்த்தியே இப்ப எங்கேடி அது காணோம்!

தோழி 2: எனக்குத் தான் இப்ப கல்யாணம் ஆயிடுச்சே அதனால அதை வித்துட்டேன்!

24. **ராமு:** சார், ஆஸ்பத்திரிக்கு எப்படி போகணும்?

சோமு: நோயோடதான்!

ராமு: ??????

25. **ஜக்கு:** I'm going to sleep இதுக்கு என்னடா மீனிங்?

மக்கு: நான் தூங்க போறேன்.

ஜக்கு: டேய்... ப்ளீஸ் டா..... பதில் சொல்லிட்டு தூங்கப்போடா.

26. **போலீஸ்:** எதுக்கு அவரை ஓட ஓட விரட்டிக் கொலை செஞ்சே?

திருடன்: நான் ஓடவேணாம்னுதான் சொன்னேன்... அவர் கேக்கலை எஜமான்!

27. **நபர் 1:** கண்டக்டர் ஏன் விசிலுக்கு பதிலா சங்கை ஊதறார்?

நபர் 2: டிரைவர் புதுசாம், டிரைவிங் அரைகுறையாத்தான் தெரியுமாம்! அதான்....

28. **அமைச்சர்:** ஏன்யா... எனக்கு மேடையில நாற்காலி போடல?

தொண்டர்: நீங்கதானே தலைவரே எனக்கு நாற்காலி ஆசை இல்லைன்னீங்க...!

அமைச்சர்: ??????

29. **பேரன்:** தாத்தா! இனிமே கம்ப்யூட்டர் படிச்சாதான் வேலை கிடைக்கும்!

தாத்தா: அப்ப..... நீ படிச்சா கிடைக்காதா?

பேரன்: ??????????

30. **சோமு:** டேய்! ஒரு 10 ருபாய் இருந்தா கொடு!!
ராமு: என்னிடம் சுத்தமா இல்ல....
சோமு: பரவாயில்லை கொடு, நான் சுத்தம் பண்ணிக்கிறேன்!

31. **தொண்டர்:** தலைவரே, ஆற்காட்டு ரோட்ல பயங்கர டிராஃபிக் ஜாம்!
தலைவர்: அதை ஏன் எங்கிட்ட வந்து சொல்றே?
தொண்டர்: கூட்டம் உள்ள இடத்துல பேசணும்-னு நீங்கதானே ஆசைப்பட்டிங்க!

32. **தொண்டர்:** தலைவரே பணத்துக்கெல்லாம் ஏன் Fair & Lovely தடவிக்கிட்டு இருக்குறீங்க?
தலைவர்: அதை தடவினா கருப்பெல்லாம் வெள்ளையாகும்-னு சொன்னாங்க, அதான்.
தொண்டர்: ????

33. **பெண்:** என் பர்த்டேக்கு என்ன தருவே?
ஆண்: என்ன வேணும்?
பெண்: ஒரு ரிங் கொடு போதும்..
ஆண்: ம்ம்.. ஓகே.. பட் அட்டன் பண்ணக்கூடாது.. Balance போய்டும்.. சரியா..

34. **வைத்தியர்:** இப்பதானே தேள் கொட்டிடுச்சினு மருந்து வாங்கிட்டுப் போனீங்க? மறுபடி வந்து இருக்கீங்களே, எதற்கு?
ரமேஷ்: இப்ப மருந்து கொட்டிடுச்சி.
வைத்தியர்: ????????

35. **கண்டக்டர்:** படியில் நிக்காதப்பா. உள்ளேதான் கடல் மாதிரி இடம் இருக்கே. உள்ளே வா!
மாணவன்: எனக்கு நீச்சல் தெரியாது.... அதுதான் கரையிலேயே நிக்கிறேன்...
கண்டக்டர்: ???????

36. **நண்பர் 1:** உன் மகனுக்குத் திருமண ஆசை வந்துடுச்சின்னு எப்படிச் சொல்றே?

நண்பர் 2: முகூர்த்த நாளெல்லாம் காலண்டர்ல பெரிய வட்டம் போட்டு வைச்சிருக்கானே !

நண்பர் 1: ??????????????

37. **மாமனார்:** மாப்பிள்ளைக்கு காது கேக்காதுங்கற விஷயம் தலை தீபாவளி அன்னிக்குத்தான் தெரிஞ்சது!

அத்தை: எப்படி?

மாமனார்: இந்த வருஷம் தீபாவளிக்கு ஏன் யாருமே பட்டாசு வெடிக்கலைன்னு கேட்டாரு!

38. **மகள்:** Valentine's Day அப்படினா என்னம்மா?

அம்மா: எதுக்கு நீ கேக்குற?

மகள்: காலையில அப்பா யாருக்கோ போன் பண்ணி Valentine's Day வாழ்த்துகள்-னு சொன்னாரே..

39. **ஒருவர்:** என்னோட இராசி, நட்சத்திரம் எல்லாத்தையும் கேட்டுட்டு, வீட்டுக்குள்ள ஜோசியர் போறாரே, எதுக்கு?

மற்றவர்: கொஞ்சம் அவசரப்படாம இருங்க.. பேப்பரைப் படிச்சிட்டு வந்து உங்களுக்கு பலன் சொல்லுவாரு...

ஒருவர்: ?????????

40. **ஒருவர்:** இந்தச் சின்ன ஆபரேஷனுக்கு ஆயிரம் ரூபாய் பீஸா? சரியான பகல் கொள்ளையாயிருக்கே! டாக்டர் யாரு?

மற்றவர்: தெரியலைங்களே! முகமூடி போட்டிருந்தாரு!

ஒருவர்: ????????

41. **ஒருவர்:** உங்களுக்குத் தேவை இல்லாதது ஏதாவது இருந்தால் போடுங்கள். காசு கொடுக்கிறேன்.

மற்றொருவர்: ஒரு நிமிஷம் இருங்க, என் மனைவியைக் கூப்பிடுகிறேன்.

ஒருவர்: ???????

42. **நண்பர்:** டாக்டர் உன்னை எதுக்குத் திட்டறாரு?

பெயிண்டர்: 'மீண்டும் வருக'ன்னு போர்டு எழுதச் சொன்னாரு. நான் 'மீண்டு வருக'ன்னு எழுதிட்டேன். அதான்...

43. **பாபு:** உன் மனைவி யாருக்கு ஓட்டுப் போடுவாங்க?

கோபு: நான் யாருக்கு ஓட்டுப் போடுவேனோ, அவருக்குத்தான்.

பாபு: சரி, நீங்க யாருக்கு ஓட்டுப் போடுவீங்க?

கோபு: அதை இன்னும் என் மனைவி முடிவு செய்யவில்லையே!

44. **நீதிபதி:** நகைகளை திருடியதாக உன் மீது தொடரப்பட்ட வழக்கில் நீ குற்றவாளி இல்லைன்னு நிரூபணம் ஆயிடுச்சி. நீ போகலாம்.

குற்றவாளி: அப்படீன்னா திருடிய நகைகளை நானே வச்சுக்கட்டுமா சார்?

நீதிபதி: ??????

45. **ராமு:** காதலர்கள் ஏன் எப்பவும் பொய்யே பேசுறாங்க?

சோமு: அவங்க 'மெய்' மறந்து காதலிக்கிறவங்களாச்சே!

ராமு: ??????????

46. **சுரேஷ்:** தாமு மீன் தொட்டிக்கு தண்ணிவிடு.

தாமு: எதுக்கு சார் அனாவசியமா? நேத்திக்கு ஊத்துன தண்ணியையே அது இன்னும் குடிக்கல.

சுரேஷ்: ???????

47. **ஒருவர்:** என்ன தரகரே, பொண்ணு வீட்டுக்கு கூட்டிட்டு போறேன்னு சொல்லிட்டு, சுடுகாட்டுக்கு கூட்டி வந்திருக்கீங்க?

மற்றவர்: நீங்க தானே, அடக்கமான பொண்ணு வேணும்னு பிரியப்பட்டீங்க...

ஒருவர்: ?????

48. **சுரேஷ்:** நேத்து ஆபீஸிலிருந்து வீட்டுக்குப் போகும்போது பக்கத்து வீட்டுக்குப் போயிட்டேன்.

ரமேஷ்: அப்புறம்?

சுரேஷ்: களைப்பா வந்திருப்பீங்க... காபியோட வரேன்னு குரல் கேட்டது. சரி, இது நம்ம வீடு இல்லைன்னு புரிஞ்சுக்கிட்டு வெளிய வந்துட்டேன்...

49. **ரியா:** நான் நீச்சல் கத்துக்கிறேன்

மாயா: எங்கே?

ரியா: தண்ணியிலதான்...!

50. **சிபி:** என் தாத்தா கடி ஜோக் சொல்ல மாட்டார்.

தருண்: ஏன்?

சிபி: அவருக்குத்தான் பல் இல்லையே

51. **நண்பன்1:** என்னங்க தலையிலே காயம்?

நண்பன் 2: விறகு இடிச்சிட்டது.

நண்பன் 1: பார்த்துப் போகக்கூடாது, ஆமா விறகு எங்க இருந்துச்சி?

நண்பன் 2: என் பொண்டாட்டி கையில..

52. **நண்பன் 1:** தினமும் உன் மனைவிக்கு பூ வாங்கிட்டுப் போறியே.. அவ்வளவு பாசமா மனைவி மேல?

நண்பன் 2: மாப்ளே! பாசம் மனைவி மேலே இல்லடா பூக்காரி மேல!

53. **நண்பன் 1:** ஆசையே துன்பத்துக்குக் காரணம்-னு இப்பதான் நான் தெரிஞ்சுக்கிட்டேன்!

நண்பன் 2: எப்படி?

நண்பன் 1: என் மனைவியை நான் ஆசைப்பட்டுத் தானே கல்யாணம் பண்ணிக்கிட்டேன்

54. **நண்பன் 1:** நேத்து உன் மனைவிக்கும், உன் அம்மாவுக்கும் நடந்த சண்டைல, யாருக்கு பின்னாடி நீ நின்ன?

நண்பன் 2: போடா நான் பத்திரமா பீரோ பின்னாடி போய் நின்னுக்கிட்டேன்

55. **நண்பர் 1:** இதோ தர்றேன் அவசரப்படாதீங்க எல்லாருக்கும் உண்டு அப்டீன்னு 100, 200-ன்னு ரூபாய அள்ளி வீசுறாரே அவர் என்ன பெரிய கோடீஸ்வரரா?

நண்பர் 2: நீ வேற வாங்கின கடனை திருப்பி வாங்க சம்பளத்தன்னிக்கி ஆபிஸ்க்கே கடன்காரங்க வந்திருக்காங்க.

56. **அப்பா:** உலகத்துலயே காசுதாண்டா முக்கியம் காசு இல்லன்னா எதையுமே வாங்க முடியாதுடா.
மகன்: ஏன் கடன் வாங்கலாமே!

57. **வேலு:** நாங்கள் ஏழு பேர்கள் ஒரே குடையின் கீழ் நடந்து சென்றோம். ஆனால், ஒருவர் கூட நனையவில்லை.

ரமனன்: அதெப்படி?

வேலு: மழையே பெய்யவில்லையே!

58. **ராமு:** வரதட்சணை வாங்குவது தப்புன்னு முன்னாடி சொன்னீங்க. இப்ப சரின்னு சொல்றீங்களே, ஏன்?

சோமு: அப்ப என் பொண்ணுக்குக் கல்யாணம். இப்ப என் பையனுக்குக் கல்யாணம்.

59. **ராமு:** எதுக்கு நீங்க சாப்பாட்டுல கோந்தைக் கலந்துக்கறீங்க .. ..?

சோமு: அப்பதான் சார், சாப்பாடு உடம்புல ஒட்டுது

60. **ஜிட்டு:** எதுக்கு ரத்த சம்பந்தமான புத்தகங்களை விழுந்து விழுந்து படிக்கறே?

கிட்டு: நாளைக்கு எனக்கு ப்ளட் டெஸ்ட்!!

ஜிட்டு: ???

61. **ஒருவர்:** டாக்டர் எழுதிக் கொடுத்ததுல மேல உள்ள மருந்து மட்டும் இல்ல.

மற்றொருவர்: மேல உள்ளது மருந்து இல்ல என்னோட பேரு.

62. **ராமு:** முதலாளி எனக்கு கல்யாணமாயிருச்சு.. கொஞ்சம் சம்பளத்தை சேர்த்துக் கொடுங்க..

முதலாளி: கம்பெனி வளாகத்துக்கு வெளியே நடக்கற விபத்துகளுக்கு நான் நஷ்டஈடு தர இயலாது..!

63. **போலீஸ்:** என்னம்மா உங்க கணவர் காணாம போய் இருபது நாள் ஆச்சுன்னு சொல்றீங்க.... ஏன் இவ்வளவு நாள் கழிச்சு வந்து கம்ப்ளைண்ட் பண்றீங்க?

மாலா: இன்னிக்குத் தான் சார் அவரோட சம்பள நாள்.

64. **அமலா:** புகுந்த வீட்டுல பெண்கள மதிக்க மாட்டேங்குறாங்க.

விமலா: அப்படி என்ன செய்றாங்க?

அமலா: மாமியார், மருமக சண்டைக்கு வாய்ப்புக் குடுக்காம மாட்டிங்கிறாங்களே

65. **தாமு:** டேய்! ஏன்டா ஃபேனை ஆப் பண்ணிட்ட?

ராமு: எங்கப்பா தான் சொல்லி இருக்காரு, வியர்வை சிந்தி சாப்பிடனும்-னு!

66. **அமலா:** நேற்றைய பார்ட்டில, உன் கணவர் குடிச்சிருப்பதை எப்படி கண்டுபிடிச்சே?

விமலா: ஜன கண மன-விற்குக் கைதட்டினாரே

67. **அமலா:** என் மருமகள்களுக்கு இடையே கடுமையான போட்டி.

விமலா: எதுக்கு?

அமலா: என்கூட யார் முதல்ல சண்டை போடுறதுன்னு தான்.

68. **அமலா:** என்னடி, நீ வேலைக்காரி சேலையைப் போய் கட்டியிருக்க?

விமலா: அப்பத்தான்டி என் புருசன் ஏறெடுத்தே என்னைப் பாக்குறாரு.

69. **அமலா:** உன் வீட்டுக்காரர் காலையில கோலமெல்லாம் போடுறாராமே..?

விமலா: யார் சொன்னா?

அமலா: என் வீட்டுக்காரர்தான். காலையில கோலம் போடும்போது, பார்த்தாராம்.

70. **அப்பா:** ஏண்டா உஜாலா பாட்டில கீழ போட்டு தாண்டிகிட்டு இருக்குற?

மகன்: எங்க ஸ்கூல்ல நாளைக்கு நீளம் தாண்டுற போட்டி இருக்கு. அதுக்கு தான் பிராக்டீஸ் பண்ணி கிட்டு இருக்கேன்.

71. **நண்பர் 1:** எதுக்குய்யா உன் மனைவியைத் தூக்கி வீட்டுக்கு வெளியே எறிந்தாய்?

நண்பர் 2: ஒரு மகான்தான் கவலையைத் தூக்கி எறி வாழ்க்கையில் முன்னேறலாம்-னு சொன்னார்.

72. **அமுதா:** என் மகன் ரொம்ப புத்திசாலி. ஒரு தீப்பெட்டி வாங்கினா அதுல ஐம்பது குச்சி இருக்கான்னு எண்ணிப் பார்த்து தான் வாங்கிட்டு வருவான்.

குமுதா: என் மகன் உங்க மகனை விட புத்திசாலி. எல்லா குச்சியும் எரியுதான்னு கொளுத்திப் பார்த்துட்டு தான் வாங்கிட்டு வருவான்.

73. **தொண்டன் 1:** நம்ம தலைவரையே ஒருத்தன் தலைகுனிய வச்சிட்டானே!

தொண்டன் 2: யார் அவன்?

தொண்டன் 1: நம்ம தெருமுனையில இருக்குற சலூன் கடைக்காரன் தான் !

74. **அப்பா:** நம்மைவிடப் பெரியவங்கள யார் திட்டினாலும் நாம அவர்களை எதிர்த்துப் பேசக் கூடாது..

பையன்: அப்படின்னா? அம்மா உங்களை விடப் பெரியவங்களா? அப்பா..

அப்பா: ???????

75. **மகன்:** அப்பா, பக்கத்துக்கு வீட்ல இருக்குறவங்க ஏழையா அப்பா?
அப்பா: இல்லடா, பணக்காரங்கதான், ஏண்டா கேட்குற?
மகன்: அப்போ ஏன்பா அவங்க பையன் வெறும் 10 பைசா முழுங்குனத்துக்கு இப்படி ஒப்பாரி வைக்குறாங்க?
அப்பா: ????????

76. **தொண்டர்:** தொகுதிப் பக்கம் ஏன் தலை காட்டலைனு ஆர்பாட்டம் செய்தவங்களை எப்படிச் சமாதானப்படுத்தினீங்க?
தலைவர்: ஹிஹி... தலையில பொடுகுன்னு சொல்லி சாமாளிச்சுட்டேன்!

77. **அமலா:** அவங்க ரெண்டு பேருக்குள்ளே என்ன சண்டை.
விமலா: அவங்களுக்குள்ளே ஆயிரம் இருக்கும்.
அமலா: அப்ப ஆளுக்கு ஐநூறா பிரிச்சுக்க வேண்டியது தானே!

78. **வேலைக்காரன் 1:** 1 ஆம் தேதி பொறந்தா முதலாளி டாண்னு சம்பளம் போட்டுருவாரு.
வேலைக்காரன் 2: ஐய்யய்யோ...நான் 10 ஆம் தேதியில்ல பொறந்தேன்?
வேலைக்காரன் 1: ??????

79. **அம்மா**: ஏண்டா பிரிட்ஜுக்குள்ள போய் உங்க அப்பா பேரை எழுதி வச்சிருக்கே?
மகன்: என் அப்பாதான் என்னோட பேரு கெட்டுப் போயிராம பாத்துக்கோடான்னு சொன்னாரு.. அதான்!

80. **அரசியல்:** மாணவர்களே! நீங்க யாரும் அரசியலில் ஈடுபடாதீர்கள்.
மாணவர்கள்: ஏன்?
அரசியல்: நாங்கள் யாரவது படிப்பில் ஈடுபடுகிறோமா?

81. **நண்பர்1:** என்ன சார் கார் டேங்கை ஓபன் பண்ணிட்டு சிரிக்கிறீங்க?
நண்பர்2: மனசு விட்டு சிரிச்சா 'ஆயில்' கூடுமின்னு சொன்னாங்க அதான்!

82. **அப்பா:** படிப்புக்கும் உனக்கும் ரொம்பதூரம்னு பையங்கிட்ட சொன்னதை தப்பா புரிஞ்சுக்கிட்டான்.

அம்மா: ஏன் என்னாச்சு..?

அப்பா: அமெரிக்கா போய்தான் படிப்பேன்னு அடம் பிடிக்கிறான்.

83. **ராமா:** FM-ல வேலைக்கு சேர்ந்தது தப்பா போச்சுடா?

பீமா: ஏன்டா?

ராமா: சம்பளம் கேட்டா, கேளுங்க, கேளுங்க, கேட்டுக்கிட்டே இருங்கன்னு சொல்றாங்கடா.

84. **அண்ணன்:** ரூமை மூடிகிட்டு ஏன்டா மருந்து சாப்பிடுற?

தம்பி: டாக்டர் தான் 'அறை' மூடி மருந்து சாப்பிட சொன்னார்?

85. **சோமு:** அடடே, ராமுவா? ஆள் அடையாளமே தெரியலியே?

ராமு: அடையாளமே தெரியாதப்போ நான் ராமுன்னு எப்படி கண்டுபிடிச்சே?

சோமு: ????????

86. **சிபிஐ:** எப்படி ஹெலிகாப்ட்டர் ஆக்சிடென்ட் ஆச்சு?

பைலெட்: இமயமலையின் மேலே செல்லும்போது எனக்கு ரொம்ப குளுருச்சி அதான் ஹெலிகாப்ட்டர் பேன்ன ஆப் பண்ணிட்டேன்.

சிபிஐ: ????????

87. **சுப்பு:** ஏண்டா, நான் சொன்ன ஜோக்குக்கு குதிச்சு குதிச்சு சிரிக்கற?

அப்பு: ஏன்னா? எனக்கு விழுந்து விழுந்து சிரிக்கத் தெரியாது. அதனால தான்....

88. **தபால்காரர்**: சார் உங்களுக்கு மணி ஆர்டர் போட்டிருங்காங்க....

வாடிக்கையாளர்: எவன்டா அவன் மணி? எனக்கு ஆர்டர் போடறது?

89. **தொண்டன்**: தலைவரே நம்ம பேச்சு மக்களுக்கு பிடிக்காம, செருப்பு வீசுறாங்க... வாங்க ஓடிடலாம்...!

தலைவன்: இருய்யா.. எனக்கு ஒரு செருப்புத் தான் கிடைச்சிருக்கு...!

90. **அமலா:** ஏன் உங்க பையன் படுத்துகிட்டே சாப்பிடுகிறான்?

கமலா: வேலைவெட்டி போகாம உட்கார்ந்துகிட்டு சாப்பிடுறியே வெட்கமா இல்லையான்னு கேட்டேன் அதான்...

அமலா: ????

91. **சுரேஷ்:** ஏன்டா, இவ்ளோ மெல்ல. லெட்டர் எழுதற?

ரமேஷ்: எங்கப் அப்பாவால வேகமா படிக்க முடியாது அதான்டா?

92. **பேரன்:** பாட்டி நான் ஓட்டப்பந்தயத்தில் கலந்துக்கப்போறேன் என்னை ஆசீர்வாதம் பண்ணுங்கோ பாட்டி...

பாட்டி: பார்த்து மெதுவா ஓடுப்பா...

பேரன்: ????

93. **தொண்டன் 1:** தலைவருக்கு தேர்தல் பற்றிய அனுபவம் இல்லேன்னு நினைக்கிறேன்..

தொண்டன் 2: ஏன்?

தொண்டன் 1: ஓட்டை பிரிச்சா வெற்றி நிச்சயம்-ன்னு சொன்னதுக்கு, நான் ஒரு காலத்துல கொத்தனாரா இருந்தவன் தான்னு சொல்லிட்டு கூரைமேல ஏறிட்டாரு.

94. **திருடன்:** ஏங்க நாலுமுறை உங்க வீட்டில திருடியிருக்கேன். உங்களுக்கு கொஞ்சம் கூட மனிதாபிமானமே கிடையாதா...

வீட்டுக்காரர்: என்னப்பா சொல்ற?

திருடன்: போலீஸ்ல கம்ப்ளைண்ட் செய்து என்னைப் பெரிய திருடனாப் பதிவு பண்ணுங்க சார்.

95. **ஒருவர்:** மேட்டூர் அணை ஒரு நாளிலேயே ஆறு அடி உயர்ந்தன்னு கட்டுக்கதை விடறாங்க பேப்பர்ல..

மற்றொருவர்: எப்படி சொல்ற...

ஒருவர்: நான் தினமும் அணையை பார்க்கிறேன். கொத்தனார் அணை எப்படி கட்டினாரோ, அப்படியே தான் இருக்கு.

96. **கமலா:** நான் என்ன சொன்னாலும், என் மருமகள் உங்க வாய்க்கு சர்க்கரைதான் போடணும் அத்தைனு சொல்றா !

ரத்தனா: இதிலே என்ன இருக்கு?

கமலா: எனக்கு தான் சர்க்கரை வியாதி இருக்கே!

97. **மன்னர்:** எதிரி நாட்டு மன்னனை வென்று நாம் புதிய புவியியல் படைப்போம்!

அமைச்சர்: மன்னா! அது புவியியல் இல்லை.. வரலாறு?

மன்னர்: யோவ்.. விடய்யா! ஒரு ப்ளோவுல ரைமிங்கா வந்துடுச்சி!

98. **கடைக்காரர்:** சீக்கிரம் ஒரு பேக் கொடுங்க. ரயிலைப் பிடிக்கணும்?

வாடிக்கையாளர்: ஐயோ, அவ்வளவு பெரிய பேக் நம்மகிட்ட இல்லைங்க?

99. **மன்னர்:** புலவரே! என்னை புகழ்ந்து ஒரு உலா எழுதுங்களேன்!

புலவர்: உங்களை வைத்து பீலா வேண்டுமானால் எழுதலாம் உலாவெல்லாம் முடியாது மன்னா!

100. **பிச்சைக்காரன் 1:** அந்த டாக்டர் வீட்டுக்கு பிச்சை எடுக்க போனியே என்ன ஆச்சு?

பிச்சைக்காரன் 2: பசி காதடைக்குதுனு சொன்னே காதுல மருந்து ஊத்தி அனுப்பிட்டாரு?

சினிமா ஜோக்ஸ்

1. **டைரக்டர்:** என்னய்யா இது... படத்தோட கதையை சிலேட்டுல எழுதிட்டு வந்திருக்கே.

ஒருவர்: அடுத்த படத்துக்காவது வித்தியாசமா கதை எழுதுன்னு நீங்கதானே சார் சொன்னீங்க அதான்?

டைரக்டர்: ???

2. **தயாரிப்பாளர் 1:** பொங்கலுக்கு ரிலீசாகிற நம்ம படம் குப்பைன்னு மக்களுக்கு தெரிஞ்சு போச்சா... எப்படிச் சொல்றே?

தயாரிப்பாளர் 2: படப் பெட்டியை எரிச்சு போகி கொண்டாடறாங்களே அதான்!

தயாரிப்பாளர் 1: ????

3. **சூரி:** எதுக்கு மேனேஜர் உன்னை திட்டினார்?

சந்தானம்: மேனேஜரோட நாயைக் காணோம்னு பேப்பர்ல அட்வர்டைஸ்மென்ட் கொடுக்க சொன்னார்.. நான் மேனேஜர் நாயைக் காணோம்- னு அட்வர்டைஸ்மென்ட் கொடுத்துட்டேன்..

4. **வடிவேல்:** ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டுப் பார்க்கிறேன், கையில் காசு இல்லை....

கோவைசரளா: அய்யய்யோ... அப்புறம் என்ன பண்ணுனீங்க?

வடிவேல்: அப்புறம் பாக்கெட்-ல இருந்து எடுத்துக் கொடுத்துட்டேன்...

5. **சூரி:** சார், என்னோட செக்புக் தொலஞ்சு போச்சு..

மேனேஜர்: பார்த்து சார், யாராவது உங்க கையெழுத்தை போட்டு ஏமாத்திடப் போறாங்க..

சூரி: நான் என்ன பேக்கா? இப்படி ஏதாவது நடக்கும்-னு தான். முதலிலேயே எல்லா செக்கிலையும் கையெழுத்து போட்டு வச்சிருக்கேன்..

6. **சந்தானத்தின் மனைவி:** காரணம் இல்லாம குடிக்கமட்டேன்னு சொன்னீங்களே இப்போ ஏன் குடிச்சிங்க?

சந்தானம்: ராக்கெட் விடுறதுக்கு பாட்டில் வேணும்னு பையன் கேட்டான் அதான்.

சந்தானத்தின் மனைவி: ????

7. **செந்தில்:** ஏன் அண்ணே!! இத்தனை அவசரம் அவசரமாகப் பெயிண்ட் அடிக்கிறாய்?

கவுண்டமணி: பெயிண்ட் தீர்ந்து விடுவதற்குள் அடித்துவிட வேண்டும் என்பதற்காகத் தான்.

8. **விவேக்கின் அப்பா:** டேய்! ஏண்டா இண்டர்வியூக்கு போகலையா?

விவேக்: ச்சீ..சீ.. நாலு பேரு கேள்வி கேட்கற மாதிரி நடக்க கூடாதுன்னு நீங்கதானே சொன்னீங்க!

9. **சந்தானம்:** என்ன ஜோஸியரே, கிளிக் கூண்டு ரொம்பச் சின்னதாயிருக்கு?

ஜோசியர்: உள்ளே இருக்கிறது, வெட்டுக்கிளிங்க

10. **சூரியின் அப்பா:** என்னடா? பேப்பர் ரிசல்ட்டுல உன் நம்பர் இல்லே..? என்று அதிர்ச்சியாகக் கேட்கிறார்.

சூரி: நமக்கு இந்த விளம்பரமெல்லாம் பிடிக்காதுப்பா

11. **ஆர்யா:** அந்த டாக்டர் போலின்னு எப்படிச் சொல்ற?

சந்தானம்: சுகர் டெஸ்ட் பண்ண எவ்வளவுன்னு கேட்டா ஒரு கிலோ 20 ரூபாய்ங்கறாரே

12. **சூரி:** பால் வியாபாரம் செஞ்சவனை பெட்ரோல் பங்கள வேலைக்கு சேர்த்தது தப்பா போச்சு

வாடிக்கையாளர்: ஏன் என்னாச்சு

சூரி: போடுற பெட்ரோல்ல தண்ணிய கலந்து தொலைச்சுட்டான்

13. **சந்தானம்:** குடி குடியை கெடுக்கும்ங்றது சரியா போச்சு

ஆர்யா: எப்படி?

சந்தானம்: எனக்கு கல்யாணம் ஆனதுமே என் மனைவி என்னை குடிக்கக் கூடாதுன்னு சொல்லிட்டா..

14. **சூரியின் மனைவி:** எதுக்கு நின்னுக்கிட்டே சாப்பிடுறீங்க.. .?

சூரி: பொண்டாட்டி சம்பாத்தியத்துல உட்கார்ந்து சாப்பிடறான்னு மத்தவங்க கேலி பண்ணக் கூடாதுல்ல..

15. **சந்தானம்:** எங்கம்மாவுக்கு சர்க்கரை வியாதி இருப்பது என் மனைவிக்கு இன்னும் தெரியாது..

ஆர்யா: தெரிஞ்சா கவலைப் படுவாங்களா..?

சந்தானம்: இல்லே.. தினம் ஒரு ஸ்வீட் செஞ்சு வெறுப்பேத்துவா...!

16. **எஜமான்:** ஏன் கபாலி உன் பொண்டாட்டிய விஷம் வச்சி கொல்லப் பார்த்த?...

சூரி: என்னை ரசம் வச்சி கொல்ல பார்க்குறா எஜமான், அதான்.

17. **கவுண்டமணி:** அவரு வியாபாரத்துல படிப்படியா உயர்ந்தவர்

செந்தில்: எப்படி?

கவுண்டமணி: முதல்ல செருப்பு வியாபாரம் பண்ணி, அப்புறம் பெல்ட் வியாபாரம் செஞ்சாரு. இப்ப தொப்பி வியாபாரம் பண்றாரு.

18. **ஹோட்டல் முதலாளி:** ஏன் சார், தினமும் பார்சல் வாங்கறீங்க ஒரு நாளாவது இங்கயே சாப்பிடலாமில்லே..?

சூரி: டாக்டர் என்னை ஹோட்டல சாப்பிடக்கூடாதுனு சொல்லிருக்காரு. அதான்!

19. **சந்தானம்:** எங்கம்மாவுக்கு மூச்சுவிட ரொம்ப சிரமமா இருக்காம்.

சந்தானத்தின் மனைவி: அவ்வளவு சிரமப்பட்டு எதுக்கு மூச்சு விடணும்னு கேக்கறேன்?

20. **சூரியின் மனைவி:** 'ஹலோ நான் பேய் பேசுறேன்' படத்துக்கு போகலாமா?

சூரி: சரி சொல்லு, எந்த படத்துக்கு?

21. **சந்தானம்:** என்னடி சர்க்கரை பொங்கல் வெள்ளையா இருக்கு?

சந்தானத்தின் மனைவி: பொங்கலிலே சர்க்கரை போட்டிருக்கேன் அதான்...!

22. சந்தானத்தின் மனைவி: என்னங்க இது, ஒரு வாரமா தினமும் ஒரு காலண்டர் வாங்கிட்டு வர்றீங்க..?

சந்தானம்: (கோபமாக) நீதானடி டெய்லி காலண்டர் வாங்கிட்டு வாங்கன்னு சொன்னே..!

23. **நீதிபதி:** ஒரே வீட்டை ஏன் பதினைந்து முறை கொள்ளை அடிச்சே?

கருணாஸ்: ஐயா நான் அவங்க பேமிலி திருடன், எப்புவுமே விஸ்வாசமா இருப்பேன்.

24. **நண்பன்:** யாரோ! என் பேண்ட் பாக்கெட்ல பிளேடு போட்டுட்டண்டா...

கருணாஸ்: அய்யய்யோ! பர்ஸ அடிச்சுட்டானா...

நண்பன்: இல்லை பிளேடை எடுத்துப் போட்டுட்டான்...

கருணாஸ்: ?????

25. **சந்தானம்:** நம்ம வீட்டுக்கு சாப்பிட மேனேஷரை கூப்பிட்டிருக்கிறேன்.

சந்தானத்தின் மனைவி: என்ன திடீர்னு?

சந்தானம்: அவர் மனைவியோட சாப்பாட்டை கொஞ்ச நாளா குறை சொல்லிக்கிட்டிருந்தாராம் அதான்.

26. **சந்தானம்:** வெளியே ரெண்டு கண்ணும் தெரியாத ஆசாமி சோறு கேட்குறான். போட்டுட்டு வா!!

சந்தானத்தின் சந்தானத்தின் மனைவி: அவனுக்கு ரெண்டு கண்ணும் தெரியாதுன்னு எதை வச்சு சொல்றீங்க.

சந்தானம்: உன்ன மகாலட்சுமி, மகராசின்னு சொல்றானே அதான்!!

27. **சூரி:** சார் என் பொண்டாட்டிய காணோம்!!

போஸ்ட் ஆபீஸ்: யோவ்!! இது போஸ்ட் ஆபிஸ் யா., போலீஸ் ஸ்டேஷன் இல்ல!!

சூரி: சாரி சார் சந்தோஷத்துல என்ன செய்றதுன்னு தெரியாம மாத்தி வந்துட்டேன்!!

28. **சூரி:** அம்மாவுக்கு உடம்பு சரியில்லையாம். பணம் அனுப்ப சொல்லி, லெட்டர் போட்டிருக்காங்க.

சூரியின் மனைவி: சுக்குக் கஷாயம் காய்ச்சி குடிக்கச் சொல்லுங்க எல்லாம் சரியாப் போய்டும்.

சூரி: ஓகே. அப்படியே உங்கம்மாவுக்கு எழுதிப் போட்டுறேன்..

29. சந்தானத்தின் மனைவி: இந்த காதலர் தினத்தில எனக்கு ஒரு ரிங் கொடுங்க.

சந்தானம்: அதுக்கென்ன கொடுத்தா போச்சு.. நம்பர் சொல்லு!

சந்தானத்தின் மனைவி: ??????

30. **சந்தானத்தின் மனைவி:** நம்ம பையன் ஏன் இப்படி மிரண்டு மிரண்டு அழறான்.

சந்தானம்: பேய் கதை கேட்டான்... நான் உன் கதையை சொன்னேன் அதான் அழறான்.

சந்தானத்தின் மனைவி: ??????

31. **சந்தானம்:** இன்னிக்கி 8 மணிக்கு கடுமையான மழையும், காற்றும் வரும்-னு டி.வி-யில சொன்னாங்க.

சந்தானத்தின் மனைவி: நீங்க கேட்டீங்களா?

சந்தானம்: இல்லை! அவங்களே சொன்னங்க...

32. **ஐயர்:** மாப்பிள்ளை சீக்கிரம், நல்ல நேரம் முடியறதுக்குள்ள தாலிய கட்டுங்க.

சந்தானம் (மாப்பிள்ளை): தாலி கட்டிட்டாலே நல்ல நேரம் முடிஞ்ச மாதிரிதானே..

33. **சந்தானத்தின் மனைவி:** ஏங்க? உங்க புத்தகத்திலே ஆண்களுக்கென்று ஒரு பகுதி கூட கிடையாதா?

சந்தானம்: ஏன் இல்லை? சமையல் குறிப்புன்னு ஒரு பகுதி இருக்கே!

34. **சந்தானம்:** (சாமியாரிடம்) என் மனைவியின் வாயை கட்டிப்போட ஒரு மந்திரம் இருந்தால் சொல்லுங்களேன்?
சாமியார்: அது பண்ண முடியாம தானே நானே சாமியார் ஆனேன்.

35. **சந்தானம்:** குழந்தை அழுது கொண்டிருக்கு. அதைக் கவனிக்காம நீ பாட்டுக்கு சீரியல் பார்த்திட்டிருக்கியே...
சந்தானத்தின் மனைவி: சீரியலைப் பார்த்துட்டுத்தாங்க அது அழுதிட்டுருக்கு..
சந்தானம்: ????

36. **சூரியின் மனைவி:** ஏங்க நம்ம வீட்டுக்குள்ள திருடன் புகுந்துட்டான். கிச்சனுக்குள்ள போய் நான் சுட்டு வச்ச வடையை சாப்பிடுறான்.
சூரி: சரி, இப்ப நான் போலீஸைக் கூப்பிடவா, இல்லாட்டி ஆம்புலன்ஸைக் கூப்பிடவா...?

37. **கருணாஸ்:** உன்னோட சமையல் டாப் டக்கரா இருக்கு.
கருணாஸின் மனைவி: என்னதான் ஐஸ் வெச்சாலும் நீங்கதான் சமைக்கணும்.
கருணாஸ்: ??????

38. **சந்தானம்:** என்னோட கண்ண நல்லா பாரு என்ன தெரியுது?
சந்தானத்தின் மனைவி: உங்க உண்மையான அன்பு தெரியுதுங்க..
சந்தானம்: நாசமா போச்சு! தூசு விழுந்திருக்குடி அதை எடு..?

39. **சூரியின் மனைவி:** என்னங்க இன்னைக்கு நம்ம கல்யாண நாள்... கோழி அடிச்சி குழம்பு வைக்கவா?
சூரி: நான் செஞ்ச தப்புக்கு ஏன் தண்டனை கொடுக்கிற...
சூரியின் மனைவி: ????

40. **ஆர்யா:** டேய் நாளைக்கு நான் சினிமாக்கு போறேன் நீயும் வரியா டா?
சந்தானம்: முடிஞ்சா வரேன் டா?
ஆர்யா: முடிஞ்சா பிறகு ஏண்டா வர... படம் ஆரம்பிக்கும் போதே வாடா?
சந்தானம்: ??????????

41. **விமான நிலைய அதிகாரி:** சார் நீங்க அளவுக்கு அதிகமாகக் குடித்திருக்கிறீர்கள். உங்களை விமானத்தில் அனுமதிக்க முடியாது.

சூரி: அப்படின்னா சரக்கு விமானத்திலயாவது ஏத்திக்குங்க சார்!

விமான நிலைய அதிகாரி: ????????????

42. **சந்தானத்தின் மனைவி:** என் காதுல நீங்க போட்ட புதுத்தோடு எங்கேயோ விழுந்திடிச்சுன்னு சொன்னா, அதுக்குச் சந்தோசப்படறீங்களே ஏன்?

சந்தானம்: நான் உன் காதுல போட்டதுல ஏதோ இந்த ஒண்ணாவது விழுந்திருக்கேனுதான்.

சந்தானத்தின் மனைவி: ????????????

43. **சூரி:** நான் கொடுத்த ராஜினாமா கடிதத்தைக் கட்சி மேலிடத்துல வாங்க மறுத்துட்டாங்க...

சூரியின் நண்பர்: ஏன்?

சூரியின் நண்பர்: பதவியில இருக்கறவங்கதான் அதெல்லாம் கொடுக்கணுமாமே..

44. **தயாரிப்பாளர் 1:** உங்க படத்தை ஏன் வெள்ளிக்கிழமை ரிலீஸ் பண்றீங்க?

தயாரிப்பாளர் 2: சனி, ஞாயிறு 2 நாள் லீவ் வருதே, அப்படியாவது ஓடட்டும்னுதான்!

தயாரிப்பாளர் 1: ????????

45. **நிருபர்:** என்ன சார்! நீங்க எடுத்த சிரிப்பு படத்தப் பார்த்திட்டு ரசிகர்களாம் அழுதுட்டு வராங்களாமே?

டைரக்டர்: டி.வி சீரியல்ல நடிச்ச நடிகர், நடிகைகளா வைச்சு சிரிப்புப் படம் எடுத்தது தப்பாபோச்சு!

நிருபர்: ???

46. **நிருபர்:** வரவரத் தமிழ்நாட்ல ஒரு வருடத்தில ஏராளமான படங்கள் வெளியாகுதே! உங்க கருத்து என்ன?

டைரக்டர்: நல்ல கேள்வி. அத மையமா வச்சு இந்த வருடம் ஒரு படம் எடுக்கறதா இருக்கேன்!

நிருபர்: ?????

47. **சூர்யா:** யார் எனக்கு போட்டி??? எனக்கும் யாரும் போட்டியில்ல... நானும் யாருக்கும் போட்டி இல்ல... என்ன சரியா???

சத்யன்: நல்லா தான்டா இருந்த!!! உனக்கு எதுக்குட பன்ச் டயலாக்? அஜித் படம் பாக்காதனு சொன்னா கேக்கறியா???

48. **நிருபர்:** உங்க வருங்காலக் கணவர் எப்படி இருக்கணும்-னு நினைக்கிறீங்க?

நடிகை: நிகழ்காலக் கணவரை விட நல்லவரா இருக்கணும்-னு தான்.

49. **ரசிகர்:** எவ்வளவு பெரிய கஷ்டம் வந்தாலும் உங்க பாட்டை ஒரு தடவை கேட்பேன் சார்

பாடகர்: அப்படியா?

ரசிகர்: பின்ன, அந்த கஷடத்துல என் சின்ன கஷ்டம் ஒண்ணும் பெரிசா தெரியாது பாருங்க.

50. **தயாரிப்பாளர் 1:** யோசனையே இல்லாம மெகா சீரியல் மாதிரி படம் எடுத்துட்டோம்

தயாரிப்பாளர் 2: அப்புறம்.. என்ன பண்ணுனீங்க?

தயாரிப்பாளர் 1: பேசாம, நாலு இண்டர்வெல் விடறதா முடிவு பண்ணீட்டோம்..

51. **விஜய்:** சுமாரா உங்க நாடகம் எத்தனை மணி நேரம் ஓடும்?

அஜித்: ஒரு 2 மணி நேரம் ஓடும்!

விஜய்: அப்ப 2 மணி நேரமும் சுமாராத்தான் இருக்கும்னு சொல்றீங்க!

52. **தயாரிப்பாளர் 1:** கதாநாயகியோட முகத்தை அடிக்கடி க்ளோஸ் அப்ல காட்ட வேணாம்னு சொன்னேனே..... கேட்டீங்களா?

தயாரிப்பாளர் 2: ஏன்யா..... என்னாச்சு?

தயாரிப்பாளர் 1: பேய்ப் படம்னு யாரும் பார்க்க வரமாட்டேங்கிறாங்க !

53. **பத்திரிக்கை ஆசிரியர்:** ஏன் அந்த நடிகை போனில் கூப்பிட்டு கண்ணாபின்னான்னு திட்டறாங்க?

நிருபர்: நட்சத்திரப் பேட்டின்னு போடறதுக்குப் பதிலா நட்சத்திரப் பாட்டின்னு போட்டு இருக்கோமாம். அதான்..

பத்திரிக்கை ஆசிரியர்: ??????

54. **செந்தில்:** ரொம்ப லோ பட்ஜெட் படம்போல....

நடிகர்: ஆமாடா! ரொம்ப லோ பட்ஜெட் படம்னு வில்லனை அழிக்க ரப்பர் குடுத்தா எப்படி?

செந்தில்: ?????????

55. **ஹீரோ:** என்னது யூனிட்ல இருக்கற எல்லாருக்கும் நான் போய் ஹோட்டல்ல சாப்பாடு எடுத்துட்டு வரணுமா? என்ன விளையாடுறீங்களா?

தயாரிப்பாளர்: ஆமாம் சம்பளத்தை 2 கோடியிலிருந்து 10 கோடிக்கு அதிகப்படுத்தினீங்க இல்ல, அப்ப எல்லா வேலையும்தான் செய்யணும்!

56. **ஹீரோ:** என்ன படத்துக்கு குட்டித் தாயின்னு பேர் வச்சிருக்கீங்க?

தயாரிப்பாளர்: அதாவது கதைப்படி ஒரு தாய், நாய்க்குட்டி ஒண்ணை பாசமா வளர்க்கறாங்க. அதான் குட்டித்தாயின்னு வச்சுருக்கோம்.

ஹீரோ: பாசமா நாய் வளக்கராங்கன்னா பட்டித் தாயின்னுதான வச்சுருக்கணும்?

57. **நடிகர்:** எதுக்கு மூத்த எழுத்தாளர்கள் மேல கேஸ் போடப்போறேன்னு சொல்றீங்க?

கதை எழுதுபவர்: பின்ன என்னங்க! நான் எழுதின கதைகள் எல்லாம் அவங்ககிட்டேயிருந்து உருவினதுன்னு எல்லாரும் சொல்றாங்க.

நடிகர்: சரி என்னன்னு கேஸ் போடப்போறீங்க?

கதை எழுதுபவர்: நான் எழுத வேண்டிய கதையை அவங்க ஏன் எழுதினாங்கன்னுதான்...

58. **கமல்:** என்ன டைரக்டர் சார் உங்க படத்துக்கு முதல் நாளே இவ்வளவு அடிதடி?

டைரக்டர்: அப்படியா அப்ப படம் ஹிட்!

கமல்: மண்ணாங்கட்டி! முதல் சீன் முடிஞ்ச உடனே அவ்வளவு பேரும் உடனே தியேட்டரை விட்டு வெளியே போகணும்னு முண்டியடிச்சா அடிதடி வராதா!

59. **Producer 1:** நம்ம படத்தை பத்தி விளம்பரம் செய்யும்போது வெள்ளித்திரையில் காண்க-ன்னு போடாதீங்கன்னு சொன்னேன் கேட்டீங்களா?

Producer 2: ஏன், என்ன ஆச்சு?

Producer 1: தியேட்டர்காரன் வெள்ளிக்கிழமை ஒரு நாள் மட்டும் தான் நம்ம படத்தை திரைல போடறான்!!!

60. **நடிகர் 1:** அதோ அங்க போறாரே அவர் ஒரு புகழ்பெற்ற டிடெக்டிவ் எழுத்தாளர் தெரியுமா?

நடிகர் 2: எலும்பும், தோலுமா இருக்காறே? அவர் பேர் என்ன?

நடிகர் 1: ஷெர்லாக் போன்ஸ்!

61. **Producer 1:** அந்த நடிகையை ஆடியன்ஸுக்கு பிடிக்கலைன்னு எப்படி சொல்ற

Producer 2: நாம எடுத்த படத்துல ஒரு சீன்ல கொலைகாரங்க அந்த நடிகைய தொரத்துவாங்க, இந்தம்மா போய் மாடி ரூம்ல ஒளிஞ்சுக்கு வாங்க.

Producer 1: அதனால என்ன?

Producer 2: நீ வேற, அந்தம்மா அந்த ரூம்லதான் இருக்கா போய் கொலை பண்ணுங்கன்னு ஆடியன்ஸ் கத்தினாங்களே.

62. **நடிகர் (கூச்சமாக):** என்ன எனக்குப் போயி டாக்டர் பட்டம் அது இதுன்னு....

துணைவேந்தர்: டாக்டர்லாம் பேஷன்ட்டோட உயிரோட விளையாடுவாங்க, அதே மாதிரி நீங்க ரசிகர்களோட உயிரோட விளையாடறீங்க அதனாலதான்

63. **நடிகர் 1:** டேய் கொஞ்சம் பேப்பர காட்டுடா பாத்து எழுதிக்கிறேன்.

நடிகர் 2: எனக்கு ஹிந்தி எக்சாம் டா.. நீ எழுதறது தமிழ்.

நடிகர் 1: அதனால என்ன? நீ காட்டு நான் ரீ-மேக் பண்ணிக்கிறேன்.

64. **நிருபர்:** உங்களுக்கு நினைவு தெரிஞ்ச நாளிலிருந்தே, இந்த சோப்பைத் தான் குளிக்கப் பயன்படுத்துறீங்களாமே...?

நடிகை: அதெல்லாமில்லீங்க... இது கரைஞ்சதும் வேற புது சோப் வாங்கிடுவேன்...!

65. இரண்டு நடிகைகள் உரையாடலில் இருந்து,

தமனா: யாராவது பழம் கொடுத்தால் வாங்காதே..

திரிஷா: ஏன்..?

தமனா: பழம் பெறும் நடிகைனு சொல்லிடுவாங்க

66. **வடிவேல்:** கடவுளே என்னக்கு சாப்பிட பிடிக்கல, தூங்க பிடிக்கல எனக்கு காதல் வந்துருச்சோ...

கடவுள்: சனியனே உனக்கு செமஸ்டர் வந்துருச்சு போய் படி..

67. **சூர்யா:** என்ன கொடுமை சரவணன்...

அஜித்: எது? ஜோதிகாவ உனக்கு ஜோடியாப் போட்டதா?

68. **படம் பார்க்க வந்தவர்:** என்னங்க, பத்து நிமிஷத்தில் படம் முடிஞ்சுடுச்சு.....?

திரையரங்கின் முதலாளி: ஒவ்வொரு தரப்பினரும் ஆட்சேபம் செய்த காட்சிகளை எல்லாம் நீக்கிய பிறகு , படம் அவ்வளவுதான் தேறிச்சாம்.....

69. **தயாரிப்பாளர் 1:** நான் எடுத்துட்டுருக்கற சினிமாப் படத்தோட டைட்டில் ரொம்ப வித்தியாசமானது.

தயாரிப்பாளர் 2: அப்படி என்ன டைட்டில் வச்சிருக்கீங்க?

தயாரிப்பாளர் 1: நான் தான் சொன்னேனே.... ரொம்ப வித்தியாசமானது-ன்னு.

70. **சூர்யா:** அந்த நடிகருக்குக் கொஞ்சம்கூட டான்ஸ் ஆட வராதே.. . உங்க படத்திலே மட்டும் இவ்வளவு பிரமாதமா ஆடறாரே.. . எப்படி?

விஜய்: அவரோட மனைவியைக் கூட்டி வந்து எதிரில் நிறுத்தினோம். அவர் உடம்பு தன்னாலே ஆட ஆரம்பிச்சுட்டது.

71. **வாடிக்கையாளர்:** தீபாவளிக்கு வந்த படங்களயே உங்க படம் மட்டுந்தான் குடும்பத்தோட பாக்கற மாதிரி இருந்துச்சு

நடிகை: அப்படியா.. ரொம்ப சந்தோஷம்.. எதை வைச்சுச் சொல்றீங்க?

வாடிக்கையாளர்: மத்த படங்கள் எல்லாம் ஹவுஸ்ஃபுல் ஆயிட்டதால, டிக்கெட் கிடைக்கல. உங்க படம் காலியாயிருந்ததாலே குடும்பத்தோட பாக்க முடிஞ்சதுன்னு சொல்ல வந்தேன்.

மொக்க ஜோக்ஸ்

1. **ராதா:** வாயாடி மாமியா கிட்ட என்னால கத்த முடியல...!

சீதா: அதனால. என்னடி செஞ்சே?

ராதா: ரெண்டு நாயை வாங்கிக் குரைக்க விட்டுட்டேன் கத்துனு.

2. **ஒருவன்:** மாட்டை பிடிக்கிறவருக்கு என் மூத்த பெண்ணைக் கட்டிகொடுப்பேன்...

மற்றவன்: உங்க வீட்டு கன்றுகுட்டியை பிடிச்சா இளைய பெண்ணை கட்டி தருவீங்களா...?

ஒருவன்: ???

3. **ஒருவன்:** பில்லை (bill) நானே கொடுக்கிறேன்னு சொன்ன என் காதலியை நம்பி ஹோட்டலுக்குச் சாப்பிடப் போனது தப்பாப் போச்சு.

மற்றொருவன்: ஏன்?

ஒருவன்: பில்லை (bill) நான் கொடுக்கிறேன். பணத்தை நீ கொடுத்துடுனு கடைசியில சொல்லிட்டாள்.

4. **நண்பர் 1:** சினிமா பீல்டுல நுழைஞ்சுடலாம்ன்னு இருக்கேன். ஆனா ஒரே ஒரு ஆள் மட்டும் தடையாக இருக்கான்.

நண்பர் 2: யாரது?

நண்பர் 1: ஸ்டுடியோ வாட்சுமேன் தான்?

5. **பெண்:** சார் நான் மாசமா இருக்கேன்..

மேனேஜர்: அதுக்கு என்னம்மா?

பெண்: நீங்கதானே சொன்னீங்க. மாசமான சம்பளம் தருவேன்னு?

6. **ஒருவர்:** அந்த ஆள் எப்பவும் மத்தவங்க கையைத் தான் எதிர்பார்ப்பாரு?

மற்றவர்: ஏன்?

ஒருவர்: அவருதான் கைரேகை ஜோசியம் பார்க்கறவராச்சே அதான்?

7. **ஒருவர்:** பாட வந்தவங்க, எதுக்கு கையில கிளவுஸ் எடுத்து மாட்டிக்கறாங்க...?

மற்றவர்: குத்துப்பாட்டு பாடப் போறாங்களாம் அதான்?

ஒருவர்: ???

8. **தொண்டர் 1:** தலைவருக்கு வந்திருக்கறது பன்றிக் காய்ச்சல் தான்னு எதை வச்சு சொல்றே?

தொண்டர் 2: அரசியல் ஒரு சாக்கடை-ன்னு அவர்தான் அடிக்கடி சொல்லுவாரு!

தொண்டர் 1: ????

9. **ஒருவர்:** பொண்ணு பார்க்க வந்த மாப்பிள்ளை ஷாக் ஆகிட்டாரே.. அப்படி என்ன சொன்னாங்க?

மற்றொருவர்: பொண்ணுக்கு சமைக்கத் தெரியும்னு சொன்னாங்களாம்...

ஒருவர்: ???

10. **ராணி:** என் மாமியார் இறந்துட்டாங்க. நானும் எவ்வளவு முயற்சி செய்து பார்த்தாலும் அழுகையே வரமாட்டேங்குது என்ன செய்யறது?

வாணி: ஒண்ணும் செய்ய வேண்டாம். அவங்க திரும்பி உயிரோட வர்றதா நினைச்சிக்க. அழுகை தானா வரும்.

ராணி: ???

11. **அருண்:** சார் என் மனைவியை இரண்டு நாளா காணோம்.

போலீஸ்: இரண்டு நாளா என்னய்ய பண்ணிணே?

அருண்: எங்க திரும்பி வந்துடுவாளோன்னு பயந்து கிட்டிருந்தேன் சார்.

12. **ஒருவர்:** அந்த கட்சில உமக்கு கொள்கை பரப்புச் செயலாளர் பதவி கொடுத்துருக்காங்களே... என்ன வேலையாம்?

மற்றவர்: கட்சியோட கொள்கை என்னன்னு கண்டுபிடிச்சி அதைப் பரப்பணுமாம்!

ஒருவர்: ???

13. **தொண்டன் 1:** தேர்தல் நேரத்துல நாயா உழைச்சேனு தலைவர் மேடையில பேசுனது தப்பா போச்சு...

தொண்டன் 2: ஏன் என்னாச்சு...?

தொண்டன் 1: இப்பல்லாம் கூட்டத்துல யாரும் தக்காளி, முட்டை வீசறதில்லை... பிஸ்கெட் தான் வீசறாங்க....

14. **தொண்டர் 1:** தலைவர் மேல சுற்றுச்சூழல் பாதிப்பு வழக்கு போட்டிருக்காங்களா... ஏன்?

தொண்டர் 2: போகிக்கு அவரோட பழைய குற்றப்பத்திரிகைகளை எரிச்சாராம் அதான்!

தொண்டர் 1: ???

15. **நண்பர் 1:** போகி ஸ்பெஷல் லைவ் புரொகிராமுக்கு வந்த டைரக்டர் ஏன் கடுப்பாயிட்டார்?

நண்பர் 2: போன்ல ஒரு நேயர், உங்க படம் மக்கும் குப்பையா, மக்கா குப்பையானு கேட்டாராம்!

நண்பர் 1: ??????????

16. **தொண்டர் 1:** கடைசியா தலைவர் வந்ததும்தான் பொங்கல் பானை பொங்குச்சு...

தொண்டர் 2: அநியாயத்தைக் கண்டதும் பொங்கிடுச்சுன்னு சொல்லு..!

தொண்டர் 1: ??????????

17. **கட்சிக்காரர்:** பொங்கல் அன்னைக்கு தலைவர் கட்சிக்காரங்க எல்லோருக்கும் பொங்கல் கொடுத்தார்னு சொன்னா ஏன் நம்ப மாட்டேங்கறே...?

ஒருவர்: அவர் வழக்கமா எல்லோருக்கும் அல்வாதானே கொடுப்பார்?

கட்சிக்காரர்: ??????????

18. **தொண்டன் 1:** பொங்கல் விழாவை ஆரம்பிச்சு வைக்கப் போன தலைவர் ஏன் சோகமா இருக்கார்?

தொண்டன் 2: செருப்பு வீசறதுக்கு பதிலா, எல்லாரும் கரும்பு தின்னுட்டு அவர் மேல சக்கையை எறிஞ்சுட்டாங்களாம்!

தொண்டன் 1: ??????????

19. **தொண்டர் 1:** தலைவர் வீட்ல பொங்கல் இனாம் வாங்கப் போனவங்க ஏன் கடுப்பா போறாங்க?

தொண்டர் 2: ரூபாய் நோட்டுல தலைவரு ஸ்டிக்கர் ஒட்டி இருக்காம் அதான்!

தொண்டர் 1: ??????????

20. **தலைவர்:** என்னய்யா இது... நான் எங்க போனாலும் எனக்கு எதிர்ல ஜனங்க வரிசையா வந்து நிக்கிறாங்க!

தொண்டர்: நீங்க நடமாடும் ஏ.டி.எம்-னு எதிர்க்கட்சிக்காரன் புரலைய கிளப்பிவிட்டுட்டான் தலைவரே!

தலைவர்: ???????????

21. **ஒருவர்:** இந்த ஊருல சாப்பாடு எங்க விற்கும் (விக்கும்).

மற்றவர்: இந்த ஊருல மட்டும் இல்ல, எந்த ஊருல சாப்பிட்டாலும் சாப்பாடு தொண்டையில தான் விக்கும்?

ஒருவர்: ???????????

22. **நண்பர் 1:** பல் டாக்டரை பார்க்க போனேன், அங்க லேடி டாக்டர் இருந்தாங்க திரும்பி வந்துட்டேன்.

நண்பர் 2: ஏண்டா?

நண்பர் 1: நாம எந்த பொண்ணுகிட்டையும் பல்லை காட்டி நிற்க கூடாதுல அதான்?

23. **தலைவர்:** என்னது குற்றம் பண்ணிட்டு ஜாமீன் கேட்காம இருக்கணுமா... என்ன சொல்றே நீ?

தொண்டர்: நீங்கதானே தலைவரே, இந்த வருஷம் பொங்கலை ஜெயில்ல கைதிகளோட கொண்டாடணும்-னு சொன்னீங்க அதான்!

தலைவர்: ??????????

24. **தொண்டன் 1:** வாகனங்கள் திரும்புற வளைவுலே ஏன் பொதுக்கூட்டம் நடத்துறாங்க?

தொண்டன் 2: இந்த மீட்டிங் திருப்புமுனையா இருக்கணும்-னு தலைவர் சொல்லிட்டாராம்.

தொண்டன் 1: ??????????

25. **தொண்டன் 1:** தலைவரால சட்டசபையே அதிர்ந்திடுச்சாம்!

தொண்டன் 2: அடேங்கப்பா அப்படி என்ன பேசினாரு, பேசலையய்யா குறட்டைவிட்டாரு!

தொண்டன் 1: ???????????

26. **கண்டக்டர்:** யோவ் டிரைவர், நான் மூணுமுறை விசிலடிச்சும் வண்டி நிக்கலையே ஏன்?

டிரைவர்: அட போய்யா, நான் ஆறுமுறை பிரேக் அடிச்சே வண்டி நிக்கலை, நீவேற.

27. **தோழி 1:** உன் கணவர் உடம்புக்கு முடியாம படுத்தபடுக்கையா கிடந்தாரே... இப்ப எப்படியிருக்காரு.

தோழி 2: ஏதோ பரவாயில்லை... காலைல எந்திரிச்சதும் காபி மட்டும் போட்டுத் தர்றார்.

28. **தோழி 1:** இதோட எனக்குப் பத்து பொண்ணுக்கு மேல பாத்தாச்சு. எனக்கு யாரையுமே பிடிக்கல.

தோழி 2: உங்க அம்மாவைப் போலவே ஒரு பொண்ணைப் பார்க்க வேண்டியது தானே?

தோழி 1: பார்த்தோம். ஆனா எங்க அப்பாவுக்குப் பிடிக்கலே!

29. **ராமு:** உன்னுடைய கார் பேர் என்ன?

சோமு: சரியாக ஞாபகமில்லை. ஆனால் -T’-ல ஆரம்பிக்கும்.

ராமு: பரவாயில்லையே.. என்னுடைய கார் பெட்ரோல்லதான் ஆரம்பிக்கும்.

30. **தரகர்:** மாப்பிள்ளை மெகாசீரியல்ல நடிக்கறாரு..

பெண்: அப்ப மாப்பிள்ளை நிரந்திர வேலைல இருக்கார்னு சொல்லுங்க !

31. **தேவி:** உங்க கணவரிடம் உள்ள நல்ல விஷயம் ஒண்ணு சொல்லுங்க !

கவிதா: நான் எவ்வளவு அடிச்சாலும் திருப்பி ஒரு அடி கூட அடிக்க மாட்டார்!

32. **தபால்காரர்:** இந்த பார்சல குடுக்க அஞ்சு கிலோ மீட்டர் நடந்து வந்தேன் உங்க ஊருக்கு.

வீட்டுக்காரர்: ஏன், தபால்ல அனுப்பி இருக்கலாம்ல.?

33. **திருடன்:** தம்பி ! உனக்கு மிட்டாய் தருகிறேன். உங்க வீட்ல நகைகளை எங்கே வைப்பாங்க சொல்லு..

சிறுவன்: அடகுக் கடையிலே !

திருடன்: ????

34. **நீதிபதி:** அந்த வீட்டுப் பூட்டை உடைத்து ஏன் திருடினாய்?

திருடன்: என்னோட சாவி எதுவுமே அந்தப் பூட்டைத் திறக்காததால கடைசியா பூட்டை உடைக்க வேண்டியதாப் போச்சுங்க ஐயா!!!

நீதிபதி: ???????

35. **தொண்டன் 1:** எதுக்குய்யா தலைவர் நெஞ்சுல அடிக்கடி தண்ணீர் தெளிக்கிறாரு?

தொண்டன் 2: எதிர்க்கட்சிகாரங்க தலைவருக்கு நெஞ்சுல ஈரமே இல்லை-னு சொல்றாங்களாம்.

தொண்டன் 1: ??????????

36. **நபர் 1:** என் வாழ்க்கை இனிமேல் பிரகாசம் தான்...

நபர் 2: எப்படிச் சொல்றே?

நபர் 1: பல்பு கம்பெனியில வேலை கிடைச்சிருக்கே.

37. **நீதிபதி:** ஏன் திடீர்னு ரெண்டு இட்லி, ஒரு தோசைன்னு சொல்றே..?

குற்றவாளி: நீங்கதானே எசமான் மேசையைத் தட்டி, ஆர்டர் ஆர்டர்..னு சொன்னீங்க..!

நீதிபதி: ????????

38. **ராமு:** டேய்! நாளைக்கு ஒரு பெண் பார்க்கப் போறேன்! நீயும் வந்துவிடு!

சோமு: கண்டிப்பா! உனக்கு ஒரு கஷ்டம் என்றால் நான் சும்மா இருப்பேனா?

39. **சுரேஷ்:** காலில் என்ன காயம்?
ரமேஷ்: செருப்பு கடித்து விட்டது...
சுரேஷ்: பின்ன அதை மிதிச்சா அது சும்மா இருக்குமா!

40. **நபர் 1:** இந்த ஊரில் தங்க வீடு கிடைக்குமா..?
நபர் 2: கிடைக்காது.. கூரை வீடு, ஓட்டு வீடு, மாடி வீடுதான் கிடைக்கும்!
நபர் 1: ??????????

41. **கோபால்:** என் ஜாதகப்படி எனக்கு அறிவு ரொம்ப ஜாஸ்தியாம்.
தனபால்: இப்பவாது தெரியுதா நான் ஏன் ஜாதகத்தை நம்புறதில்லைன்னு.
கோபால்: ???????

42. **போலீஸ்:** ஏண்டா ராஸ்கல்! திருட்டு இரயில் ஏரியா சென்னை வரைக்கும் வந்த?
ஒருவன்: சார்! அது திருட்டு இரயில்-ன்னு சத்தியமா எனக்கு தெரியாது.. நான் அது கவர்மெண்ட் இரயில்-ன்னு நெனச்சுத்தான் ஏறினேன்.
போலீஸ்: ??????????

43. **மந்திரி**: இந்த முறை போரில் வெற்றி நமக்குதான்னு எப்படிச் சொல்றீங்க தளபதியாரே..?
தளபதி: மகாராணியார் செய்திருக்கிற தீபாவளி ஸ்வீட்களை ஆயுதமாக எடுத்துக்கொண்டு மன்னர் போருக்குப் போயிருக்கிறாரே அதான்?
மந்திரி: ???????????

44. **தொண்டர் 1**: தலைவர் எதுக்காக எடை பார்க்கும் மிஷினை பக்கத்துலயே வச்சிருக்காரு?
தொண்டர் 2: அவரைத் தேடி வர்றவங்க கிட்டே அவரோட வெயிட்டை காண்பிக்கவாம்!
தொண்டர் 1: ???????????

45. **ஒருவர்:** என்ன அந்த ஆளு பேங்க்ல வந்து சண்டைப் போட்டுக்கிட்டு இருக்காரு..

மற்றவர்: சும்மா இருந்த எனக்கு போன் பண்ணி பைக் லோன் தந்தீங்கல்ல.. பெட்ரோல் வாங்கவும் லோன் கொடுங்கன்னு சத்தம் போடுறாரு.

ஒருவர்: ???????????

46. **வனஜா:** இவ்வளவு அழகா எனக்கு லெட்டர் எழுதியிருக்கானே ஒருத்தன், இவனைப் பத்தி நீங்க என்ன நினைக்கறீங்க?

மாறன்: படிச்சவன்னு தோணுது.

வனஜா: தப்பு, படிச்சது நான்தான். இவன் எழுதினவன்.

47. **காதலன்:** உன் காதலுக்காக என் உயிரையே கொடுப்பேன் டியர்!

காதலி: அதற்கு அவசியமில்ல!... நம்ம லவ், என் அப்பாக்கு தெரிஞ்சா, அவரே எடுத்துடுவாரு!

காதலன்: ???????

48. **காதலன்:** உன்ன அழகா படச்ச இறைவன் அதே சமயம் முட்டாளாவும் படைச்சிட்டானே...

காதலி: ஆமாம்.. நீங்க சொல்றது உண்மைதான்.

காதலன்: நீயே அத ஒத்துக் கொள்கிறாயா?

காதலி: ஆமாம், நான் அழகா இருந்ததால தான் நீங்க என்ன காதலிச்சீங்க.. நான் முட்டாள இருந்ததாலதான் உங்கள நான் காதலிச்சேன்

49. **மேனேஜர்:** இந்த ஆபிசுக்கு நான் மேனேஜரா? இல்லே நீ மேனேஜரா?

வேலையாள்: நீங்க கோபப்படற அளவுக்கு நான் எந்த தப்பும் செய்யலையே சார்?

மேனேஜர்: அட அதில்லையா.. கொஞ்ச நாளா எனக்கு ஞாபக மறதியா இருக்கு. அதான் கேட்டேன்..!

50. **ராமு:** பஸ்ஸில் போகும் போது என் பையில் ஒருத்தன் பிளேடு போட்டுட்டான்.

சோமு: அப்புறம் என்னாச்சி?

ராமு: பிளேடை தூக்கி வெளியில் போட்டு விட்டேன்.

51. **கடைக்காரர்:** மளிகை கடையில வேலை பார்த்தவனை மருந்து கடையில வேலைக்கு வைத்தது ரொம்ப தப்பா போச்சு.

மற்றவர்: ஏன் அப்படி சொல்றீங்க.

கடைக்காரர்: எதை எடுக்கச் சொன்னாலும் எத்தனை கிலோ வேணும்னு கேட்கிறான்.

52. **ராமு:** உன் காதலி உனக்கு மோதிரம் பரிசாக கொடுத்தாளே! என்ன சொல்லி கொடுத்தா?

சோமு: நாலு கை மாறி வந்த ராசியான மோதிரம் என சொல்லி கொடுத்தாள்.

ராமு: ??????????

53. **நபர் 1:** ரொம்பக் கஷ்டப்பட்டு வீட்டைக் கட்டிட்டேன், ஆனா மனசுக்குள்ள ரொம்ப பயமா இருக்கு!

நபர் 2: எதுக்கு பயம்? கடன் அதிகமாயிடுச்சா?

நபர் 1: இல்ல.. நிலம்தான் யாருடையதுன்னு தெரியல!

54. **சோமு:** அதிக விலை கொடுத்து இந்த கார வாங்கறாரு. ஆனா அவருக்கு ஒண்ணுமே தெரியாது போலருக்கே.

வேலு: எத வச்சு சொல்ற?

சோமு: வண்டில ஸ்பீட் ப்ரேக் எங்கன்னு கேக்கறாரு.

55. **தந்தை:** எக்ஸாம் ஹாலிலே தூங்கிட்டு வரேன்னு சொல்றியே, வெக்கமாயில்லை.

மகன்: நீங்க தானேப்பா கேள்விகளுக்கு விடை தெரியலைன்ன முழிச்சுட்டு இருக்காதேன்னு சொன்னீங்க.

தந்தை: ????????

56. **கோபு:** உங்க பையன் கோவிலுக்குப் போனா அதிகமா பொய் பேசறானே, ஏன்?

பாபு: கோவிலுக்குள்ளே போனதும் அவன் மெய் மறந்துடுவான்.

கோபு: ?????????

57. **நண்பர் 1:** ஏன், எல்லாப் பேஷண்டுகளும் ஜாலியா இருக்காங்க?

நண்பர் 2: டாக்டர்கள் எல்லாம் இன்னைக்கு ஸ்டிரைக் ஆச்சே, அதான்....

நண்பர் 1: ???????

58. **ஒருவர்:** அந்த ஆளுக்கு வியாபாரத்துல நல்ல பணம் வந்த உடனே உடம்பு ஊதிப்போச்சு...

மற்றவர்: என்ன வியாபாரம் பண்றாரு?

ஒருவர்: பலூன் வியாபாரம்..!

59. **ரமனன்:** புத்தகக் கடைக்காரர்கிட்ட வம்பிழுத்தது தப்பாப் போச்சு.

வேலு: ஏன்?

ரமனன்: நல்லா புரட்டி எடுத்துட்டாரு.

60. **ஒருவர்:** உங்க கதை உப்புச் சப்பே இல்லாம, ரொம்ப சுமாரா இருக்கு!

எழுத்தாளர்: நான் உங்களைக் கதையைப் படிக்கத்தானே சொன்னேன், நீங்க ஏன் அதைச் சாப்பிட்டிங்க?

ஒருவர்: ??????

61. **சோமு:** அங்கே பாரு, நாய் நம்மல பார்த்து குரைக்குது.

ராமு: குரைக்கிற நாய் கடிக்காது...

சோமு: ஏன் கடிக்காது?

ராமு: நாயால ஒரே சமயத்துல இரண்டு வேலையை எப்படி செய்ய முடியும்?

சோமு: ??????

62. **நண்பன் 1:** காய்கறிகள் அழுவாம (அழுகாம) இருக்கனும்னா என்ன செய்யனும் தெரியுமா?

நண்பன் 2: ஃப்ரிட்ஜ்ல வைக்கனுமா?

நண்பன் 1: இல்ல, அடிக்கடி அதுங்ககிட்ட ஜோக் சொல்லனும், அழுகாம சிரிச்சுட்டே இருக்கும்.

63. **நண்பர் 1:** சீக்கரமே பணத்தை பெருக்க என்ன வழி?

நண்பர் 2: கீழே போட்டுட்டு விளக்குமாறு எடுத்து பெருக்க வேண்டியது தான்

64. **தலைவர்:** என்னப்பா மேடையில ஓடா வந்து விழுது.

தொண்டர்: ஓட்டை அள்ளி வீசுங்கன்னு சொன்னதை தப்பா புரிஞ்சிக்கிட்டாங்க..

65. **காவல் அதிகாரி:** உங்களை அரெஸ்ட் பண்றேன், வாங்க ஆஸ்பத்திரிக்கு...

அரசியல் வாதி: எதுக்கு?

காவல் அதிகாரி: எப்பவும் ஜெயிலுக்குப் போனதும் நெஞ்சுவலி-ன்னு ஆஸ்பத்திரிக்குத் தானே போகப் போறீங்க, அதான்.

66. **பையன்:** அப்பா ராமு என்னை அடிச்சுட்டான்பா...

அப்பா: வாத்தியார் கிட்ட புகார் கொடுக்க வேண்டியது தானே?

பையன்: வாத்தியார் பெயர் தான் ராமு.

67. **நீதிபதி:** ஒரு மாதம் சிறை தண்டனை அல்லது நூறு ரூபாய் அபராதம் இரண்டில் எது வேண்டும் உனக்கு..?

குற்றவாளி: நூறு ரூபாய் கொடுங்க சாமி அது போதும்..!

68. **நீதிபதி:** அந்த ATMல கொள்ளயடிச்ச பணத்த என்ன பண்ணுண...?

திருடன்: பையன LKGல சேர்த்துட்டேன் அய்யா.

நீதிபதி: அப்படினா மீதி பணத்துக்கு எங்க போய் கொள்ளை அடிச்ச?

திருடன்: ??????

69. **அவர்:** என் பையன் செஞ்ச காரியத்தால என்னால வெளியில தலைகாட்ட முடியல?

நண்பர்: ஏன்? என்னாச்சு..

அவர்: என் விக்கை எடுத்துட்டு போய்ட்டான்.

70. **வக்கீல்:** இந்த வழக்கில் உனக்கு விடுதலை வாங்கித் தரலேனா... நான் என் வக்கீல் தொழிலையே விட்டுவிடுகிறேன்...

ரவுடி: தொழிலை அல்ல... உயிரையே விட வேண்டி வரும்....!

வக்கீல்: ?????????

71. **நண்பர்1:** இன்னிக்கு தண்ணீரை நான் ஏமாத்திட்டேன்.

நண்பர்2: எப்படி?

நண்பர்1: குளிக்கறதுக்காக சூடு பண்ணிட்டு பச்சைத் தண்ணில குளிச்சுட்டேன்.

72. **தொண்டர்1:** செல்பியில் எல்லா தலைவர்களும் முறைச்சுக்கிட்டு இருக்காங்களே... ஏன்?

தொண்டர்2: இது தேர்தல் ரிசல்ட்டுக்கு அப்புறம் எடுத்த செல்பியாம்!

73. **பக்தன்:** கடவுளே எனக்கு டென்ஷன் கொடு... தினமும் தொல்லை கொடு... என்னை லூசாக்கி தெருவில் ஓடவிடு..

கடவுள்: இதுக்கு நீ ஒரே வார்த்தைல லவ்வர் வேணும்னு கேட்ருக்கலாம்..

பக்தன்: ??????

74. **ஜோசியர்**: உங்களுக்கு ஒரு தோஷம் இருக்கு... கல்யாணம் ஆனா அது நிச்சயமா காணாமப் போயிடும்.

ராமு: அப்படி என்ன தோஷம்?

ஜோசியர்: வேறென்ன சந்தோஷம் தான்!

75. **கட்சித் தலைவர்:** யாருப்பா அது.. மரத்து மேல ஏறி உக்காந்திருக்காரு?

நிர்வாகி: அவர்தான் தலைவரே நம்ம கிளை மேலாளர்!

76. **போலீஸ்:** எதுக்கு உங்க ஆசிரியர் மேல சைபர் க்ரைம் சட்டப்படி வழக்கு பதிவு பண்ணச் சொல்றீங்க?
மாணவர்கள்: அவங்க கணக்கு பரீட்சைல எங்களுக்கெல்லாம் சைபர் போட்டுட்டாங்க.
போலீஸ்: ?????????

77. **ராமு:** தொண்டை கரகரப்பா இருந்தா என்ன செய்யனும் தெரியுமா?
சோமு: தெரியலையே!
ராமு: சர்ப் எக்ஸல் போடனும்.. இந்தக் கறை, அந்தக் கறை, எந்தக் கறையா இருந்தாலும் போய்ரும்!

78. **ஒருவர்:** ஐயா வணக்கம், நான் மீன் வளர்க்கிறேன், அதுக்கு கொஞ்சம் புழு வேண்டும், எங்க கிடைக்கும்.
மற்றொருவர்: பக்கத்து தெருவுல ரேசன் கடை இருக்கு அங்க கிடைக்கும்.

79. **ஒருவன்:** பஸ்ல சீட் இருந்தும் நான் நின்னுக்கிட்டு தான் வந்தேன்?
மற்றொருவன்: சீட் இருந்தும் ஏன் நின்னுக்கிட்டு வந்தே?
ஒருவன்: எல்லா சீட்லயும் ஜனங்க உட்கார்ந்து இருந்தாங்க.

80. **அப்பா:** உன் வகுப்புல மொத்தம் 53 பேர் தானே..?
மகன்: அட.. எப்படிப்பா சரியா சொல்றீங்க?
அப்பா: உன் ரேங்க் பார்த்தாலே தெரியுதே..!

81. **அம்மா:** ஏன்டி, பரீட்சைக்கு போகும் போது நிறைய பரிசு வாங்கிட்டு போற?
மகள்: எங்க ஆசிரியர் தான் சொன்னாங்க, பரீட்சையில் நல்ல Present பண்ணனும்-ன்னு .
அம்மா: ??????????

82. **தொண்டன்:** தலைவா! உங்க பேரில் விசாரணை கமிஷன் வச்சிருக்காங்க.
தலைவன்: கமிஷனா..... வெரி குட்! எவ்வளவு கிடைக்கும்?

83. **அமைச்சர்:** மன்னா, எதிரி நாட்டு மன்னர் ஓலை அனுப்பியுள்ளார்.

மன்னர்: அரண்மனைக்கு நாம் ஏற்கனவே கான்கீரிட் போட்டாச்சு ஓலை வேண்டாம். திருப்பி அனுப்பிவிடும்!

84. **அப்பா:** புள்ளையாடா நீ ! எல்லா பாடத்திலேயும் பெயில், இனிமே என்னை அப்பான்னு கூப்பிடாத !

மகன்: சரி மச்சி ! ஓவரா சீன் போடாம சைன் போடு.

85. **மகன்:** அப்பா 2+5 எவ்வளவு?

அப்பா: அட மாங்கா மடையா, இது கூட தெரியலையா, தடிமாடு, தண்டச்சோறு, போய் கால்குலேட்டர் கொண்டு வா.

மகன்: ?????

86. **மன்னன்:** அமைச்சரே நெல்லாடிய நிலமெங்கே சொல்லாடிய சபை எங்கே?

அமைச்சர்: நிலமெல்லாம் பிளாட் போட்டாச்சு, சபையெல்லாம் கல்யாண மண்டபமா மாத்தியாச்சு மன்னா!

மன்னன்: ????

87. **வாடிக்கையாளர்:** எல்லோருக்கும் நாலு நாலு இட்லி கொடு.

சர்வர்: ஏம்பா! நாலு நாள் இட்லி ஏன் கேக்குற? இன்னிக்கு சுட்ட இட்லி தானே நல்லா இருக்கும்?

88. **ரமேஷ்:** அவரை எப்படி போலி டாக்டர்-னு கண்டுபிடிச்சீங்க?

சுரேஷ்: தொப்பை விழுந்திருக்குன்னு சொன்னா... விழுந்த இடத்தில் போய் தேடுன்னு சொல்றாரே..

89. **போலீஸ்:** யோவ்.... எதுக்காக திருடிட்டு வீடு பூராவும் கையெழுத்து போட்டு வெச்சிட்டு வந்தே?

திருடன்: சார்... கையெழுத்து போட பழகிட்டேன். அதுக்கப்புற எதுக்காக கைரேகையை வைக்கனும்?

போலீஸ்: ??????????

90. **நண்பர் 1:** சார்! கல்யாணம் ஆன நீங்க எப்படி ஓட்டப்பந்தயத்தில முதலாவதா வந்தீங்க?

நண்பர் 2: என் மனைவி பின்னாடி துரத்திட்டு வரமாதிரி நினச்சிகிட்டேன்.

91. **வாணி:** மாமியார் முகத்துல அயன் பாக்ஸ் வெச்சு தேய்ச்சியே ஏன்?

ராணி: முகத்துல சுருக்கம் விழுந்துருச்சுனு சொன்னாங்க அதான்.

92. **குமுதா:** உன் மாமியார் காணாம போனதுக்கு சந்தோசப்படாம கண்டுபிடித்து கொடுப்போருக்கு ரூ. 1000 பரிசுன்னு அறிவிச்சுருக்கியே ஏன்?

அமுதா: என்கிட்ட இருந்து தப்பிச்சு போய் அவங்க சந்தோசமா இருந்தா விட்டுடுவேனா!

93. **சிறுவன்:** ரோடு போடுற மெசின் எப்படி இருக்கும்பா?

அப்பா: தேர்தல் வரட்டும்... தெருவுக்கு நாலு நிக்கும், காட்டுறேன்!

94. **வேட்பாளர்:** அந்த தொகுதிக்கு கால்நடையாவே போயி ஓட்டு கேக்கலாம்-னு இருக்கேன்!

தொண்டர்: மனுசனாவே போயி கேளுங்க தலைவரே!

95. **நபர் 1:** சர்வர் வீட்டுக் கல்யாணத்துக்குப் போனது தப்பாப் போச்சு !

நபர் 2: ஏன்..?

நபர் 1: பந்தியில சாப்பிட்டவங்ககிட்டே எல்லாம் டிப்ஸ் கேக்கறார்...!

96. **விமலா:** உங்க மாப்பிள்ளைக்குப் பெரிய இடத்துல வேலையாமே!

கமலா: ஆமாம் பீச்ல சுண்டல் விக்கிறார்!

97. **நண்பர் 1:** இன்னையில இருந்து நான்கு நாள் என் பொண்டாட்டிக்கு பயப்படரதில்லனு முடிவு பண்ணியிருக்கேன்..

நண்பர் 2: ஏன்?

நண்பர் 1: நேத்துதான் என் பொண்டாட்டி ஊருக்குப் போனா அதான்!

98. **நண்பர் 1:** கல்யாண வீடுகளில் ஏன் வாழைமரம் கட்டுகிறார்கள்?
நண்பர் 2: கட்டலைனா வாழைமரம் விழுந்திடுமே.

99. **கம்பெனி எம்.டி:** இந்த வருடம் கடுமையா வேலை செஞ்சிருக்கீங்க. உங்களுக்கு நான் 5000 ரூபாய்க்கு செக் தர்றேன்.
குமார்: ரொம்ப நன்றி சார்.
கம்பெனி எம்.டி: இட்ஸ் ஓகே. இதே போல அடுத்த வருஷமும் நல்லா வேலை செஞ்சா இந்த செக்ல கையெழுத்துப் போட்டுத் தர்றேன்

100. **வீட்டுக்காரர்:** திரும்ப திரும்ப என் வீட்ல திருட்டு போகுது, சார் ...
போலீஸ்: அப்ப திரும்பாம ஒரே பக்கமா இருந்துவிட வேண்டியது தானே?

பஞ்ச் ஜோக்ஸ்

1. கழுவி ஊத்திட்டு காபி குடுத்தா அது டீ கடை
காபி குடுத்துட்டு கழுவி ஊத்துனா அது கம்பெனி மீட்டிங்

2. போன மாசம் 55 கிலோ எடை இருந்தேன் இப்ப 60 கிலோ எடை இருக்கேன்...
ஆனா போட்டிருக்க பேண்ட் சைசும் மாறல! சட்டை சைசும் மாறல!
அப்போ கண்டிப்பா அறிவு தான் வளர்ந்திருக்கும்.

3. காதல் என்பது கரண்ட் போன நேரத்துல வர கொசு மாதிரி
தூங்கவும் முடியாது ! துரத்தவும் முடியாது

4. பெருசா fb-ல உனக்கு 100 பொண்ணுங்க friend-ஆ இருக்காங்கனு சொல்ற..... உன் காலேஜ்-ல ஒரு பொண்ணு உன்கிட்ட பேசுமா?

5. **அஜித்:** அத்திப்பட்டினு ஒரு ஓர் இருந்ததே அது தெரியுமா உங்களுக்கு?
நீதிபதி: எருமைநாயகம்பட்டினு ஒரு ஊர் இருக்கே அது தெரியுமா உனக்கு???
அஜித்: தெரியாதே...
நீதிபதி: அப்ப அதுக்கும் இதுக்கும் சரியா போச்சு

6. **அப்பா:** என்னம்மா அங்க சத்தம்?
மாப்பிள்ளை: சும்மா பேசிட்டு இருந்தேன் மாமா.

7. என் கண்ணையே உங்கிட்ட ஒப்படைக்கிறேன். அதுல ஆனந்தக் கண்ணீரை மட்டும் தான் நான் பார்க்கணும்.

8. ஓபனிங் நல்லாதான் இருக்கு ஆனா பினிஷிங் சரியில்லையே.

9. ரிஸ்க் எடுக்கறதெல்லாம்... எனக்கு ரஸ்க்கு சாப்பிடற மாதிரி.

10. என்னைய காரைக்குடி பார்ட்டியில கூப்பிட்டாகோ, தஞ்சாவூர் பார்ட்டியில கூப்பிட்டாகோ, அங்கெல்லாம் போகாம என் கெரகம் இங்க வந்து மாட்டிக்கிட்டேன்.

11. எத்தனை நாளைக்கு தான் ஊரான் காதலை ஊட்டி ஊட்டி வளர்க்கிறது எனக்கும் ஊட்டி போய் டூயட் பாடணும்னு ஆசையிருக்காதா.

12. மொறைப் பொண்ணும், மொட்டை மாடியில காயப் போட்டிருக்கற வத்தலும் ஒண்ணு. எப்போ எவன் தூக்கிட்டுப் போவான்னே தெரியாது.

13. புண்ணாக்கு வேணும்னா எருமையா இருக்கனும். பொண்ணு வேணும்னா பொறுமையா இருக்கனும்.

14. நீ யாருன்னு எனக்கு தெரியும் நான் யாருன்னு உனக்கு தெரியும்.. நாம ரெண்டு பேரு யாருன்னு இந்த ஊருக்கே தெரியும்.

15. ஏன்டா, எவன கேட்டாலும் மலேசியாவுல இருந்து காசு வருது, சிங்கப்பூர்ல இருந்து காசு வருதுன்னு சொல்றீங்க, அப்ப இந்தியால இருந்த காசெல்லாம் எங்கடா போச்சு?

16. மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம். மோட்டர் அமைவதெல்லாம் அவனவன் செய்த வினை. நமக்கு மனைவியும் அமையல.. மோட்டரும் அமையல..

17. கொசுக்கு வல வீசுனா வலைக்குள்ள என்ன இருக்கும்?கொசு இருக்கும்.

மீனுக்கு வல வீசுனா வலைக்குள்ள என்ன இருக்கும்? மீனிருக்கும்.

நாய்க்கு வல வீசுனா வலைக்குள்ள என்ன இருக்கும்? நாய் இருக்கும். இல்ல நாயே நீயிருப்ப.....

18. ஊருக்குள்ள ரெண்டே ரெண்டு புத்திசாலி தான் ஒண்ணு ஜி.டீ நாயுடு. இன்னொன்னு இந்த தர்மடி தர்மலிங்கம்.

19. இன்னொருத்தர் உஷார் பண்ண பொண்ணை கூட உஷார் பண்ணிடலாம்... ஆனா எப்பவுமே உஷாரா இருக்க பொண்ணை உஷாரே பண்ண முடியாது.

20. நாகூர் பிரியாணி உளுந்தூர்பேட்டையில இருக்க நாய்க்கு தான் கிடைக்கனும்னு எழுதியிருந்தா அதை யாராலும் மாத்த முடியாது...

21. டேய் நாயே, நீயே ஜெயில்ல இருந்துதானே வந்திருக்கே? என்னமோ ஜெர்மன்ல இருந்து வந்தா மாதிரி ஃபிலிம் காட்ற?

22. அடி கொடுத்த கைப்புள்ளைக்கே இவ்ளோ அடினா.. அடி வாங்கினவன் உயிரோட இருப்பன்னு நினைக்கற.

23. தனியா போய் கேட்டா அது தகராறு, தண்ணியோட போய் கேட்ட அது வரலாறு.. வரலாறுல நான் இடம் புடிக்கனும்...

24. நெய் மீன் இருக்குன்றான்.. நெத்திலி மீன் இருக்குன்றான், ஆனா நீங்க கேட்ட ஜாமீன் மட்டும் இல்லன்னுடாங்க அண்ணே, கடல்லயே இல்லையாம்.

25. ஒரு வருசமா உசுர கொடுத்து சொல்லிக்கொடுத்த வாத்தியாரை மறந்துட்டு பாஸ் ஆகி போறீங்களே உங்கள மாதிரி நன்றி கெட்டவன் நான் கெடையாது.

26. மேயற மாட்ட நக்கற மாடு கெடுத்த மாதிரி.. சும்ம இருந்த என்ன சொறிஞ்சு விட்டாங்க டா.. ராமசாமிக்கு குடுத்த பணம்.. ஊஊஊஊஊ

27. காலைல வேலைக்கு போறவன் இவன் முகத்தைப் ஒருதடவ நேரா பார்த்துட்டுபோனா போதும், ஸ்பாட் அவுட் அந்த இடத்திலேயே ஆக்ஸிடன்ட் ஆகி செத்துருவான். இவன் மூஞ்சிக்கெல்லாம் கூலிங் கிளாஸ். சீ நாயே அத கலட்டு முதல்ல..

28. நாட்டுல எத்தனையோ பொண்ணுங்க இருக்காங்க. ஏழைக்கு ஏத்த எள்ளுருண்டைங்கற மாதிரி, நமக்கேத்த மாதிரி வத்தலோ தொத்தலோ, ஈயமோ பித்தளையோ, பூசுனதோ பூசாததோ அந்த மாதிரி ஒரு பொண்ண பார்த்து லவ் பண்ணக் கூடாதா?

29. கவர்மெண்ட் ஜாப்பை ரிசைன் பண்ணிட்டு போறாரு இவரு.. சொறிப் புடிச்ச மொன்ன நாய்... அந்த முக்குல போய் உட்காந்து பிச்சை எடுக்கப் போகுது அதுக்கு ரவுசப்பாரு.. சவுண்ட் என்னமா குடுக்குது.

30. பில்டப் பண்றமோ பீலா விடுறமோ அது முக்கியமில்ல.. நம்ம எது பண்ணாலும் இந்த உலகம் நம்ம-ல உடனே உத்துப்பாக்கணும். நாதாரித்தனம் பண்ணாலும் நாசுக்கா பண்ணனும் டா. ஆனா நாம பண்றது நாலு பேருக்கு புரியப்படாது தெரியப்படாது...

31. எவ்வளவு படிச்சாலும் புரிய மாட்டீங்குதேடா? எதுக்கும் புக்க கொஞ்சம் நேரா வச்சு படிச்சு பாருங்க.. புரிஞ்சாலும் புரியும்..

32. குமரேசா.. எங்க போற.. ஊருக்குள்ள பெரிய பெரிய ரவுடியெல்லாம் இங்க இருக்கையில நீ தனியா போயி அடிபட்டு சாகப்போறியா...

33. அடியேய்.... அமெரிக்க தொழில் அதிபர்னு போனயேடி அவன் கடைசில அங்க கக்கூஸ் கழுவிகிட்டு இருக்கான்.

34. லைட்டா காத்தடிக்கற மாதிரி இருக்குது, மரம்மெல்லாம் அப்படிக்கா இப்படிக்கா அசையுது. பூவெல்லாம் அதுவாவே உதிருது...அப்படின்னா ஹீரோயின் வரப்போறான்னு அர்த்தமடா.

35. பிச்சக்காரங்க கிட்டயே பிச்சை கேக்கிற அளவுக்கு இந்த நாட்டுல வேலையில்லாத் திண்டாட்டம் தல விரிச்சு ஆடுது. அதுக்கொரு ஜடை பின்னி, பூ வைக்கிறதுக்கு இந்த தேசத்தில ஒரு நல்ல அரசியல்வாதிவரமாட்டானா?

36. பொண்ணும் பொறி உருண்டையும் ஒன்னு அதை பத்தரமா பாத்துக்கணும். நமத்துப்போச்சு அப்புறம் போணியே ஆகாது...

37. நான் வயசு பசங்கள கூட நம்புவேன்.... ஆனா உன்ன மாதிரி வயசாகி வழுக்கை விழுந்தவன நம்பமாட்டன்டா... போடா ..

38. ஒடஞ்சுபோன வாஸ்து பொம்மைய ஒட்ட வச்ச மாதிரி கோனல்மானலா ஒரு மூஞ்சி. இவன் பர்சனாலிட்டிய பத்தி பேசுறாண்டா..

39. தனி கட்சி ஆரம்பிச்சாகூட சமாளிக்கலாம் போல... தங்கச்சிகளை வச்சு சமாளிக்க முடியலடா பாண்டுரங்கா...

40. உன்ன ஆயான்னு கூப்பிடனுமா?... பக்கத்துல இருக்கிற பால்வாடில போய் சோறாக்கிப்போடு எல்லா குழந்தைகளும் உன்ன ஆயான்னு கூப்பிடும்.

41. இது மிஸ்டு கால் இல்லடா.. கூடிய சீக்கரம் நம்மளை கலட்டிவிடறதுக்கு அவளுங்க குடுக்கிற அபாய சங்கு.

42. லவ்ன்றது ஆயா சுடற வடை மாதிரி.. அதை எப்ப வேணும்னாலும் காக்கா வந்து கவ்விகிட்டு போயிடும்.. ஆனா நட்புங்கிறது அந்த ஆயா மாதிரி.. அந்த ஆயாவ எவனாளும் தூக்க மாட்டான்.

43. வாழ்க்கை ஒரு வட்டம்னு மாமனார் சொல்லுவான்...ஆனா இவ்வளவு சின்ன வட்டமா இருக்கும்னு நினச்சுப்பார்க்கல டா..

44. போர் அடிக்குதுன்னு போன் பண்றவன் பிரண்டு.. பீர் அடிக்கலாம்னு போன் பண்றான் பாரு அவன் பெஸ்ட் பிரண்டு..

45. உனக்கும் டேன்ஸ்கும் ரொம்ப தூரமாச்சே... எவ்வளவு தூரம்னு சொல்லு ப்ரோ... நான் ஆட்டோ வெச்சு வந்துடுறேன்.

46.உன்னை யாராவது லூசுன்னு சொன்னா கவலைப்படாதே! வருத்தப்படாதே! ஃபீல் பண்ணாதே! உங்களுக்கு எப்படி தெரியும்னு கேளு!

47. ஒடுர எலியின் வாலை புடிச்சா நீ கிங்கு ....
ஆனா, ஒடுர புலியின் வாலை புடிச்சா உனக்கு சங்கு!!

48. கடவுள் கிட்ட துணி கேட்டேன்.. துணி கடையே கொடுத்தார்..
சாப்பாடு கேட்டேன்... ஹோட்டலே கொடுத்தார்...
செலவுக்கு 5000 கேட்டேன்... உடனே கிளம்பிவிட்டார்.

49. ஸ்கூல் டெஸ்ட்ல பிட் அடிக்கலாம் ...
காலேஜ் டெஸ்ட்ல பிட் அடிக்கலாம் ...
ப்ளட் டெஸ்ட்ல பிட் அடிக்க முடியுமா?

50. துவைத்து போட்டா துணியெல்லாம், ஒரு மணி நேரத்தில காய்ஞ்சிருது.. குளிச்சிட்டு போட்டா சட்டை, ஒரு மணி நேரத்தில நனைஞ்சிருது..

51. நீங்க என்னத்தான் MBBS படிச்சாலும், Operation பண்ணும் போது உங்களுக்கு ஒரு Engineer உருவாக்கின Tools தாண்டா தேவைப்படுது!!

52. படு-னு சொன்னா படுத்து தூங்குற குழந்தைகளை விட.. படி-னு சொன்ன அடுத்த செகன்டே படுத்து தூங்குற குழந்தைகள் தான் அதிகம்.....

53. நவரசமான ரசனையுடைய பொண்ணு வேணும்னு தேடி அலையறவனுக்கு.. புளி ரசம் கூட ஒழுங்கா வைக்கத்தெரியாத பொண்டாட்டிதான் அமைவா... ஏன்னா... அதுதான் விதி..

54. நாம அடிச்சா அது மொட்டை, அதுவா விழுந்த அது சொட்டை !

55. dye- னா மண்டையில போடுறது, die-னா மண்டைய போடுறது...

56. தண்ணிக்குள்ள கப்பல் போன ஜாலி...
கப்பல்குள்ள தண்ணி போன நீ காலி...

57. பெருசா fbல உனக்கு 100 பொண்ணுங்க friends-ஆ இருக்காங்கனு சொல்ற.. உன் காலேஜ்-ல ஒரு பொண்ணாவது உன்கிட்ட பேசுமா?

58. நான் கோடு போட்டா நீ ரோடு போடுவ. நான் புள்ளி வெச்சா நீ கோலம் போடுவ. நான் மிஸ்டுகால் கொடுத்தா மட்டும் நீ ஏண்டா திரும்ப கூப்பிட மாட்டேங்கிற?

59. கோழி போட்ட முட்டையிலிருந்து இன்னொரு கோழி வரும்..ஆனா, வாத்தியார் போட்ட முட்டையிலிருந்து இன்னொரு வாத்தியார் வருவாரா?

60. சின்ன வயசுல என்னதான் சாப்பிட ஸநாக்ஸ் வாங்கி கொடுத்தாலும் யாருக்கும் தெரியாம சாக்பீஸ் சாப்பிட்டது தனி டேஸ்ட் தான் டா.

61. ஒருவர்: ஹீரோ பேசும்போது ஏன் அப்பப்போ பஞ்சை பறக்க விடுறீங்க? மற்றொருவர்: பஞ்ச் டயலாக் என்பதை ஆடியன்ஸ்க்கு காட்டனுமில்ல.

62. ஆடினாதான் மயிலு, பாடினாதான் குயிலு, ஓடினாதான் ரெயிலு, உள்ளப்போனா ஜெயிலு, வெளியில வர பெயிலு... எஸ்.எம்.எஸ். அனுப்புனாதான் மொபைலு

63. அமெரிக்காவை கண்டுபிடிச்சது கொலம்பஸ்-ன்னு தெரியும், ஆனா அமெரிக்காவை தொலைச்சது யாரு?

64. பேப்பர் போடுறவன் பேப்பர்காரன், பால் போடுறவன் பால்காரன், அப்ப பிச்சைப் போடுறவன் பிச்சைக்காரனா?

65. எல்லா stage-லயும் டான்ஸ் ஆடலாம்.. ஆனா கோமா stage-ல டான்ஸ் ஆட முடியுமா?

66. லாரி-ல கரும்பு ஏத்துனா காசு! கரும்பு-ல லாரிய ஏத்துனா ஜூசு!!

67. போன வருஷம் அடிச்ச வெயிலுக்கு மூஞ்சி ஆதார் கார்ட்ல உள்ள மாதிரி மாறுச்சு.. இந்த வருஷம் அடிக்கிற வெயிலுக்கு மூஞ்சி ஆதார் கார்ட் ஜெராக்ஸ்ல உள்ள மாதிரி மாறிடும் போல..

68. தெற்கால படுத்தா 2G காட்டுது.. வடக்கால படுத்தா 3G காட்டுது.. அப்போ 4G காட்றதுக்கு தெருவுல தான் படுக்கணும் போல..

69. ஒன்றுமே தெரியாத ஸ்டூடன்டு கிட்ட கொஸ்டின் பேப்பர் கொடுக்குறாங்க... எல்லாம் தெரிஞ்ச வாத்தியார்கிட்ட ஆன்சர் பேப்பர் கொடுக்குறாங்க... என்ன கொடும சார் இது?....

70. Energy Low ஆகும் வரை விளையாடியது அந்தக் காலம்.
Battery Low ஆகும் வரை விளையாடுவது இந்தக் காலம்.

71. தூங்கப் போறதுக்கு முன்னாடி குட்நைட் சொல்லலாம்.... ஆனால், எழுந்திருக்கிறதுக்கு முன்னாடி குட்மார்னிங் சொல்ல முடியுமா?

72. நெல்லுக்குள் அரிசிபோல, பூவுக்குள் தேன்போல, மண்ணுக்குள் வைரம்போல... உன் மனசைத் தொட்டு சொல்லு.. உன் மண்டைக்குள் களிமண்தானே....?

73. காலேஜ் படிக்கிறப்ப கேட்டுக்கு வெளியே நின்னா சஸ்பெண்டுன்னு அர்த்தம்.
கல்யாணமானதுக்கப்புறம் வீட்டுக்கு வெளிய நின்னா ஹஸ்பெண்டுன்னு அர்த்தம்.

74. என்னதான் ரெண்டு காது இருந்தாலும், நாம ஒண்ணுன்னு சொன்னா, ஒண்ணுன்னு தான் கேட்கும்.

75. பொங்கலுக்கு கவர்மெண்டுல லீவு குடுப்பாங்க. அதே மாதிரி இட்லி வடைக்கும் கேட்க முடியுமா?

76. காலம் என்பது ரஜினி படம் மாதிரி தானா ஓடிடும்.....
வாழ்க்கை என்பது விஜய் படம் மாதிரி நாம தான் ஓட்டனும்.

77. என்னதான் நீங்க சென்டிமெண்ட் பார்த்தாலும்,
கப்பல் கிளம்பறதுக்கு முன்னாடி எலுமிச்சம் பழம் எல்லாம் வைக்க முடியாது... சங்கு ஊதிவிட்டுதான் கிளம்பணும்.

78. ஏன்யா பணத்த மட்டும் கரெக்டா பேங்கில போடுறீங்களே!! அதுமாதிரி குப்பையையும் குப்பத்தொட்டில போட்டா என்ன?

79. வகுப்பறை என்பது ரயில் மாதிரி,
முதல் இரண்டு பெஞ்ச் வி.ஐ.பி
நடுவில் இரண்டு பெஞ்ச் பொது
கடைசி இரண்டு தூங்கும் பெஞ்ச்
நல்லா ஓடுது...

80. ஆண்கள் பொய் சொல்ல மாட்டார்கள்!
பெண்கள் நிறைய கேள்வி கேட்காமல் இருந்தால்...

81. இலைய வெட்டி ஆட்டுக்கு போடுவாங்க..
அப்புறம் ஆட்ட வெட்டி இலையில போடுவாங்க... இவ்வளவுதான் வாழ்க்கை...!

82. என்ன தான் நீங்க vijay fan-னா இருந்தாலும் fan உங்க தலை-ல விழுந்த ஐயோ தல-ன்னு தான் கத்துவிங்க.....

காமெடி ஜோக்ஸ்

1. **ஜோன்ஸ்:** பெண் பார்த்து வந்த பின் அவன் ஏன் விழுந்து விழுந்து சிரிக்கிறான்.

பீன்ஸ்: துன்பம் வரும் வேளையில் சிரிங்க என்று யாரோ சொன்னாங்களாம்.

பையன்: அம்மா! எதிர் வீட்டு ஆன்டி பேர் என்னம்மா?

அம்மா: விமலா டா...

பையன்: அப்பாவுக்கு இது கூட தெரிய மாட்டேன்குதும்மா. அந்த ஆன்டிய "டார்லிங்"னு கூப்புடுறார்.

2. **சுரேஷ்:** பசங்களெல்லாம் பயப்படற மாதிரி சினிமாப்படப் பெயர் சொல்லுடா பார்க்கலாம்.

ரமேஷ்: காலையில் எக்சாம் மாலையில் ரிசல்ட்

3. ஒரு வழுக்கைத் தலை ஆள்:கொஞ்சம் ஏமாந்ததால எல்லாரும் என் தலை மேல ஏறி உட்கார்ந்துட்டாங்க?"

அப்புறம் என்ன ஆச்சு?

வழுக்கி விழுந்துட்டாங்க!

4. **பையன்:** அம்மா! எதிர் வீட்டு ஆன்டி பேர் என்னம்மா?

அம்மா: விமலா டா...

பையன்: அப்பாவுக்கு இது கூட தெரிய மாட்டேன்குதும்மா. அந்த ஆன்டிய "டார்லிங்"னு கூப்புடுறார்

5. **சுரேஷ்:** பசங்களெல்லாம் பயப்படற மாதிரி சினிமாப்படப் பெயர் சொல்லுடா பார்க்கலாம்.

ரமேஷ்: "காலையில் எக்சாம் மாலையில் ரிசல்ட்"

6. ஒரு வழுக்கைத் தலை ஆள்கொஞ்சம் ஏமாந்ததால எல்லாரும் என் தலை மேல ஏறி உட்கார்ந்துட்டாங்க?

அப்புறம் என்ன ஆச்சு?
வழுக்கி விழுந்துட்டாங்க!

7. தூங்கும்போது அலாரம் அடிக்கிற சத்தத்தைக் கேட்டாலே எனக்கு அலர்ஜி...

அதனால்...?
அலாரம் செட் பண்ணிட்டு, அது அடிக்கறதுக்கு முந்தியே "டாண்"னு எழுந்து, அதை ப் பண்ணிடுவேன்!

8. நம்ம தலைவருக்கு ஆஸ்பத்திரியில உடனடியா ரத்தம் கொடுக்கணும்னு சொல்றாங்க..ஆனா அவர் குரூப் ரத்தம் கிடைக்கலை
அவர் ரத்தம் என்ன குரூப்
ஊழல் குரூப்பாம்

9. ஊர்ல இருந்து உங்க மாமனார் வர்றதா கடிதம் வந்திருக்குன்னு சொல்றியே..உங்கப்பா ன்னு சொல்லக்கூடாதா?
உங்க சொந்தக்காரர்களைத்தானே உங்களுக்கு பிடிக்கும்.

10. வர வர என் புருஷன் ரொம்ப மோசமாகிட்டே இருக்காருடீ..

ஏன்.. குடிச்சிட்டு வந்து ரொம்ப சண்டை போடறாரா..?
இல்லே.. டாக்டர் கொடுத்த டானிக்கைக் கூட ஊறுகாய் இருந்தாதான் குடிப்பேன்னு அடம் பிடிக்கிறாருடி..

11. **கணவன்**: அம்மாவுக்கு உடம்பு சரியில்லையாம். பணம் அனுப்ப சொல்லி, லெட்டர் போட்டிருக்காங்க....

மனைவி: சுக்கு காய்ச்சி குடிக்கச் சொல்லுங்க எல்லாம் சரியாப் போய்டும்.

கணவன்: ஓகே ...அப்படியே உங்கம்மாவுக்கு எழுதிப் போட்டுகிறேன்.

மனைவி: என்னது... எங்கம்மாவுக்கா....? சொல்றத சரியா.. சொல்றீங்களா... ஒன்னத்துக்கும் லாயக்கு இல்லே...உடனே...டாக்சிக்கு...சொல்லுங்க...ஆபீசுக்கு ஒரு வாரம்...லீவும்....சொல்லுங்க...போய்...பாத்துட்டு வந்துடுவோம்.

12. **மனைவி:** சாப்பாடு போட வா?

கணவன்: அடியே இன்னைக்கு நான் ஓட்டல்ல சாப்பிட்டுட்டேன்

மனைவி: அது சரி எவ்வளவு மாவாட்டிட்டு வந்தீங்க?

13. **ஆசிரியர்:** ஐந்து ரூபாயில் இரண்டு ரூபாய் போனால் எவ்வளவு??

மாணவன்: ஐந்து ரூபாயில் பெரிய ஒட்டைனு அர்த்தம் சார்.

14. **கணவன்:** நம்ம பையன் எல்லா பாடத்திலும் முதல் மார்க்னு சொன்னான், நீ ஏண்டி முழிக்கிறே?

மனைவி: அவன் சொன்னது எல்லா பாடத்திலும் ஒவ்வொரு மார்க் வாங்கியிருக்கிறதை.

15. **கணவன்:** ச்சீய்! காப்பியாடி இது? நாய்கூட இதை குடிக்காதுடி.

மனைவி: ஆமாங்க! அதனாலதான் நம்ம நாய்க்கு ஹார்லிக்ஸ் போட்டு வச்சுருக்கேன்.

கணவன்: ????!!!!

16. **மனைவி:** என்னங்க நாளைக்கு நம்ம கல்யாணநாள் இதுவரைக்கும் நான் பார்க்காத இடத்துக்கு என்னை கூட்டிட்டு போங்க

கணவன்: வா செல்லம் நம்ம வீட்டு சமையல் அறைக்கு போகளாம்...

மனைவி: ??????????????????

17. **மனைவி:** வேலைக்காரியை இனிமே வேண்டாம்னு சொன்னீங்களாமே.... அதைச் சொல்ல நீங்க யாரு?

கணவன்: அப்படினா வேலைக்கு சேர்த்துக்கலாம்ங்கறியா?

மனைவி: இல்ல,,, நானே சொல்லிடறேன் இனிமே வராதேன்னு.😆

18. டாடிக்கு நம்மமேல கொஞ்சம் கூட பாசமே இல்லம்மா.

என்னடா இப்பிடிச் சொல்லிட்ட? தியேட்டர்.. ஹோட்டல்.. டூர்ன்னு எல்லாமே டாடி செய்றாங்கதான?

அதெல்லாம் நமக்காகவா டாடி செய்றாரு? அதெல்லாத்தையும் போட்டோ புடிச்சு பேஸ்புக்ல போட்டு லைக் வாங்கறதுக்காகத் தான் செய்யிறாரு.. ஆமா..!

19. FACEBOOK ல ஒரு பொண்ணுகிட்ட ஒரு பையன் "I LOVE YOU"னு சொன்னா,

அந்த பொண்ணுக்கு வருகிற சந்தேகம்,,

இவன் நல்லவனா கெட்டவனா??

நம்பலாமா வேணாமா??

குடிப்பானா மாட்டானா??

சிகரெட் பிடிப்பானா மாட்டானா??

உண்மைய பேசுறானா பொய் பேசுறானா??

மேலும் பல.....

இதுவே ஒரு பையன்கிட்ட பொண்ணு "I LOVE YOU"னு சொல்லுச்சுனா,

அவனுக்கு வருகிற சந்தேகம் ஒன்னே ஒன்னுதான்...

இது பொண்ணா இல்ல பேக்(fake) ஐடியா???

நீதி: Facebook ஐ கண்டுபிடிச்ச மார்க்கால கூட fake ஐடி'ய கண்டுபிடிக்க முடியாதுடா..!

20. **கஸ்ட்டமர்:** உங்க கடையில எல்லா மருந்துகளும் கிடைக்குமா சார்?

மருந்துக்கடைக்காரர்: அதிலென்ன சந்தேகம்? எல்லா மருந்துகளும் தரமாவே கிடைக்கும்!

கஸ்டமர்: அப்ப ஒரு கிலோ நாட்டு வெடிமருந்து குடுங்க!

மருந்துகடைக்காரர்: ங்ங்ங்ங்ஙே...!;

21. குப்பன் ஓட்டு போட்டுவிட்டு வெளியே வந்தார்.

பூத் ஏஜெண்டிடம் என் மனைவி ஓட்டு போட்டுட்டு போய்ட்டாளா என்று கேட்டார்.

ஏஜெண்ட் லிஸ்டை புரட்டி பார்த்துவிட்டு ஆமாம் ஓட்டு போட்டுட்டு போய்ட்டாங்க என்றார்.

குப்பன் வருத்தத்துடன் சொன்னார் - கொஞ்சம் முன்னாடியே வந்திருந்தா அவள பார்த்திருக்கலாம்.

பூத் ஏஜெண்ட் கேட்டார் - ஏண்ணே அக்கா உங்க கூட இல்லியா?

குப்பன் சொன்னார் - இல்லை தம்பி அவ செத்து 15 வருஷம் ஆச்சி - ஆனா ஒட்டு போட மட்டும் வந்துட்டு போறா.

22. ராத்திரியில சூரியன் எங்கே போகுது?
எங்கேயும் போகல..
இருட்டா இருக்கிறதால நம்மால அதைப் பார்க்க முடியலை!

23. "ஏன் தண்ணி தெளிச்சி கோலம் போடுறாங்க தெரியுமா?"
"கோலம் போட்டு தண்ணி தெளிச்சா கோலம் அழிஞ்சிடும்ல..!"

24. "நான் டெய்லி 10 கி.மீ. வாக்கிங் போறேன்."
"நடந்தேவா?" "ங்ங்ங்ங்நே...!"

25. ”டாக்டர், நான் நூறு வயசு வரை இருப்பேன்னு எங்க குடும்ப ஜோசியர் சொல்லி இருக்காரு...!”
”என் ஹாஸ்பிட்டலுக்கு ஆபரேசனுக்கு வர்றீங்கன்னு தெரிஞ்சுமா அப்பிடிச் சொன்னான் அந்த மடையன்? அப்ப சரி நானா ஜோசியரான்னு ஒரு கை பார்த்துடுவோம்..!” “ங்ங்ங்நே...!”

26. நம்மாளு பக்கத்தில் ஒரு வயதான மூதாட்டி, தான் கொண்டு வந்திருந்த குளிர்பானத்தை 20 நிமிடத்திற்கு ஒரு தடவை என, சிறிது சிறிதாக குடிப்பதை பார்த்து, எரிச்சலடைந்த நம்மாளு பாட்டியிடமிருந்து குளிர்பானத்தை பிடுங்கி, மடக்...மடக்.. என ஒரே மூச்சில் குடித்துவிட்டு..
நம்மாளு: பாட்டி கூல்டிரிங்க்சுன்னா இப்படி குடிக்கணும்...தெரியுதுங்களா?
பாட்டி: அடப்பாவி மவனே.. அவசரப்பட்டியேடா..!
நம்ம்மாளு: ஏன்? என்ன..?
பாட்ட்டி: அதுலதான் நான் வெத்தலைய துப்பிகிட்டு இருந்தேன்..!
ஹஹாஹாஹா!

27. ”அந்த ஆஸ்பத்திரியில ஆறாம் நம்பர் ரூமும்,நூறாம் நம்பர் ரூமும் ஆபரேஷன் தியேட்டர்..!”

”அப்ப ஆறுலேயும் சாவு நூறுலேயும் சாவுன்னு ஓப்பனாச் சொல்லுங்க..!”

“ங்ங்ங்ங்நே◌..!”

28. **டாக்டர்:** இவர ஒரு மணிநேரத்துக்கு முன்னால கொண்டு வந்திருந்தா... காப்பாத்தி இருக்கலாம்..!

உறவினர்: நான் என்ன டாக்டர் செய்யிறது? ஆக்ஸிடெண்ட் நடந்தே கால்மணி நேரந்தான ஆகுது?

டாக்டர்: "ங்ங்ங்நே...!"

29. என்னதான் வாழைமரம் "தார்" குடுத்தாலும்..
நம்மால அதைவச்சு "ரோடு" போட முடியாது!
இதாங்க வாழ்க்கைங்கறது!

30. **டாக்டர்:** ஐயாம் வெரி சாரி. உங்க மாமியார என்னால காப்பாத்த முடியலை!

மருமகள்: நீங்க நல்ல டாக்டர்ன்னு மத்தவங்க சொல்லுறதை நான் நம்பினதில்ல டாக்டர்.ஆனா அது உண்மைன்னு இப்ப நான் நம்புறேன் டாக்டர்..!

டாக்டர்: "ங்ங்ங்ங்நே...!"

31. **நோயாளி:** டாக்டர்.. நான் அஞ்சுதடவை தற்கொலைக்கு முயற்சி பண்ணிட்டேன் டாக்டர்!

டாக்டர்: மொத தடவையே என்னிய வந்து பாத்திருந்தா.. இந்தப் பிரச்சினையே வந்திருக்காதில்ல..?

நோயாளி உறவினர்: "ங்ங்ங்ங்நே...!"

32. **ஒருவர்:** "ஏப்பா பிச்சை எடுக்குறது தப்பில்லையா?"

பிச்சைக்காரர்: "நான் ஒங்களப் பிச்சை எடுக்கச்சொல்லலீங்களே சார்..பிச்சை போடத்தான சார் சொன்னேன்?"

"ங்ங்ங்ங்ங்நே...!"

33. **மனைவி:** எங்கிட்ட உங்களுக்கு பிடிச்சது என்னங்க? அழகான முகமா? அன்பான மனமா? என் பணிவான குணமா?
கணவன்: உன்னோட இந்த காமெடி சென்ஸ்தான் எனக்கு ரொம்பப் பிடிக்கும்!
மனைவி: "ங்ங்ங்ங்ங்னே..!"
அதுக்கப்புறம்.. கிர்ர்ர்ர்ர்.. டமால்... டுமீல்..!

34. ஏங்க உங்க வீட்டுல இவ்வளவு கொசு இருக்குதே..கொஞ்சமாவது மருந்து அடிக்கக் கூடாதா?
எல்லாம் என்னோட ரத்தம் சார். அதான்..அடிக்க மனசு வரல!
ங்ங்ங்ங்னே...!

35. டாக்டர் என் வீட்டுக்காரர் பேனாவை விழுங்கிட்டார்!
அரை மணி நேரத்தில் வந்துடுறேன்.
அதுவரை நான் என்ன செய்றது சார்?
பென்சிலை யூஸ் பன்னும்மா!!!
"ங்ங்ங்ங்னே...!"

36. ஹலோ.. நான் தேனி மாவட்டம் கம்பத்தில் இருந்து பேசுறேன்!
சரிங்க.. நீங்க எந்த மாவட்டத்திலிருந்தும் பேசுங்க தப்பில்ல. கம்பத்திலிருந்து கீழ விழுந்துடாதீங்க! இறங்கி வந்து பேசுங்க!
"ங்ங்ங்ங்னே?!?"

37. தோசை மாவு வாங்கப்போன என் புருசன ஒரு வாரமா காணோம் சார்!
ஒரு வாரமா நீ என்னம்மா பண்ணிக்கிட்டிருந்த?
உப்புமா, சப்பாத்தி, பூரின்னு சாப்பிட்டுக்கிட்டிருந்தேன் சார்!
"ங்ங்ங்ங்னே..."

38. **மோட்டு:** நேத்து நி என்னுடைய கச்சேரிக்கு வருவன்னு ரொம்ப எதிர்பாத்தேன். ஆனா வரலையே ஏன்?
பத்தலு: நானும் வரத்தான் நெனச்சேன். ஆனா அதுக்குள்ள வேறொரு கஷ்டம் வந்திடுச்சு..!
மோட்டு: "ங்ங்ங்ங்னே...! "

39. ஒருத்தர் புதுசா ஒரு ஐ.டி. கம்பெனியில வேலைக்குச் சேந்தாரு. மொதநாள் கேண்டீனுக்குப்போன் பண்ணினாரு.
"ஹலோ.. கேண்டீனா. ஸ்ட்ராங்கா.. ஒரு ஃபில்ட்டர் காஃபி அனுப்புய்யா!"
எதிர்முனையில்.. "டேய் லூசு.. இப்ப நீ தப்பான நம்பருக்குக் கூப்பிட்டிருக்கடா மடையா. ஒனக்கு நான் யாருன்னு தெரியுமா?""தெரியலையே!?!"
நான் இந்தக் கம்பெனியோட எம்.டி.டா அறிவுகெட்டவனே..
புதியவர் பயந்தாலும், கெத்தா குரலை உயர்த்திச் சொன்னாரு.. "அடேய்.. நான் யாருன்னு தெரியுமா?"
"தெரியாது!"அப்பாடா.. தப்பிச்சேன்..! டொய்ங்ங்ங்!
"ங்ங்ங்ங்நே...!"

40. **அவள்:** என் வீட்டுக்காரருக்கு எல்லாத்துக்கும் எகத்தாளம்.
அவள்: என் வீட்டுக்காரருக்கு எல்லாத்துக்கும் எகத்தாளம்.
சப்பாத்தி போட்டா பிடிக்கல.. இட்லி போட்டா பிடிக்கல.. இடியாப்பம் போட்டும் பிடிக்கல..
இவள்: அப்புறம் என்னதான் போட்ட?
அவள்: முதுகுல நாலு போடு போட்டு பட்டினி போட்டேன். இப்ப அமைதியா இருக்காரு! மவனே யார்கிட்ட டீல் காட்ற?
இவள்: "ங்ங்ங்ங்நே...!"

41. தாத்தாவும் பேத்தியும் பேசிக்கொண்டது;
நீ என் தங்கக் குட்டியாம்... தாத்தா சொல்றதைக் கேப்பியாம்... நான் உன் புத்தகப் பையைத் தூக்கிட்டு வருவேனாம்....பாப்பா நடந்து வருவியாம்.
வேண்டாம் தாத்தா... என் பையைத் தூக்கி நீ கஷ்டப்பட வேணாம். நானே என் பையைத் தூக்கிக்கிறேன். நீ என்னைத் தூக்கிக்கிட்டு வந்தாப் போதும்...

42. **இண்டர்வியூ எடுப்பவர்:** வேலைக்கு சேரும்போது மாசம் 5000 ரூபாய் சம்பளம்.
ஆறாவது மாசத்திலிருந்து சம்பளம் 8000 ரூபாய்.
சர்தார்ஜி: அப்ப நான் ஆறாவது மாசமே வேலைக்கு சேர்ந்துக்கிறேன்.

43. சர்தார்ஜி அடிக்கடி சமையலறைக்குள் நுழைவதும், சர்க்கரைப் பாட்டிலை எடுத்துப் பார்ப்பதுமாக இருந்தார்.
இதைக் கவனித்த அவரது மனைவி கேட்டார், என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?
"டாக்டர் அடிக்கடி சர்க்கரை அளவை பரிசோதித்துக் கொள்ளச் சொல்லியிருக்கிறார்."

44. நண்பர் ஒருவரிடம் தனது 50வது திருமண நாள் குறித்து சர்தார்ஜி பேசிக்கொண்டிருந்தார். நண்பர் கேட்டார்.
25வது திருமண நாளின்போது என்ன செய்தீர்கள்?
என் மனைவியை அந்தமானின் தீவிற்கு அழைத்துப் போனேன்
வரப்போகும் 50வது திருமண நாளின்போது என்ன செய்யப் போகிறீர்கள்?
அவளைத் திரும்ப அழைத்து வருவது குறித்து யோசித்துக் கொண்டிருக்கிறேன்

மனைவி: என்னை, பெண் பார்க்க வந்தன்னிக்கு, நீங்க டிபனை தொடவே இல்லையே ஏன்?

கணவன்: ரெண்டாவது "ஷாக்" எதுக்குன்னு, தான்..!

45. தரகரே... நீங்க ஒரு பெரிய விஷயத்தை மறைச்சிட்டீங்க.
என்ன சொல்றீங்க?
பெண் அஞ்சடி உயரம்னு சொன்ன நீங்க, மூணு அடி அகலம் இருப்பாள்னு சொல்லவே இல்லையே...

46. **கணவன்:** டார்லிங்! நான் இந்த மாச சம்பளத்துக்கு பதிலா 500 முத்தம் தரலாம்-னு நினைக்கிறேன். என்ன டிம தானே?
மனைவி: எனக்கொன்னும் பிரச்சினை இல்லை. நானும் அப்படியே கேபிள் காரனுக்கு 30 முத்தம், பால்காரனுக்கு 50 முத்தம், பேப்பர் காரனுக்கு 20 முத்தம், மளிகை கடைகாரனுக்கு 150 முத்தம். அவுஸ் ஓனருக்கு 250 முத்தம் கொடுத்துடுறேன் என்ன? ஓ.கே. தானே?
கணவன்: ???

47. தொலைக்காட்சி விளம்பரம் வரும் சனிக்கிழமை இரவு பத்து மணிக்கு...
உங்கள் அபிமான தொலைக்காட்சியில்...
அற்புதமான ஹாலிவுட் திரைப்படம்... தமிழில்
சிலந்தி அண்ணாச்சி (Spiderman)
உங்களின் விடுமுறை நாளை குதூகலமாக கொண்டாட ஞாயிற்றுகிழமை மதியம் 2 மணிக்கு
சூப்பர்ஹிட் ஹாலிவுட் திரைப்படம்
"அம்மாச்சி திரும்ப வந்தாச்சு" (Mummy Returns)
முற்றிலும் தமிழில்... காணத்தவறாதீர்கள்!!!

48. **கணவன்:** வொய்ஃபுக்கு(wife) அர்த்தம் தெரியுமா? வித் அவுட் இன்பர்மேஷன் ஃபைட்டிங் எவ்ரிதிங் (without information fighting everthing)
மனைவி: அதுக்கு அர்த்தம் அப்படி இல்லைங்க! வித் இடியட் ஃபார் எவர் (with idiot for ever)
கணவன்: தேவைதான்டி எனக்கு!

49. **கணவர்:** இது மாதிரி என்கிட்டே தொடர்ந்து சண்டை போட்டுக்கிட்டே இருந்தா ஒரு நாள் மிருகமா மாறிடுவேன் ஜாக்கிரதை!
மனைவி: அட நீங்க வேற எலியைப் பார்த்தெல்லாம் நான் பயப்பட மாட்டேன்!

50. பேருந்தில் பயணம் செய்த சிறுவன் ஒருவன், நடத்துனர் பயணச் சீட்டுக்குக் காசு கேட்கையில்,
தான் கொண்டு வந்த ஐந்து ரூபாய் காணவில்லை என்று அழ ஆரம்பித்தான்.
இரக்கப்பட்ட நடத்துனர்,அவன் போக வேண்டிய இடம் கேட்டு, ரூபாய் மூன்றுக்கான பயணச் சீட்டை பணம் பெற்றுக் கொள்ளாமலேயே கொடுத்து விட்டு நகர்ந்தார்.
சிறுவன் மீண்டும் அழுதான்.
நடத்துனர் காரணம் கேட்க அவன் கேட்டான்,"மீதி இரண்டு ரூபாய்....?"

51. **கணவன்:** சாமி கிட்ட என்ன... மா வேண்டிகிட்ட?

மனைவி: அடுத்த ஜென்மத்திலும் நீங்க தான் என் புருஷனா வரணும் னு வேண்டிகிட்டேன் ங்க...

நீங்க என்னங்க வேண்டிகிட்டீங்க?

கணவன்: எனக்கு அடுத்த ஜென்மமே வேணாம் னு வேண்டிகிட்டேன்...

52. மனைவி - ஏங்க, இறந்ததுக்கு அப்புறம் ஆம்பளைங்க எல்லாம் எங்க போவாங்க....

சொர்க்கத்துக்குதான்...

அப்போ, நாங்க...

அத வேற தனியா சொல்லணுமா? நரகத்துக்கு தான்...

அதுக்கப்புறம் அங்க என்னங்க ஆவும்?

அதுவா எங்களுக்கு அழகிகள் கிடைப்பாங்க உங்களுக்கு குரங்குகள் தான்...

என்ன கொடுமை பாருங்க!! உங்களுக்கு இரண்டு இடத்திலேயும் அழகிகள் கிடைக்குது. எங்களுக்கு மட்டும் இரண்டு இடத்திலேயும் குரங்குகள் தான்....

53. **நீதிபதி:** பேங்கல பணத்தைக் கொள்ளையடிச்ச சரி...போகும் போது பேங்க் மேனேஜர் வழுக்கை மண்டையில ரெண்டு கொட்டு க்கியே ஏன்?

திருடன்: பணம் மட்டுமே ஒரு மனுசனுக்கு சந்தோசத்தைக் கொடுக்காது எசமான்.

54. கரண்டி ரொம்ப_ "வெயிட்டு" என்பது, கடையில வாங்கும் போது தெரியாது!

வீட்ல "வாங்கும்" போது தான் தெரியுது என்னா அடி

55. பழுதடைந்த ஒரு லாரியை,

மற்றொரு லாரி,கயிறைக் கட்டி இழுத்துச்செல்வதை பார்த்தார்.

என்ன சார் ரொம்ப நேரமா பார்த்துட்டே இருக்கீங்க என மற்றவர் கேட்டார்.

ஒரு கயிறை கொண்டு போறதுக்கு ரெண்டு லாரியா என கூறிவிட்டு, மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தார்

56. **ரவி:** ரொம்ப நாள் கழிச்சு உன் வீட்டுக்கு வந்திருக்கேன்.வெறும் டீ மட்டும் தானா மச்சீ?

ராமு: பின்ன என்ன செய்யணும்?

ரவி: கடிக்க... ஏதாவது?

ராமு: நாய் இருக்கு... அவுத்துவிடவா?

57. **நோயாளி:** டாக்டர்! என் மனைவிக்கு 2 நாளா பேசவே முடியலை.

டாக்டர்: 2 நாள் முன்னே அவங்க என்ன சாப்பிட்டாங்கன்னு கேட்டு சொல்லுங்க. என் மனைவிக்கும் வாங்கி கொடுக்கணும்.

58. அதோ போறாரே.. அவர் ஒரு "சைல்ட் ஸ்பெஷலிஸ்ட்....!"
குழந்தைகளுக்கு நல்லா வைத்தியம் பார்ப்பாரா..?
இல்லே.. அவருக்கு 17 குழந்தைகள்..!

59. **வங்கி மேலாளர்:** மாட்டுக்கு லோன் வாங்கியிருந்தீங்க எப்படி கட்டுவீங்க?

கிராமத்தான்: கயிற்றாலே தான்

60. டாக்டர் எனக்கு தற்கொலை பண்ணிக்கணும் போல இருக்கு.
அதெல்லாம் கூடாது.. ரொம்ப தப்பு. அப்புறம் நாங்கெல்லாம் எதுக்கு

61. **நோயாளி** - பத்தடி நடந்தாலே மூச்சு வாங்குது டாக்டர்

டாக்டர்: - அப்ப ஒன்பது அடிக்கு மேல நடக்காதீங்க

62. **மருத்துவர்:** "ஆபரேஷன் முடிந்து நீங்க நடந்தே வீட்டுக்குப் போகலாம்."

நோயாளி: "ஆட்டோவுக்குக் கூடக் காசு இருக்காதா டாக்டர்?"

63. டாக்டர் கிட்டேயும் கடவுள் கிட்டேயும் வம்பு பண்ண கூடாது.. ஏன்னா..??
கடவுளுக்கு கோபம் வந்தா டாக்டர் கிட்ட அனுப்பிடுவாரு...
டாக்டருக்கு கோபம் வந்தா கடவுள் கிட்டேயே அனுப்பிடுவாரு...

64. **ஆசிரியர்:** கஞ்சன் என்ற தலைப்பில் கட்டுரை எழுது

மாணவன்: சார், பேப்பர், இங்க் எல்லாம் வேஸ்ட் ஆகிடும். நான் சொல்றேன் கேட்டுக்கோங்க

65. **அவள்:** எங்கயாவது நீ குரங்கைப் பாத்துருக்கியா?

அவன்: (தலையை குனிந்தபடி)- இல்லீயம்மா..!

அவள்: கீழே பாக்காதே-.நேரா என்னைப்பாரு

66. **டாக்டர்:** எங்க ஹாஸ்பிடல் விளம்பரத்துக்கு ஒரு பன்ச் டயலாக் சொல்லுங்க

விளம்பரதாரர்: கூட்டிட்டு வாங்க!! தூக்கிட்டு போங்க!!

67. **மனைவி:** உன்னைக் கட்டினதுக்குப் பதிலா ஒரு எருமை மாட்டைக் கட்டியிருக்கலாம்.

கணவன்: ஆனா...அதுக்கு எருமை மாடு சம்மதிக்கணுமே?

68. விவசாயிகள் போராடும் போது.. தக்காளி எல்லாம் ரோட்ல கொட்றாங்க... துப்புறவு தொழிலாளர்கள் போராடும் போது.. குப்பை எல்லாம் ரோட்ல கொட்றாங்க...

பால் வியாபாரிகள் போராடும் போது.. பாலை எல்லாம் ரோட்ல கொட்றாங்க...

ஆனா ... இந்த பேங்க் காரங்களுக்கு மட்டும் இன்னும் போராடவே தெரியல...!!!

69. ஹலோ! யார் பேசுறது?

பெண்: நான் 'செல்லம்மா' பேசறேன்...

நான் மட்டும் என்ன 'கோவமா' பேசறேன்?அட யாருன்னு சொல்லுமா.

70. **நோயாளி:** கசப்பான மருந்து கூட உங்க கையால கொடுக்கிறப்போ ஸ்வீட்டா இருக்கு..SISTER

நர்ஸ்: "கர்மம்..கர்மம்." நான் உண்மையிலேயே "ஸ்வீட்"..தான் குடுத்தேன், இன்னிக்கு எனக்கு "பர்த்டே"....

71. **நண்பன் 1 -** என்னடா உதட்டெல்லாம் காயம்?

நண்பன் 2 - ஒன்னுமில்லடா wife ஊருக்கு போறா ரயில் ஏத்திவிட்டு வந்தேன்

நண்பன் 1 - அதுக்கு.....?

நண்பன் 2 - சந்தோஷத்துல எஞ்சினுக்கு முத்தம் கொடுத்தேன் அதான்...!!

72. காதிலே ஏண்டா பேண்டேஜ் போட்டிருக்கே?

அயன் பாக்ஸ் சுட்டுடுச்சு.!

எப்படி?

டெலிபோன் பக்கத்திலே அயன் பாக்ஸ் இருந்தது.டெலிபோன் மணி அடிச்சதோட தெரியாம அயன்பாக்ஸை எடுத்து காதுல வெச்சுட்டேன்..!

இன்னோரு காதுல எதுக்கு பாண்டேஜ் போட்டிருக்கு?

இன்னோரு போன் வந்துச்சே...!

73. **தாய்:** மகனே எழுந்திருப்பா..ஸ்கூலுக்கு நேரமாச்சு..

மகன்: போம்மா..எனக்கு அந்த ஸ்கூலுக்கு போகவே பிடிக்கல்லே..

தாய்: அப்படிச் சொல்லாதே..நீ வேலைக்கு போய் சம்பாதிக்க வேண்டாமா..? சரி.. ஏன் உனக்கு அந்த பள்ளி பிடிக்கல்லே? ரெண்டு நியாயமான காரணம் சொல்லு.. நான் விட்டுடறேன்..

மகன்: 1. படிக்கற பசங்களுக்கும் என்னை பிடிக்கல..2. வாத்தியார்களுக்கும் என்னைப் பிடிக்கலே.!

தாய்: இதெல்லாம் எல்லாரும் சொல்றது தான்..சமத்தா கிளம்புடா கண்ணா..!

மகன்: நான் ஏன் பள்ளிக்கூடம் போகணும்? நீ ரெண்டு நியாயமான காரணம் சொல்லு.. நான் போறேன்..

தாய்: சனியனே..1. உனக்கு 53 வயசு ஆகுது..2. நீதாண்டா அந்த ஸ்கூல் தலைமை ஆசிரியர்..!!!!

74. தலையிலேர்ந்து அடிக்கடி முடி கொட்டுறதுக்கு முக்கிய காரணம் என்னன்னு தெரியுமா...?

தெரியலையே.... என்னது?

தலையிலே முடி இருக்கிறது தான்...!

75. செல்போனுக்கும் மனிதனுக்கும் என்ன வித்தியாசம்?
மனிதனுக்கு கால் இல்லன்னா பேலன்ஸ் பண்ண முடியாது.
செல்போனில் பேலன்ஸ் இல்லன்னா கால் பண்ண முடியாது

76. ஒருவன் 2 நீச்சல் குளங்களை கட்டினான். ஒரு குளத்தில் தண்ணீர் நிரப்பாமலே விட்டான். ஏன்னு கேட்டதற்கு...
அது நீச்சல் தெரியாதவங்களுக்காகப்பா என்றான்
மாடு போல சின்னதா இருக்கும்...! ஆனா அது மாடு இல்ல...! அது என்ன? தெரியலையா?
அது கண்ணுக் குட்டி!

77. டீக்கடைகாரர்: இப்ப போட்ட வடைதான் சார்..
மெடிக்கல் ஷாப்காரர்: பேரு தான் வேற, அதவிட இது நல்ல மருந்து சார்..
ரியல் எஸ்டேட் பிஸினஸ் மேன்: பத்தடி ஆழத்துல நல்ல தண்ணி, பக்கத்துல ரிங்ரோடு, ஐ டி பார்க் வருது சார்..
காய்கறி கடைக்காரர்: காலைல பறிச்சது/வந்தது சார்...
சேல்ஸ் ரெப்: இன்னியோட இந்த ஆஃப்பர் முடியுது சார் ..
கன்டக்டர்: வழில எங்கயும் நிக்காது சார்.. பாயின்ட் டூ பாயின்ட் சார்...
பள்ளிக்குழந்தை: வயிறு வலிக்குற மாதிரி இருக்கும்மா...
நண்பன்: கண்டிப்பா ட்ரீட் வைக்குறன்டா...
கணவன் மனைவியிடம் உன் சமையல் சூப்பரா இருக்கு
கடைசியா... உலகையையே மெய்சிலிர்க்க வைப்பது..மனைவி கணவனிடம் உங்களிடம் ஒரு வார்த்தை சொல்லிட்டு செய்யலாம்னு

78. **கணவர்**: செல்லம் சப்பாத்தி சூப்பரா செஞ்சிருக்கடி
மனைவி: ????
கணவன்: நல்லாருக்குன்னு தானே சொல்றேன்.. அதுக்கு ஏன் முறைக்கிற...??
மனைவி: அது தோசை..

79. தினமும் காலையும், மாலையும் வந்து ஸ்டேசன்ல கையெழுத்து போட்டுட்டு போகணும் தெரியுதா?

சரிங்கய்யா, அப்புறம் வழக்கம் போலத் திருடப் போகலாமில்லே ஐயா?

80. உங்க மனைவிய அடிக்கடி சினிமா பார்க்க தியேட்டருக்குக் கூட்டிக்கிட்டுப் போறீங்களே.....? அவங்க மேல அவ்வளவு பிரியமா....?

அட நீங்க ஒண்ணு.... ஒரு மூணு மணி நேரம் அவ பேசாம இருப்பாள்ல!!!

81. தம்பி உங்க பக்கத்து வீட்டு பெண் பாமாவை எங்க பையனுக்கு கேட்கலாம்னு இருக்கோம், பொண்ணு எப்பிடி?

நான் காதலிச்ச வரைக்கும் அந்த பொண்ணு நல்ல பொண்ணுதான் சார்

82. ஹீரோவுக்கும் தயாரிப்பாளருகும் என்ன வித்தியாசம்?

ஏழையா இருந்த ஹீரோ க்ளைமாக்ஸில்

கோடீஸ்வரனாகி விடுவான்,

கோடீஸ்வரனா இருந்த தயாரிப்பாளர், க்ளைமாக்ஸி'ல

ஏழையாயிடுவாரு...!

83. வரதட்சணையே வாங்கிட்டு கல்யாணம் செஞ்சது என் மனசை உறுத்திக்கிட்டே இருக்குது!

அதனால...?

வரதட்சணையே வாங்காம இன்னொரு கல்யாணம் செய்துகிட்டு பிராயச்சித்தம் செய்யப் போறேன்!

84. கடல்ல மூழ்கி தற்கொலை பண்ணிக்கப்போன பொண்ணைக் காப்பாத்தினியே, அவ இப்போ எப்படி இருக்கா?

முழுகாம இருக்கா..!!!???...

85. **DOCTOR:** கண் ஆபரேஷனுக்கு அப்புறம் உங்களுக்கு எப்படி இருக்கு?

போயும் போயும் இந்த நர்ஸையா சைட் அடிச்சோம்னு தோணுது டாக்டர்...!

86. இப்பதானே தேள் கொட்டிடுச்சினு மருந்து வாங்கிட்டுப் போனீங்க?மறுபடி வந்து இருக்கீங்களே, எதற்கு?
இப்ப மருந்து கொட்டிடுச்சி.

87. என் மனைவிக்கு தெரியாம நான் அவ பீரோவை திறந்ததை அவ பார்த்திட்டா...!!
அய்யோ...!! அப்பறம்?
"சாத்திட்டா"

88. மனைவி வாட்சப் மெசேஜில்:- ஆபீஸ்ல இருந்து வர்றப்ப காய்கறி வாங்க மறந்துடாதீங்க.
சவிதா உங்களுக்கு ஹாய் சொல்லச் சொன்னா.
கணவன்: - எந்த சவிதா?
மனைவி: - ஒரு சவிதாவும் இல்லை. மெசேஜ் படிக்கறீங்களா இல்லையான்னு செக் பண்ணிப் பாத்தேன்.
கணவன்: - நான் சவிதா கூடத்தான் இருக்கேன். நீ சொல்றது எந்த சவிதாவை?

89. **மனைவி:** - எங்க இருக்கீங்க?
கணவன்: - காய்கறி மார்க்கெட்ல.
மனைவி: - நான் வர்றேன். அங்கயே இருங்க.
பத்து நிமிசம் கழிச்சு...
மனைவி: - நான் வந்துட்டேன். நீங்க எங்க இருக்கீங்க?

90. **கணவன்:** - நான் ஆஃபீஸ்ல இருக்கேன். வந்துட்டேல்ல? வேணுங்கற காய்கறியை நீயே வாங்கிக்க.
கொய்யால யாருகிட்ட?

91. **ஆசிரியர்**: உன் பக்கத்தில தூங்கறவனை எழுப்பு
நண்பன்: நீங்க தானே தூங்க வெச்சிங்க. நீங்களே எழுப்புங்க.

92. **ஆசிரியர்:** டேய், ஏண்டா தரைல உக்காந்து கணக்கு போட்டு கிட்டு இருக்குற?

மாணவன்: நீங்க தானே சொன்னீங்க டேபிள் உபயோகிக்காம கணக்கு போடுன்னு!

93. **பையன்:** அம்மா ஸ்கூலில் இன்னக்கி ஒரு நல்ல செய்தி, ஒரு கெட்ட செய்தி நடந்துச்சிம்மா.

அம்மா: நல்ல செய்திய மொதல்ல சொல்லு.

பையன்: ஸ்கூல் தீ பிடிச்சி எறிஞ்சி போச்சிம்மா

அம்மா: கெட்ட செய்தி

பையன்: வாத்தியானுங்க எல்லாம் தப்பிச்சிட்டானுங்க

94. எதுக்கு டீச்சர் அந்த பையனை அடிக்கறீங்க?
இந்தியாவின் தேசியப் பறவை எதுன்னு கேட்டா "கொசு" ங்கிறான் !

95. **மனைவி:** ஏங்க! நீங்களாவது உங்கள் நண்பரிடம் சொல்லக் கூடாதா?

கணவன்: என்ன சொல்லனும்

மனைவி: அவருக்குப் பார்த்த பெண் நல்லாவே இல்ல!
லேட்டஸ்ட் கருத்துகள்
அனைத்து கருத்துகளையும் பார்க்க

கணவன்: நான் ஏன் சொல்லணும்? பாவிப்பயல் எனக்கு அவன் சொன்னானா?

96. **மனைவி:** என்னங்க.. அதோ அங்க உக்காந்து தண்ணியடிக்கிறாரே.. அவரு ஒரு தடவை என்னை பொண்ணு பார்க்க வந்திருந்தாரு.

கணவன்: சரி அதுக்கு என்ன இப்போ?

மனைவி: நான் அவரை கல்யாணம் பண்ணமாட்டேன்னு சொன்னதினால அதை நினைச்சே இத்தனை வருஷமா தண்ணியடிக்கிறாராம்.

கணவன்: அடப்பாவி...! அந்த சந்தோஷத்தை இத்தனை வருஷமாவா கொண்டாடிக்கிட்டிருக்கான்..?

97. **ஆசிரியர் 1:** எதுக்கு சார் அந்த பையன பெஞ்ச் மேல நிக்கவச்சு இருக்கீங்க....???

ஆசிரியர் 2: கட்டபொம்மன தூக்குல போட்ட இடம் எதுன்னு கேட்டா கழுத்துன்னு சொல்றான்

98. **பிச்சைக்காரர்:** அம்மா தாயே... பிச்சை போடுங்கம்மா.. என்னால பேச முடியாது!

வீட்டுக்காரம்மா: பக்கத்து வீட்டுல போய் கேளுப்பா... எனக்கு காது கேட்காது.

99. **பிரின்சிபல்:** ஏண்டா லேட்..?

மாணவன்: பைக் பஞ்செர் சார், அதான் லேட்

பிரின்சிபல்: பஸ்ல வரலாம்ல,

மாணவன்: பஸ்ல போகலாம்னு சொன்னா உங்க பொண்ணு கேக்கமாட்டிங்குது சார்...

பிரின்சிபல்: ?????.

100. **டாக்டர்:** நர்ஸ் அந்த நோயாளிக்கு பி பி இருக்கா?

நர்ஸ்: இல்ல

டாக்டர்: பல்ஸ் இருக்கா?

நர்ஸ்: இல்ல

டாக்டர்: சுகர் இருக்கா?

நர்ஸ்: உயிரே இல்ல, அப்றம் எப்படி இது எல்லாம் இருக்கும்?